குழந்தை உலகம்

கி. வா. ஜகந்நாதன்

குழந்தை உலகம்

(நாடோடிப் பாடல் விளக்கம்)

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்
தேனும்பேட்டை :: சென்னை—18.

உரிமை பதிவு.
அமுதம்—35
முதற் பதிப்பு, மார்ச், 1952.

விலை ரூ. 2

நாஷனல் ஆர்ட் பிரஸ்
தேனாம்பேட்டை - சென்னை-18.

சமர்ப்பணம்

என்னைச் சகோதரனாக

ஏற்றுக்கொண்டு

அன்பு பாலிக்கும் சகோதரி

ஸ்ரீமதி ஏ. கே. செல்லம்மாள்

அவர்களுக்கு

என் அன்புக் காணிக்கை

இது

முன்னுரை

காலத்தின் வாய்ப்பட்டு மடிந்தொழியும் செல்வங்கள் பல. பழங் காலத்தில் தமிழில் வழங்கிய நூல்கள் எவ்வளவோ மறைந்து போயின. ஏட்டுச் சுவடிகளில் நம் முன்னோர்கள் நூல்களை எழுதிப் பாதுகாத்தார்கள். அப்படியிருந்தும் பல அருமையான நூல்களை இழந்து விட்டோம். எழுதப் பெறாமல் வாய் மொழியாகவே வழங்கி வரும் நாடோடி இலக்கியப் பகுதிகளாகிய பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள் ஆகியவை நாளடைவில் மறைந்து வருவது வியப்பு அன்று. அவை அப்படி மறைந்து போக நாம் கையைக் கட்டி வாயை மூடிக்கொண்டிருக்கலாமா? நம்மால் இயன்ற அளவு அவற்றைப் பாதுகாத்துப் போற்றுவது நம் கடமை. அச்சு யந்திரம் வந்த பிறகு பாதுகாக்கும் வேலை எளிதாகி விட்டது. பாடல்கள் முதலியவற்றைத் தொகுத்து ஒழுங்கு படுத்தி அச்சிட்டுப் பாதுகாத்தால் மக்கள் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

நாடோடிப் பாடல்களைத் தொகுக்கும் முயற்சியைப் பல ஆண்டுகளாக மேற்கொண்டிருக்கிறேன். ஆறாயிரம் பாடல்களுக்குமேல் நான் சேர்த்திருக்கிறேன். அவற்றை அப்படி யப்படியே வெளியிடுவதைவிட முதலில் அவற்றில் தமிழன்பர்களுக்குச் சுவை உண்டாகும்படி நல்ல முறையில் விளக்கம் அமைத்துப் பாட்டையும் காட்டினால் நலமாக இருக்கும் என்ற எண்ணத்தால் **சுதேசமித்திரன்** வாரப் பதிப்பில் தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதி

வந்தேன். வேறு சில பத்திரிகைகளிலும் அவ்வப்போது தனிக் கட்டுரைகளை எழுதியதுண்டு.

இப்போது நாடோடிப் பாடல்களை விரும்பிக் கேட்கிறவர்கள் அதிகமாக இருக்கின்றனர். ரேடியோக்களில் நாடோடிப் பாடல்களைப் பாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களிலும் குழந்தைகளுக்கு அந்தப் பாடல்களைப் பயில்விக்கிறார்கள். ஆயினும் நல்ல முறையில் புத்தகங்கள் வரவில்லை. இதற்கு முன் 'நாடோடி இலக்கியம்', 'கஞ்சியிலும் இன்பம்' என்ற இரண்டு புத்தகங்களை வெளியிட்டிருக்கிறேன்; அவை நாடோடிப் பாடல்களின் விளக்கமாக உள்ளன. இது மூன்றாவது புத்தகம்.

இதில் குழந்தைகள் பிறந்து வளரும்போது தாய் மாரும் பிறரும் அவற்றை நோக்கிப் பாடும் பாடல்கள், குழந்தைகளே பாடும் பாடல்கள், அவர்கள் விளையாடுகையில் பாடும் பாடல்கள், அவர்கள் கேட்டு மகிழும் கதைகள் ஆகியவற்றையும் அவற்றின் விளக்கங்களையும் காணலாம். இனியும் இத்தகைய புத்தகங்கள் சிலவற்றை வெளியிடலாமென்று எண்ணுகிறேன்.

இப்புத்தகத்தில் இருபது கட்டுரைகள் இருக்கின்றன. இவற்றில் 'அஞ்சுவிரல் பாட்டு' என்பது ஊர்நலத்தில் வந்தது; மற்றவை யாவும் சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் வந்தவை.

நாடோடிப் பாடல்களைத் தொகுக்கும் திறத்தில் பலருடைய உதவி எனக்குக் கிடைத்திருக்கிறது. நானே பல இடங்களுக்குச் சென்று, தொழில் செய்யும் மக்களும் பிறரும் பாடும்போது கேட்டுத் தொகுத்தவை பல. எனக்காக வேறு அன்பர்கள் சிலர் நாடோடிப் பாடல்களைத்

தொகுத்து அனுப்பி வருகிறார்கள். இவர்களுள் மிக முக்கியமானவர் சகோதரி ஸ்ரீமதி ஏ. கே. செல்லம்மாள் அவர்கள். எந்த விதமான நன்றியையும் எதிர்பாராமல் நாடோடிப் பாடல்களில் உள்ள விருப்பமும் என்பாலுள்ள சகோதர அன்பும் தூண்ட, எந்த ஊருக்குச் சென்றாலும் தமக்குக் கிடைக்கும் பாடல்களைத் தொகுத்து அனுப்புவதில் அவர்களுக்குச் சலிப்பே இருப்பதில்லை. அவர்களுடைய உண்மை அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்! என் அன்பின் அறிகுறியாக இந்தப் புத்தகத்தை அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்கிறேன்.

15-3-52 கி. வா. ஜகந்நாதன்

பொருள் அடக்கம்

1.	தாலாட்டு	...	1
2.	தாய் செய்த தவம்	...	6
3.	"ஆர் அடித்தார் ?"	...	10
4.	அம்மான் பெருமை	...	14
5.	ஆடலும் பாடலும்	...	20
6-	நிலாப் பாட்டு	...	26
7.	குழந்தை உலகப் பாடல்கள்	...	31
8.	விளையாட்டுப் பாடல்கள்	...	38
9.	கல்லாங்காய் விளையாட்டு	...	42
10.	வேறு விளையாட்டுகள்	...	52
11.	வினுவிடைச் சங்கிலி	...	57
12.	அஞ்சுவிரல் பாட்டு	...	63
13.	ஸ்ரீ ஜயந்திப் பாட்டு	...	69
14.	வினுவிடைக் கதைகள்	...	74
15.	கொசுவின் பெருமை	...	79
16.	பொரியரிசியின் கதை	...	84
17.	சிறகறுந்த குருவி	...	89
18.	பூனையின் வேஷம்	...	92
19.	பொன் நங்கை	...	98
20.	சுண்டெலி ராஜன் கல்யாணம்	...	103

1. தாலாட்டு

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்று ஒரு பழமொழி தமிழ்நாட்டில் வழங்குகிறது. புறக்கணிக்காமல் போற்றி இன்புறும் இடங்களில் குழந்தை கூத்தாடும்; தெய்வ ஸாந்நித்தியம் ஏற்படும். குழந்தைகளைக் கொண்டாடுவது ஒரு கலை. குழந்தையை வளர்த்து அறிவு புகட்டப் பெண்ணுலகம் கடமைப்பட்டிருக்கிறது. பிள்ளை உள்ளம் அறிந்த பெரியவர்கள் குழந்தை வளர்ப்பைப் பற்றி எத்தனையோ நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

குழந்தையையும் தெய்வத்தையும் வசப்படுத்தப் பெரியோர்கள் கண்டுபிடித்த தந்திரங்களுள் பாட்டு ஒன்று. பக்தர்கள் எல்லாம் மனமுருகி ஆடிப் பாடி ஆண்டவனை வழிபட்டு இன்புறுகிறார்கள். தமிழ் இலக்கியத்தில் ஒரு பகுதி, இந்தப் பக்தர் குழாத்தின் உணர்ச்சி மிக்க பாடல்கள். மலரால் அருச்சனை செய்வதைக் காட்டிலும் பாட்டால் அருச்சனை செய்வதைக் கடவுள் மிகுதியாக விரும்புகிறாராம்.

கடவுள் பாட்டை விரும்புவதும் விரும்பாததும் எல்லோராலும் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயம் அல்ல. ஆனால் குழந்தை பாட்டிலே லயித்துப் போவதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம்.

"காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பார்"

என்று பாரதியார் ஒரு வடமொழிச் சுலோகத்தைத் தமிழ்ப்படுத்திச் சொல்கிறார். "காட்டு விலங்கும், கைக்

குழந்தையும் பாம்பும் பாட்டை அறிவதாவது!" என்று கேட்பவர்கள் அதிகமாக இருக்கமாட்டார்கள். காட்டு விலங்கும் பாம்பும் பாட்டை அறிந்து இன்புறுவது ஒரு கால் தெரியாவிட்டாலும் நிச்சயமாகக் கைக் குழந்தை பாட்டிலே ஈடுபட்டுத் தூங்குவதை அவர்கள் அறிவார்கள்.

வேட்டை ஆடுபவர்கள் பாட்டுப் பாடிக்கொண்டு காட்டுக்குள்ளே செல்லுகிறார்கள், அவர்கள் பாட்டிலே மயங்கிச் சில மிருகங்கள் நின்ற இடத்திலே நிற்கின்றன. இடையர்கள் காடுகளுக்கு மாட்டை ஓட்டிச் செல்லுகின்றனர்; அவர்கள் புல்லாங்குழலை ஊதுகின்றனர்; தமக்குத் தெரிந்த பாடல்களையும் பாடுகின்றனர். அந்தப் பாட்டிலே மயங்கிப் பசுக்கள் அவர்களைச் சூழ்ந்து நிற்கின்றன. பாலைக் கறக்கும் போது கூடப் பாடுவார்கள் போலும்! "ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கவேணும், பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்க வேணும்" என்ற பழமொழியிலிருந்து இந்த விஷயம் தெரிகிறது. பாம்பின் செய்தி என்ன? மகுடியின் புன்னாகவராளியிலே மயங்கிப் போய்ப் பாம்பு படமெடுத்து ஆடுவதை நம் கண்களால் எத்தனை தடவை கண்டிருக்கிறோம்!

இவ்வாறு விலங்கினங்களை மயக்கும் சங்கீதம் பல காலம் பயிற்சி செய்து வரும் சங்கீதம் அல்ல. ஆரோகண அவரோகண ஸ்வரங்கள் தெரிந்த வித்துவான்களின் பாட்டல்ல. இடையனுக்குத் தெரியும் பாட்டு எந்தப் புலவனாலும் இயற்றப்பட்டதல்ல. அது நாடோடியாகப் பரம்பரை பரம்பரையாக வந்த பாட்டு. விலங்கைக் கவரும் இயற்கையான மோகன சக்தி அதற்கு இருக்கிறது. மகுடி ஊதும் பாம்புப் பிடாரன் எந்த வித்துவானிடம் புன்னாக வராளியைக் கற்றுக்கொண்டான்? நாலணாக் காசுக்குப் பாம்பு பிடிக்கும் அவன் பாட்டுத் தலை முறை தலை முறையாக வந்தது; நாடோடியின் வாத்திய சங்கீதம்; பாம்புச் செவியைக்

குளிர்விக்கும் அமுதகானம். அவன் பாட்டில், நம்முடைய ஸ்வராவளி ஆராய்ச்சியையும் லய சோதனையையும் கொண்டு வரக் கூடாது. அவன் பாட்டுக்கு அதுவே இலக்கணம்; பாம்பு மயங்குவது பயன். வண்டிக்காரன் ராத்திரி முழுவதும் சாலை வழியே வண்டியை ஓட்டிக் கொண்டு போகிறான். அழகான தெம்மாங்கை உச்சஸ்தாயியிலே பாடிக்கொண்டு போகிறான். வண்டியும் மாடும் மறந்துபோகின்றன. சவுக்கைத் தொடுவதேயில்லை. மாடுகள் மெல்ல அசைந்து அசைந்து செல்லுகின்றன. இயற்கையே தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அந்த நள்ளிருளில் அவனது இசையைக் கேட்க யார் இருக்கிறார்கள்? வண்டியிலே பூட்டியிருக்கும் காளைகளல்லவா கேட்கின்றன? அவைகளும் உலகை மறந்து கேட்கின்றன போலும்! அவன் பாடும் பாட்டு என்ன பாட்டு? அதற்கு ராகம் வகுத்தவர் யார்? தாளம் அமைத்தவர் யார்?—அது நாடோடிப் பாட்டு; அதற்கு அவன் பாடுவதுதான் ராகம்; வண்டியின் கட கடக் கடகடக் என்ற சத்தமே தாளம்.

இந்த ஜாதியில் சேர்ந்ததுதான் கைக் குழந்தை அறிந்து இன்புறும் பாட்டு. நாடோடி இலக்கியத்திலே சேர்ந்த பாட்டு அது. அழுது சிணுங்கும் குழந்தைக்குப் பாலூட்டித் தூளியில் இட்டு நாவை அசைத்துத் தாலாட்டுப் பாடுகிறாள் தாய். அவள் பாட்டிலே மயங்கிக் குழந்தை தூங்கிப் போகிறது. என்ன மோகனமான பாட்டு! அந்தப் பாட்டின் குழைவிலே குழந்தை என்ன இன்பத்தைக் காணுகிறது! நாமும் குழந்தையாக இருந்திருக்கிறோம். தாயின் தாலாட்டிசையிலே தூங்கியிருக்கிறோம். அப்போது குழந்தையுள்ளம் என்ன கனவு காண்கிறது? என்ன இன்பத்தை அநுபவிக்கிறது?—நமக்கு நினைவில்லையே! சென்று போன பிறவிகளைப் பற்றி ஏதாவது நமக்கு நினைவிருக்கிறதா? அதுபோன்றதுதான் குழந்தைப் பருவத்து இன்பக் கனவும்.

நாம் தாலாட்டை இப்போது விழித்துக் கொண்டே அநுபவிக்கிறோம். குழந்தையைத் தாலாட்டும் தாய் பாட்டுப் பாடும்போது நாம் கேட்டு, "இது நீலாம்பரி" என்று சங்கீத அகராதி மூலமாக அதை அநுபவிக்கிறோம். தாய் சங்கீத உலகை மறந்து பாடுகிறாள்; குழந்தையோ எல்லாவற்றையும் மறந்து தூங்குகிறது.

என்ன அற்புதமான சக்தி அந்தப் பாட்டுக்கு! தமிழ் நாட்டில் பழங்காலத்தில் தாலாட்டுத் தெரியாத தாய் இருந்ததில்லை. குழந்தையைத் தூளியிலிட்டு ஆட்டும் போது அவர்கள் கை அசையும். நா அசையும். அதற்கென்று ஒரு விதமாக "லொள லொள லொள லொளாயி" என்று நாக்குப் புரளும். அப்படி நாவை அசைத்து ஆட்டிப் பாடுவதனால் அந்தப் பாட்டுக்குத் தாலாட்டு என்ற பெயர் வந்தது. தால் என்பதற்கு நாக்கு என்பது பொருள்.

தமிழ்த் தாய்மார்கள் அங்கங்கே பாடிவரும் தாலாட்டில் அருமையான கவிதைச் சுவை இருக்கும். அலங்காரங்கள் இருக்கும். குழந்தைகளை அவர்கள் எவ்வாறு உயிரினும் மேலாக நினைக்கிறார்கள் என்பது வெளிப்படும். தெய்வமாகவே வைத்துப் போற்றும் இயல்பும் தெரியவரும்.

தூங்கும் குழந்தை பாட்டைக் கேட்டு மெய்ம் மறந்து தூங்க, தூங்காமல் பாட்டிலே உள்ளத்தைச் செலுத்தும் பெரிய குழந்தைகள் அப்பாட்டின் பொருளை ஒருவாறு தெரிந்து கொள்ளும். அந்தப் பருவத்திலேயே இசை உணர்ச்சியும், தெய்வ பக்தியும் உண்டாகும் படியாகப் பல பாடல்கள் அமைந்திருக்கும்.

தாலாட்டின் ஆரம்பம், "ஆராரோ, ஆரிரரோ" என்று வரும். அதற்கே தத்துவார்த்தம் கூறுவார்கள். "இவ்வுலகில் வினைப் பயனுக்கு ஈடாக மனிதர்கள் வந்து பிறக்

கிறார்கள். தாயென்றும் தந்தையென்றும் பிள்ளை யென்றும் பெண்ணென்றும் கொண்டாடும் உறவின் முறை நிரந்தரமானதன்று. யார் யாரோ? ஒருவருக்கு ஒருவர் திட்டமாக இன்ன உறவினர் என்று சொல்வது ஒரு பிறவியில் மாத்திரம் செல்லும். எப்போதும் செல்லாது. ஆர் ஆரோ! ஆர் இராரோ! ஆர் இருப்பார்களோ!" என்று வியாக்கியானம் செய்வது உண்டு.

எப்படி ஆயினும், இந்த நாட்டின் சால்புக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ற நெறியிலே குழந்தைகளை வளர்ப்பதற்கு வழி வகுத்த பெரியார்கள், தாலாட்டுப் பாட்டு முதற் கொண்டே குழந்தையின் காதில் லக்ஷ்ய வாழ்க்கையின் செய்தி படவேண்டும் என்று நினைத்தார்கள் என்றுதான் தெரிகிறது. படித்த பெண்ணும் படிக்காத பெண்ணும் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடிக் கண் வளரச் செய்தார்கள். கூலி செய்து வயிறு வளர்க்கும் பெண்மணி தன் நிலைக்கு ஏற்றபடி மரக்கிளையிலே கிழிந்த துணியினால் தூளி கட்டிக் குழந்தையை வளர்த்திப் பாட்டுப் பாடுகிறாள். அரண்மனையிலே 'மாணிக்கம் கட்டி, வயிரம் இடைகட்டி, ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறு தொட்டி'யில் தன் குழந்தையைக் கிடத்தி அரசி தாலாட்டுப் பாடுகிறாள். அந்த இரண்டு காட்சிகளிலும் தூளியும், பொன்தொட்டிலும் குழந்தையின் தூக்கத்துக்கு அவசியம் அல்ல; அன்பு கனிந்த பெண்ணின் குரலிலே ஒலிக்கும் தாலாட்டுத்தான் அவசியம். கூலி வேலை செய்யும் பெண்ணுக்கு யார் தாலாட்டுப் பாட்டுச் சொல்லித் தந்தார்கள்? சமைக்கவும் புருஷனோடு சுகிக்கவும் பிள்ளைபெறவும் அவளுக்கு யார் சொல்லித் தந்தார்கள்? மீனுக்கு நீச்சம் வந்ததுபோல அவளுக்கு எல்லாம் வந்தன. தாலாட்டும் அப்படி வந்தது தான்.

2. தாய் செய்த தவம்

குழந்தைகளைப் பெறுவதற்குப் புண்ணியம் செய்திருக்கவேண்டுமென்று நினைப்பது இந்த நாட்டு வழக்கம். நல்ல அறிவு பெற்ற குழந்தைகளைப் பெறுவதற்குப் பல காலம் தவம் செய்திருக்க வேண்டுமென்றும், அறிவுடைய மக்களைப் பெறுவதைக் காட்டிலும் மேலான பாக்கியம் இவ்வுலகத்தில் இல்லையென்றும் தமிழர்கள் நம்பி வந்தார்கள்.

" பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற "

என்று திருவள்ளுவர் சொல்கிறார்.

குழந்தையினால் வரும் நற்கதியைப் பற்றி நாம் இப்போது கவலைப்படவேண்டாம். அவர்களால் உண்டாகும் இன்பம் எல்லாச் சாதிக்கும் எல்லா நாட்டுக்கும் பொதுவானது. இந்த நாட்டில் அந்த இன்பத்தைத் தர்ம நினைவோடு சேர்ந்து அநுபவிக்கிறார்கள். அதனால் அதன் மதிப்பு, பின்னும் பல மடங்காகப் பெருகுகிறது.

ஒரு தாய் தன் அருமைக் குழந்தையைத் தாலாட்டுகிறாள். குழந்தை பிறவாமல், தான தர்மம் செய்து, அந்த இலஞ்சியத்தைப் பெற்ற அருமை அவளுக்குத் தெரியும். குழந்தை பெற வேண்டி அவள் செய்த தவம் 'மெத்த உண்டு.' அதை அவள் குழந்தையைத் தொட்டிலில் வளரவிட்டுப் பாடும் தாலாட்டிலே சொல்கிறாள்.

குழந்தை அழுகிறது. அதைச் சமாதானப்படுத்தி, 'நீ அழுதால் எனக்குக் காரியங்கள் செய்யத் தோன்றுமோ?' என்று கூறித் தொடங்குகிறாள் தாலாட்டை.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ !
ஆரடித்து நீஅழுகுய், அஞ்சனக்கண் மைகரைய ?
மையும் கரைந்து மதிமுகம் வாடினுலே
செய்யுமொரு காரியங்கள் தோனுமோ சித்தடியே !

இந்தக் குழந்தைக்காக அவள் எவ்வளவு காலம் காத்திருந்தாள் ! “நீ இத்தனை நாள் எங்கே இருந்தாய் ?” என்று குழந்தையையே கேட்கிருள். குழந்தை பதில் சொல்கிறதாம் ! அந்தப் பதிலையும் தாயே தாலாட்டுப் பாட்டில் பாடுகிருள்.

பூங்கிளியே பூங்கிளியே
இத்தனை நாள் எங்கிருந்தாய் ?
மாசி மறைந்திருந்தேன்
மகதேவர் பின்இருந்தேன்.
மகதேவர் பின்இருந்தேன்
மாஞ்சோலைக் குள்ளிருந்தேன்.
திங்கள் மறைந்திருந்தேன்
தேவர்கள் பின்இருந்தேன்
தேவர்கள் பின்இருந்தேன்
தேடியபோ திங்குவந்தேன்.

அவள் பலபல தவம் செய்து தேடினுள். செய்த தவத்தைச் சொல்லுகிருள்.

சித்தடியே சித்தடியே-நான்
செய்ததவம் நீகேளாய்
சித்தடியே நீபிறக்க-நான்
செய்ததவம் மெத்த உண்டு
அம்புலியை வேண்டி
அரையர் தமைவேண்டிச்

இந்திரரை வேண்டிச்
சரஸ்வதியைத் தான் வேண்டித்

தவம் செய்தாளாம். தலயாத்திரை செய்து தீர்த்தங்களாடிப் பெற்ற குழந்தை அது.

சீரங்க மாடித் திருப்பாற் கடலாடி
மாமாங்க மாடி மதுரைக் கடலாடித்
தைப்பூச மாடித் தவம் பெற்று வந்தகண்ணே !

தென் பாண்டி நாட்டிலே குற்றாலமும் குமரித்துறையும் விசேஷமான இடங்கள். அந்த நாட்டுப் பெண் ஒருத்தி, தான் ஆடிய தீர்த்தங்களைச் சொல்கிறாள் :

வண்டடையுஞ் சோலை மழையடையுங் குற்றாலம்
குற்றால மாடிக் குமரித் துறையாடிப்
பால்மணக்குங் குற்றாலம் பழமணக்கும் தென்காசி
வண்டடையுஞ் சோலையிலே வந்துதித்த மாமயிலோ !
சங்கர லிங்கம் தநுக்கோடி ராமலிங்கம்
பூர்வத்து லிங்கமதைப் பூசிக்க வந்த கண்ணே !

திருச்செந்தூர் முருகக் கடவுளுக்குப் பிரார்த்தனை செய்து குழந்தை பெற்றதை ஒரு தாய் சொல்கிறாள்.

காணிக்கை நேர்ந்தேன் கைந்நிறைந்த பொன்நேர்ந்தேன்
மாணிக்கம் நேர்ந்தேன் மணிக்குழந்தை வேணுமென்று
பரத்திமகள் தெய்வானை பத்தினியாள் இங்கிருக்கக்
குறத்தி மகள் மையல்கொண்டு குறவேசம் பூண்டாரோ
வெள்ளிக் குதிரையிலே-சுப்பையா வேட்டைமுகம் போகையிலே
அள்ளிப் பணங்கொடுத்து ஆண்குழந்தை தந்தாரோ!
கந்தா குமரா உன் கடற்கரையில் தானம்பண்ணி
இந்தா குழந்தையென்று ஏந்தினார் இரண்டு கையும்.

* * *

அரசமரம் நட்டுச் சாலைகள் வைத்துச் சத்திரங் கட்டித் தவம் செய்தாள் ஒரு மாது. 'விளக்கிலிட்ட வெண்ணெயைப்போல்' அவர்கள் உருகி நிற்கையில், 'கலத்தில் இட்ட' சோற்றைப் போல அவர்கள் குழந்தைப் பசி போக்க அவன் பிறந்தானாம்.

அரசைப் பதிப்போமோ அதிகதவம் செய்வோமோ
சாலைகளை வைப்போமோ சத்திரங்கள் கட்டுவமோ
கொழுந்தைப் பதிப்போமோ கோடிதவம் செய்வோமோ !
விளக்கிலிட்ட வெண்ணெயைப்போல் வெந்துருகி நிற்கையிலே
கலத்திலிட்ட சோறதுபோல் கண்கலக்கந் தீர்த்தாயோ !

வேறு ஒருத்தி தான் செய்த வேறு தவ விரதங்களைச் சொல்கிறாள்.

ஆறிரண்டும் காவேரி அதன்நடுவே சீரங்கம்
சாமிரெண்டு கையாலே தந்தஎன்றன் திரவியமோ !
கங்கைபுனை ஸ்ரீநாதன் கருணையினால் என்வயிற்றில்
மங்களமாய் வந்துதித்த மணியேநீ கண்வளராய் !
சரியாய்த் தவந்தானம் தருமங்கள் செய்தஎங்கள்
கலிதீர்க்க வந்துதித்த காதலனே கண்வளராய் !

3. "ஆர் அடித்தார்?"

குழந்தையின் முதல் பாஷை அழுகை. உலகத்தின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் அது பிரகிருதியோடு முதல் முதலில் வாய் திறந்து பேசும் பாஷை அழுகைதான். பசித்தாலும் இசித்தாலும், அடித்தாலும் அணைத்தாலும் குழந்தையின் அழுகைதான் உணர்ச்சியின் வெளியீடாக வருகிறது.

அழும் குழந்தையின் உள்ளத்தை அறிபவர் யார்? சில சமயம் குழந்தை அழும்பொழுது தாய்க்கு அதன் பொருள் தெரிகிறது. "இந்த நேரத்திற்கு இது அழுகிறது பாலுக்குத்தான்" என்பதை அவள் உணர்கிறாள். பாலை ஊட்டுகிறாள். குழந்தையின் அழுகையைக் கேட்கும் தாய் உடனே அதற்கு வேண்டியது பால் என்று உணர்ந்து ஊட்டும் அன்பு இணையற்றது; இறைவன் திருவருளுக்குச் சமானமாகச் சொல்லக்கூடியது. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இறைவன் திருவருளை நினைக்கும்போது தாயின் 'பால் நினைந்தூட்டும்' பண்பையும் நினைத்துப் பார்க்கிறார்.

> "பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
> பரிந்து நீ பாவியே னுடைய, ஊனினை உருக்கி"

என்று இறைவனது திருவருளைப் பாராட்டுகிறார்.

பால் குடித்த பிறகும் குழந்தை அழுகிறது. அதன் உடம்பில் வலியோ சோர்வோ உண்டாகியிருக்கும். உடனே தாய் குழந்தையை அணைத்து முத்தமிட்டுத் தொட்டிலில் விடுகிறாள். குழந்தை அழுகையை நிறுத்துவதில்லை. மெல்ல ஆட்டுகிறாள். அப்பொழுதும் அழுகை ஓய்வதில்லை. தன்னுடைய வாயைத் திறந்து, "ஆராரோ

ஆரிரரோ!" என்று தாலாட்டை ஆரம்பித்துவிடுகிறாள். கை அசைகிறது; தொட்டில் அசைகிறது. தாயின் நா அசைகிறது; பாட்டு வருகிறது. அந்த மோகன கீத வலையிலே சிக்கிய குழந்தை தன்னை மறந்து தூங்கத் தொடங்குகிறது.

தாய் பாடும் தாலாட்டில் குழந்தையின் அழுகையைப் பற்றிய விசாரணை வருகிறது. விசாரணை வெறும் போலிதான். தாலாட்டுக்குப் பொருத்தமான விஷயம் வேண்டுமே! "குழந்தையை ஆர் அடித்தார்கள்?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்கிறாள் தாய்.

ஆராரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ
ஆரடித்து நீஅழுதாய் அஞ்சனக்கண் மைகரைய?
கண்ணை அடித்தாரார்? கற்பகத்தைத் தொட்டார்ஆர்?

பாட்டி அடித்திருப்பாளோ! சே சே! அவள் அடிக்க மாட்டாளே. தினந்தோறும் குழந்தைக்கு ஆசையோடு பாலூட்டுபவளாயிற்றே. அவளா அடிப்பாள்? அத்தை அடித்தாளோ? சோற்றைப் பிசைந்து நிலாக் காட்டி, ஊட்டும் அன்புடையவளாயிற்றே! அவள் தன் அமுதூட்டும் கையாலே அடிப்பாளா?—சரி, மாமன் அடித்தானோ? தனது செல்வ மருமானை மகிழ்ந்தெடுக்கும் கையா அடிக்கும்? அண்ணன்? அணைத்தெடுக்கும் கையாலே அவன் அடிக்க நியாயம் இல்லை.

பாட்டி அடித்தாளோ, பால்ஊட்டும் கையாலே?
அத்தை அடித்தாளோ, அமுதூட்டும் கையாலே?
மாமன் அடித்தானோ, மகிழ்ந்தெடுக்கும் கையாலே?
அண்ணன் அடித்தானோ, அணைந்தெடுக்கும் கையாலே?

பின்னே ஆரடித்திருப்பார்கள்? ஆராயிருந்தாலும் சொல்.

அடித்தாரைச் சொல்லியழு.
　　ஆக்கினைகள் பண்ணிவைப்போம்.
தொட்டாரைச் சொல்லியழு,
　　தோள்விலங்கு போட்டு வைப்போம்.

அடித்தவர்களைச் சும்மா விடுவாளா? என்ன என்ன தண்டனை விதிப்பாள் தெரியுமா?

அடித்தாரைச் சொல்லியழு
　　ஆக்கினைகள் பண்ணி வைப்போம்.
தொட்டாரைச் சொல்லியழு
　　தொழுவில் கடாசிவைப்போம்.
மண்ணால் விலங்குபண்ணித்
　　தண்ணீரில் போட்டுவைப்போம்.
வெண்ணெயால் விலங்குபண்ணி
　　வெய்யிலிலே போட்டுவைப்போம்.
நாக்கை அறுத்துவைப்போம்
　　நகரைவிட்டு ஓட்டிவைப்போம்.
பல்லைப் பிடுங்கிவைப்போம்
　　பட்டணத்தில் ஓட்டிவைப்போம்.
கண்ணை அடித்தார்ஆர்,
　　கண்மணியைத் தொட்டார்ஆர்?
பொன்னை அடித்தார்ஆர்,
　　பூங்கிளியைத் தொட்டார்ஆர்?

ஆரோ அடித்து விட்டார்கள். குழந்தைக்குக் கண்ணீர் பெருகுகிறது. தாய் கற்பனையினால் குழந்தையின் கண்ணீரை வெள்ளமாக வருணிக்கிறாள். கண்ணீர் ஆறாய்ப் பெருகி ஓடிக் குதிரை குளிக்கவும் வழிப்போக்கர் காலலம்பவும் சென்று மரங்களுக்குப் பாய்கிறதாம்!

ஆரடித்த கண்ணீர் ஆறாய்ப் பெருகிறதே!
　　தாயடித்த கண்ணீர் தண்ணீராய் ஓடறது.

குட்டையாய்த் தேங்கிக் குதிரை குளிச்சேறி
    வாய்க்காலாய்ப் பாய்ந்து வழிப்போக்கர் கால்அலம்பி
இஞ்சிக்குப் பாய்ந்து எலுமிச்சை வேரோடி
    நார்த்தைக்குப் பாய்ந்து நடுவே பலாப்பழுத்து
மாதுளைக்குப் பாய்ந்து மருதாணி வேரோடி
    வாழைக்குப் பாயச்சே மாறிற்றும் கண்ணீர் !

கண்ணீர் ஓடுகிறதோ இல்லையோ, அதைப் பற்றிய தாலாட்டுப் பாட்டு ஓடிப் பாய்ந்து, குழந்தை குறட்டை விட்டுத் தூங்கும்போது நின்றுவிடுகிறது.

4. அம்மான் பெருமை

ஒரு வீட்டில் குழந்தை பிறந்ததென்றால் குழந்தையின் தாய்க்கும் தந்தைக்கும் அளவற்ற மகிழ்ச்சி உண்டு; ஆனால் அது வெளிப்படையாகத் தோற்றாது. அக்காதலர்களுடைய உள்ளத்துக்குள்ளே இன்ப ஊற்றுச் சுரந்து கொண்டிருக்கும். வீட்டிலுள்ள பாட்டனாரும் பாட்டியும் மற்றப் பெரியவர்களும் தங்கள் ஆனந்தத்தை வெளிப்படையாகவே காட்டுவார்கள். குழந்தையின் அழகையும், பேச்சையும், அங்க அடையாளங்களையும் வருணித்து வருணித்துப் பாராட்டுவார்கள்.

இந்தப் பாராட்டானது குழந்தையின் தாய் மாமன் வீட்டில் பின்னும் அதிகமாக இருக்கும். இந்த நாட்டு வழக்கப்படி குழந்தை உதயமாவதே தாய் மாமன் வீட்டில் தானே? கரு முதிர்ந்த காலத்தில் பெண்ணுக்கு வேண்டியவற்றை அளித்து மனம் கோணாமல் உடல் வாடாமல் மலரைப் போலப் பாதுகாக்கும் இயல்பை அவளுடைய பெற்றோர் படைத்திருக்கிறார்கள். அவள் கருவுயிர்க்கும் காலத்திலும் கவனித்துப் பார்ப்பார்கள். கருவுயிர்த்த பின் தாயையும் குழந்தையையும் பொன்னேபோல் போற்றுவார்கள். குழந்தை பிறந்தவுடன் முதல் மகிழ்ச்சி அந்த வீட்டினருக்குத்தான்.

தங்கள் வீட்டுப் பெண் வேறு வீட்டில் வாழ்க்கைப் பட்டு நல்ல பெயர் வாங்கி வருகிறாள் என்பதில் அவர்களுக்கு உண்டான திருப்தி அதிகம். இல்லறத்தின் பயனாக அவள் கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தி அவர்கள் காதில் ஜில்லென்று விழுந்தது. அப்பொழுது

முதலே பெண்ணின் தாய் தன் மகளுக்குவேண்டிய 'மயற் கைப்' பட்சணங்கள் செய்யத் திட்டம் போட்டுவிட்டாள். பெண்ணின் சகோதரனோ சீமந்தத்துக்குரிய சீர் வரிசைகளைச் சேகரிக்கத் தொடங்கினான். சீமந்தம், வளைகாப்பு நடந்து பெண்ணைப் பிரசவத்தின் பொருட்டு வீட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

ஒவ்வொரு நாளும் அவளுக்கு ராஜோபசாரம் நடக்கிறது. கர்ப்பமுடைய அவளை ஒரு புனிதப் பொருளாகப் பாதுகாக்கிறார்கள். தாய் பிரசவகால மருத்துவத்துக்கு வேண்டிய பொருள்களைச் சேகரிக்கிறாள். அவள் பிள்ளை தன் சகோதரிக்குப் பிறக்கும் குழந்தைக்கு வேண்டிய தொட்டிலும் கட்டிலும், காப்பும் வளையும், சதங்கையும் அரைஞாணும், சங்கும் கிலுகிலுப்பையும் வாங்குகிறான்.

குழந்தை பிறக்கிறது. "கடவுள் கிருபையால் பெரிய உயிரும் சின்ன உயிரும் பிரிந்துவிட்டன" என்ற ஆறுதல் உண்டாகிறது. தங்க விக்கிரகம் போன்ற ஆண் குழந்தையைக் கண்டு தாய் உள்ளம் பூரிக்கிறாள். பாட்டியோ ஆனந்த சாகரத்தில் நீந்தி விளையாடுகிறாள். அம்மான் தன் மருமானுக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு வந்து குவிக்கிறான்.

இப்படித் தன் பிறந்தகத்தில் தன் அருமைக் குழந்தைக்கு நடக்கும் சிறப்புக்களைக் காணும்போது தாய்க்கு எவ்வளவோ பெருமிதம் உண்டாகிறது. அந்த உணர்ச்சியை அவள் எப்படி வெளியிடுவாள்? குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும்போது அவள் உள்ளத்திலே உள்ள ஆனந்தம் பாட்டாக வருகிறது.

புக்ககத்தைப் பற்றி அவள் பாராட்டுவதில்லை. ஏதாவது பாராட்டினாலும் குழந்தையின் அருமைத் தகப்பனைப் பற்றித்தான் சொல்கிறாள். ஆனால் அம்மானைப்

பற்றி அவள் பேசும் பெருமையோ விரிந்து விரிந்து செல்கிறது.

குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டத் தொடங்குகிறாள்.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ
முத்தே பவழமே முக்கனியே சர்க்கரையே
கொத்து மருக்கொழுந்தே கோமளமே கண்வளராய்!
கண்ணே உறங்குறங்கு கண்மணியே நித்திரைசெய்
நித்திரைபோ நித்திரைபோ சித்திரப்பூந் தொட்டிலிலே
கண்ணேஎன் கண்மணியே கற்பகமே நித்திரைபோ
பொன்னே உறங்குறங்கு பூமாத்து வண்டுறங்கு
பொன்னே உறங்குறங்கு புனத்துக் கிளியுறங்கு
கண்ணுன கண்ணனுக்குக் கண்ணேறு வாராமல்
சுண்ணும்பும் மஞ்சளுமாய்ச் சுற்றியெறி கண்ணனுக்கு!
வண்ணமணித் தொட்டிலிலே வாய்த்தசெம்பொற் கட்டிலிலே
கண்ணேஎன் கண்மணியே கற்பகமே நித்திரைசெய்!

அந்தத் தொட்டிலை அவசர அவசரமாகச் செய்யச் சொல்லி ஏற்பாடு செய்தவன் யார் தெரியுமா? குழந்தையின் மாமன். அவன் உணவைக் கூட லட்சியம் செய்யாமல் தன் சின்னஞ் சிறு மருமானுக்கு வேண்டிய பொருள்களைச் சேகரிப்பதில் முனைந்து நிற்கிறான். தாய் சொல்கிறாள் :

பச்சை இலுப்பைவெட்டிப் பால்வடியத் தொட்டில்இட்டுத்
தொட்டிலிட்ட அம்மானே-நீ பட்டினியாய்ப் போகாதே !

குழந்தைக்கு ஒரு மாமன்தானா? பெரிய மாமன், சின்ன மாமன், நடு மாமன் என்று நாலைந்துபேர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு மருமானுக்கு வரிசை செய்கிறார்கள்.

ஆண்டம்மான் என்ன தந்தான் ஆனை கொடுத்துவிட்டான்
குட்டியம்மான் என்ன தந்தான் குன்றிமணித் தொட்டிலிட்டான்
செல்லம்மான் என்ன தந்தான் செம்பவழத் தொட்டிலிட்டான்
நல்லம்மான் என்ன தந்தான் நற்பவழத் தொட்டிலிட்டான்.

மற்றோர் அம்மான் குழந்தைக்குப் பால் புகட்டுவதற்காகச் சங்கு வாங்கப் போனான். உப்புக் கடலில் பிறக்கும் சங்கையா இந்த மருமானுக்குத் தருவது? பால் புகட்டும் சங்கு பாற்கடலிலே பிறந்ததாக இருந்தால்தான் தன் மருமானுக்குப் பெருமை என்று அங்கே சங்கெடுக்கப் போனானாம்.

பொற்சங்கால் போட்டினல் புத்தி குறையுமென்று
வெள்ளிச்சங்கால் போட்டினல் வித்தை குறையுமென்று
நடுக்கடலில் மூழ்கி நாரணனார் சங்கெடுக்கத்
திருப்பாற் கடல்மூழ்கித் திருமாலின் சங்கெடுக்கப்
பொருக்கென் றெழுந்து புறப்பட்டான் உங்களம்மான்!

அப்படிப் போனவன் சாமர்த்தியம் ஆச்சரியமானதல்லவா? அவன் கடலில் மூழ்கி எழும் சந்திரனாகவோ சூரியனாகவோதான் இருக்கவேண்டும்!

அஞ்சு கிளியெழுதி அம்மான்கள் பேரெழுதிக்
கொஞ்சு கிளியெழுதிக் கொண்டுவந்தான் ஆசாரி
கிண்ணியிலே சந்தனமும் கிளிமூக்கு வெற்றிலையும்
தங்கத் தலைப்பாவும் சாலுவையும் மேல்போட்டுச்
சங்கு கழுவித் தளிகையிலே பாலாற்றச்
சங்குகொள்ளப் போனஅம்மான் சந்திரனே சூரியனே!

தாய்க்குத் தான் புகுந்த குலத்தின் பெருமையும் நினைவுக்கு வருகிறது. தன் அருமைக் கணவன் சிறப்பை நினைவு கூர்கிறாள். ஆனால் மறுபடியும் குழந்தையின் அம்மான் புகழிலே வந்து பாட்டு நிற்கிறது

மதுரையிலே குதிரைகட்டி
வாற புலவருக்குக்
குதிரையுடன் காளாஞ்சி
கொடுப்பார்கள் பெற்றகண்ணே !
குதிரை விலைமதிக்கும்
குபேரனார் பெற்றகண்ணே !
மாடு விலைமதிக்கும்
மகராசர் பெற்றகண்ணே !
குதிரை விலைமதிக்கும்
கொற்றவனார் உங்களம்மான்
தங்கம் விலைமதிக்கும்
தாட்டியவான் உங்களம்மான்
பாட்டனார் எல்லையிலே
பட்டுவந்து விக்குதென்று
பட்டு விலைமதிக்கப்
பத்துப்பெறும் உங்களம்மான்
முப்பாட்டான் எல்லையிலே
முத்துவந்து விக்குதென்று
முத்து விலைமதிக்க
முப்பதுபெறும் உங்களம்மான்.

அம்மான் பெருமை இதோடு நிற்கவில்லை. அவனுடைய பக்தியும் பாட்டுத் திறமும் வீரமும் பிற சிறப்புக்களும் புங்கானு புங்கமாகப் புறப்படுகின்றன.

குளங்கலங்க நீர்முழுகிக் கொடிபோல நாமமிட்டு
மலைகலங்கப் பாடிவரும் மன்னர் மருமகனே !
அடிக்கரும்பை வெட்டி ஆனைக்கே தீனிபோட்டு
நுனிக்கரும்பை வில்வளைக்கும் விசையர் மருமகனே !
சாவ லடிக்குச் சமுதா டிடையிலிட்டுச்
சேவற்போர் எண்ணவரும் சமத்தர் மருமகனே !

எண்ணெய் தலைமுழுகி ஏகாந்தப் பொட்டுமிட்டு
வண்ணக்கவி பாடிவரும் மன்னர் மருமகனே!
மாறு மதுரையிலே மாடுவிற்கும் சந்தையிலே
மாட்டுவிலை கூறவந்த மந்திரியோ உங்களம்மான்!
செஞ்சட்டை தொட்டுச் சிவப்புச்சட்டை மேல்போட்டுப்
பொன்சட்டைக் காரரோ பிள்ளையுடை அம்மான்மார்!
உசந்த தலைப்பாவும் உல்லாச வல்லவாட்டும்
நிறைந்த தலைவாசலிலே நிற்பார் மருமகனே!

பெண்களுக்குப் பிறந்தகத்தின் பெருமையைச் சொல்லிக்கொள்ள எத்தனை ஆசை! தனக்குப் பிறந்த குழந்தைக்குத் தொட்டிற் பருவத்திலேயே அம்மான் புகழைப் பாடி அறிவுறுத்தும் தாய்க்கு எங்கிருந்துதான் வர்ணனை ஊரக்கிறதோ! எங்கிருந்துதான் கற்பனை வருகிறதோ! குழந்தை பாட்டுக் கேட்கும் "தொட்டிற் பழக்கத்"திலே ஊறி வளர்கிறது. தமிழ் நாட்டுக் குழந்தைகள் தாய்மாரின் தாலாட்டுப் பாட்டிலும் அம்மான்மார் மகிமையிலும் இன்பம் கண்டு தூங்குகின்றன. அந்தப் பாட்டினுள்ளே மிளிரும் அன்பையும் உணர்ச்சியையும் குழந்தைப் பிராயத்திலே நம்மால் உணர முடியாவிட்டாலும், இப்பொழுதாவது நாம் உணர்ந்து இன்பம் பெற முயல வேண்டும்.

5. ஆடலும் பாடலும்

தாலாட்டுப் பாடிக் குழந்தையைத் தூங்க வைக்கும் தாய் அது விழித்திருக்கும்போது அக்குழந்தையின் ஒவ்வொரு செயலிலும் இன்பம் கண்டு பாட்டுப் பாடுகிறாள். தலையை ஆட்டும்போது அதற்குப் பாட்டு, உடம்பை அசைக்கும்போது பாட்டு, கையை வீசப் பாட்டு, காலை ஆட்டப் பாட்டு, குதிப்பதற்கென்று பாட்டு—இப்படியாகக் குழந்தையின் ஆட்ட பாட்டங்களுக்கெல்லாம் அவள் பாட்டுப் பாடுகிறாள். பாட்டுப் பாடிக் குழந்தையைக் காலை ஆட்டச் செய்தும் தலையை அசைக்கச் செய்தும் பழக்கி வைக்கிறாள். தேகப்பயிற்சியோடு பாட்டையும் பாடவேண்டுமென்று இந்தக் காலத்து ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிறார்களே, அந்தத் தத்துவம் தமிழ்நாட்டுத் தாய்மார்களுக்கு முன்பே தெரிந்திருக்கிறது.

சின்னஞ் சிறு குழந்தையை உட்கார வைத்துத் தலையையும் முதுகையும் பிடித்து முன்னும் பின்னும் தாய் ஆட்டுகிறாள். ஆட்டும்போது பாட்டுப் பாடுகிறாள். அந்தக் குழந்தையை ஆனையென்று சொல்லிப் பாராட்டுகிறாள். அன்பின் வலிமையிலும் பாட்டின் இசையிலும் ஆட்டத்திலும் பயின்ற அந்தக் குழந்தை யானையாகி விடுமென்று அவள் நம்புகிறாள்.

ஆனை ஆனை அழகர் ஆனை
அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை
காட்டுக் கரும்பை முறிக்கும் ஆனை
காவேரித் தண்ணியைக் கலக்கும் ஆனை

செல்லக் கரும்பைப் பறிக்கும் ஆனை
தெருவெல்லாம் சுற்றி ஓடும் ஆனை
குட்டிக் கரும்பை முறிக்கும் ஆனை
எட்டித் தேங்காயைப் பறிக்கும் ஆனை
குட்டி ஆனைக்குக் கொம்பு முளைத்ததாம்
பட்டணம் எல்லாம் பறந்தோடிப் போச்சாம்!

அவள் ஆனையின் விளையாடல்களையெல்லாம் பாட்டில் வருணிக்கிறாள். குட்டியானையாக இருக்கும் போது அது கரும்பை முறிக்கிறது; எட்டித் தேங்காயைப் பறிக்கிறது. அதற்குக் கொம்பு வேறு முளைத்து விட்டால் சொல்லவேண்டுமா ?

* * *

தன் பெண்குழந்தையை மற்றொரு தாய் ஆடும்படி சொல்லுகிறாள்; பாட்டுப் பாடி ஆடச் செய்கிறாள்.

சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு
சாயக் கிளியே சாய்ந்தாடு
சோலைக் கிளியே சாய்ந்தாடு
சுந்தர மயிலே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு
கோவில் புறுவே சாய்ந்தாடு
கண்ணே மணியே சாய்ந்தாடு
கற்பகக் கொடியே சாய்ந்தாடு
திண்ணையின் கீழே தவழ்ந்து விளையாடும்
தேனே மணியே சாய்ந்தாடு!

கைகளை வீசிப் பழகினால் கை மூட்டுகளுக்கும் தோளுக்கும் பலமென்று பள்ளிக்கூடத்தில் உடற் பயிற்சியைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்கள். சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத் தாய்தான் முன் அறி குருவாக விளங்குகிறாள். வார்த்தைகளையும் பொருள்களையும்

உலகத்தையும் குழந்தைக்கு முதல்முதலாகக் காட்டுகிறவள் அவளே. குழந்தைக்குத் தேகப் பயிற்சி உபாத்தியாயராகவும் அவள் விளங்குகிறாள். கைகளை வீசவேண்டுமென்று வெறுமனே சொல்வதில்லை; பாட்டுப் பாடுகிறாள்; குழந்தை சூத்திரக் கயிற்றில் ஆடும் பொம்மை போலக் கையை வீசத் தொடங்கி விடுகிறது. அதற்கு, நாம் கையை வீசுகிறோம் என்ற ஞாபகம் இருந்தால், அது வீசாது. அந்த ஞாபகம் வராமல் இருக்கத் தாய் இனிய குரலோடும் தாளத்தோடும் பாட்டைப் பாடுகிறாள். அதன் கைவீச்சே பாட்டுக்குத் தாளமாக அமைகிறது.

கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு
சொக்காய் வாங்கலாம் கைவீசு
சொகுசாய்ப் போடலாம் கைவீசு
கோயிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு!

பாட்டின் போக்கிலே தாய் குழந்தைக்குப் புதிய பொருள்களையும் நல்ல பழக்கங்களையும் தெரியப் படுத்துகிறாள்.

இத்தகைய பாடல்கள் தமிழ் நாட்டில் ஊர்கள் தோறும் வழங்குகின்றன. அவ்வவ்விடத்திற்கேற்பப் பாடல்களில் கூடுதலும் குறைவும் மாறுதலும் இருக்கும்.

கைவீசும் பாடலில் பின் வரும் அடிகளும் அதிகமாக வெவ்வேறு ஊர்களில் வழங்குகின்றன.

முறுக்கு வாங்கலாம் கைவீசு
முடுக்காய்த் தின்னலாம் கைவீசு

லட்டு வாங்கலாம் கைவீசு
பிட்டுத் தின்னலாம் கைவீசு
பழங்கள் வாங்கலாம் கைவீசு
பரிந்து புசிக்கலாம் கைவீசு
கம்மல் வாங்கலாம் கைவீசு
காதில் போடலாம் கைவீசு
அப்பம் வாங்கலாம் கைவீசு
அமர்ந்து தின்னலாம் கைவீசு
பூந்தி வாங்கலாம் கைவீசு
பொருந்தி உண்ணலாம் கைவீசு
தேரைப் பார்க்கலாம் கைவீசு
திரும்பி வரலாம் கைவீசு.

குழந்தையின் தலையைப் பிடித்து ஆட்டும்போது அதற்குத் தலை நொந்ததாகச் சொல்லிப் பாட்டுப் பாடி ஆட்டுவது ஒரு வழக்கம்.

சின்னி தலை நொந்ததே
சின்னம்மா தலை நொந்ததே
பாபா தலை நொந்ததே
பாப்பம்மா தலை நொந்ததே !

குழந்தை குதித்து விளையாடுகிறது. தை தையென்று குதிக்கும் குழந்தையின் ஆடலுக்கு ஏற்ற பாடலைத் தாய் பாடுகிறாள்.

தை தை மாணிக்கம் தஞ்சாவூரு மாணிக்கம்
கோவில் சோறு மிஞ்சிப் பூடறது கூத்தாடி மாணிக்கம்!

குழந்தை முதல் முதலில் 'இங், இங்' என்று சப்தம் செய்கிறது. அழுகையின்றிச் செய்யும் அந்தச் சப்தமே

குழந்தை அகராதியில் முதல் வார்த்தை. அந்த வார்த்தைக்குப் பால் என்று அர்த்தம் கொள்வது தாயின் இயல்பு. 'இங்கு கேட்கிற' குழந்தையைப் பார்த்துத் தாய் பாடுகிறாள்.

இங்கு கேட்கிற சங்கு
வார்த்தை கேட்கிற வண்டு
பேச்சு கேட்கிற பூச்சி
கார்த்திகை மாதத்து நிலாவோ!

குழந்தையை இரு கையும் சேர்த்துக் கொட்டும்படி சொல்வது ஒரு விளையாட்டு. இதை இலக்கியத்தில் சப்பாணி கொட்டுதல் என்பார்கள். பிள்ளைத்தமிழ் என்ற இலக்கியவகையில் குழந்தையைச் சப்பாணி கொட்டும்படி தாய் கேட்டுப் பாடுவதாக ஒரு பகுதி உண்டு. 'சப்பாணிப் பருவம்' என்ற தலைப்பில் அந்தப் பாடல்களைக் காணலாம்.

இங்கே, உண்மை உலகத்தில், தாய் தன் சின்னப் பெண் குழந்தையைக் கைகொட்டச் சொல்கிறாள். இந்தத் தாயும் பாட்டுப் பாடித்தான் அவ்வாறு சொல்கிறாள்.

கொட்டடி கொட்டடி சின்னப்பெண்ணே
கோலவளைக் கையாலே
சேர்த்துக் கொட்டடி சின்னப்பெண்ணே
சிகப்புவளைக் கையாலே
பார்த்துக் கொட்டடி சின்னப்பெண்ணே
பச்சைவளைக் கையாலே
நீயே கொட்டடி சின்னப் பெண்ணே
நீலவளைக் கையாலே
தானே கொட்டடி சின்னப் பெண்ணே
தங்கவளைக் கையாலே.

உருண்டையாக இருக்கும் விளையாட்டு வஸ்துவைக் குழந்தைக்கு முன்னாலே ஆட்டி வேடிக்கை காட்டுவாள் தாய். அப்போது ஒரு பாட்டு வரும்.

பம்புக்கா பம்புலாலா
பம்புக்கா பம்புச்செடி
பம்புக்கா பம்புப் பழம்
பம்புக்கா பம்புக் கிச்சடி
பம்புக்கா பம்புலாலா !

தலையை வாரிப் பின்னும்போது தாய் பாட்டுப் பாடுகிறாள். பேனை அழைத்து 'இந்த மகராஜன் தலையிலே வந்திறங்கு' என்று பாடுகிறாள். குழந்தையின் கவனத்தை இழுப்பதற்காக அவள் 'பேனைப் பெருமா'ளாக்கிப் பாடுகிறாள்.

கொட்டுக் கொட்டுப் பேனே
கோடாலிப் பேனே
மத்து மத்துப் பேனே
மகராஜன் தலையில் வந்திறங்கு !

குழந்தை சோற்றால் வளர்கிறது என்று சொல்வதைக் காட்டிலும் பாட்டால் வளர்கிறது என்று சொல்லும்படி இருக்கின்றன, தமிழ் நாட்டில் வழங்கும் இத்தகைய பாடல்கள்.

6. நிலாப் பாட்டு

நிலாவைக் கண்டால் கவிஞர்களுக்குக் கொண்டாட்டம்; காதலர்களுக்குக் கொண்டாட்டம். இலக்கியங்களில் கவிஞர்கள் சந்திரனைப் படுத்தி வைக்கும் பாடு ஒன்றல்ல, இரண்டல்ல. காவியம் செய்ய வேண்டுமானால் அதில் சில வருணனைகள் அவசியம் அமைய வேண்டுமாம். சந்திரன் உதயமாகும் அழகை வருணிக்கவேண்டும். காதலனும் காதலியும் நிலாவினால் துன்புறவேண்டும். ஒருவரை ஒருவர் காணமையால் அவர்களுக்கு விரகதாபம் அதிகமாகி விடும். சந்திரன் விஷப்பிண்டமாகத் தோற்றுவான். நிலா அக்கினிப் பிழம்பாகத் தகிக்கும். சந்திரனைக் காதலனும் காதலியும் ஒரு மூச்சு வையத் தொடங்கி விடுவார்கள். இதைச் "சந்திரோபாலம்பனம்" என்று சொல்வார்கள்.

நிலாவினால் விளையும் இந்த நிகழ்ச்சிகளைக் கவி உலகத்திலேதான் காணமுடியும். உண்மையான உலகத்தில் நிலா எல்லோருக்கும் இன்பத்தை அளிக்கிறது. குழந்தைகளுக்கு அபரிமிதமான களிப்பை உண்டாக்குகிறது. கிராமங்களில் நிலாக்காலங்களில் சிறு குழந்தைகள் கூடிக் கொண்டு தெருவில் சின்னச் சின்ன மண் வீடு கட்டி விளையாடுகிறார்கள். சிற்றில் இழைத்துச் சிறுசோறு சமைத்து மண்விருந்தை வழங்குகிறார்கள். அவர்கள் விளையாட்டாக நிகழ்த்தும் அந்த நாடகத்தில் அவர்களுக்கு எல்லையில்லாத இன்பம் உண்டாகிறது. குழந்தைகளின் இயல்பை உணர்ந்து இன்புறும் உள்ளம் படைத்தவர்களுக்கும் அந்த ஆனந்தத்தில் பங்கு உண்டு.

சந்திரன் சின்னஞ்சிறு குழந்தைகளின் உள்ளத்தில் இன்பத்தைப் பாய்ச்சுகிறான். குழந்தைகளுக்கு நிலாவைக் காட்டி மகிழ்வித்தல் தாய்மார்களின் வழக்கம். பிள்ளைத் தமிழ்களில் 'அம்புலிப்பருவம்' என்ற ஒரு பகுதி உண்டு. குழந்தை அழுதால், தாய் நிலாவைக்காட்டிச் சமாதானம் செய்கிறாள். ஒரு பருக்கை கூட உண்ணாத குழந்தைக்கு நிலாவைக் காட்டியும், பாட்டுப் பாடியும் தாயானவள் சோற்றை ஊட்டி விடுகிறாள். பாலுஞ் சோற்றையும், தயிருஞ்சோற்றையும் குழந்தைக்கு நிலாவைக் காட்டி ஏமாற்றி ஊட்டிவிடுகிறாள். குழந்தையும் தண்ணிலாக் காட்சியிலும், பாட்டிலும் மயங்கிப் போகிறதென்றுதான் சொல்லவேண்டும். அதன் வயிறு நிரம்பும்படி செய்வதற்கு நிலா உறுதுணையாக உதவுகிறது.

நிலாவும் பாட்டும் குழந்தையை வளர்க்கின்றன. அதன் இளைய உள்ளத்திலே இயற்கைத் தேவியின் சௌந்தரியமும் இன்னிசையும் புகுகின்றன. மனிதன் உண்டாக்கிய வர்ணப் பொம்மைகளைக் காட்டிலும் இறைவன் உண்டாக்கிய சந்திரனென்னும் பொம்மை அதன் உள்ளத்தை வசப்படுத்துகிறது. நிலாவுக்கு மோகனசக்தி உண்டென்பதற்கு இலக்கியத்தில் ஆதாரம் தேடவேண்டாம். கண்முன்னால் நிகழும் இந்த நிகழ்ச்சியே சிறந்த உதாரணம்.

தாய் குழந்தைக்கு விளையாட்டுத் தோழனாகச் சந்திரனை அழைக்கிறாள். வெள்ளிய நிலா, வெள்ளிக்கிண்ணம், வெள்ளிய பாலுஞ்சோறு—இந்த இணைப்பில் தாய் வெள்ளிய மல்லிகைப் பூவை நினைக்கிறாள். எல்லாம் வெள்ளைமயம்! அதிலே கூடக் கலை நயம், அம்ம! தமிழ் நாட்டில் குழந்தைக்குப் பாலூட்டுகையிலே கலையையும் ஊட்டும் தாய்மார்கள் இருந்தார்கள்!—இந்தத் தாய்மரபு மாறுமல், நிலைகுலையாமல் இருக்குமா?

நிலாவைத் தன் குழந்தையோடு விளையாட ஓடிவரும்படி அழைக்கிறாள் தாய். மல்லிகைப் பூக் கொண்டுவரச் சொல்கிறாள். பாட்டுப் பாடும்பொழுதே கையை நீட்டி நிலாவைச் சுட்டிக் காட்டுகிறாள். குழந்தையும் கையை நீட்டுகிறது. நிலாவைப் பார்க்கிறது. இந்தத் தருணம் பார்த்துத் தாய் பாட்டில் பாலுஞ்சாதத்தைக் கொண்டு வந்து முடித்துக் குழந்தையின் வாயிலும் அதை ஊட்டி விடுகிறாள். என்ன சாமர்த்தியம்!

நிலா நிலா வாவா நில்லாமல் ஓடிவா
மலை மேலே ஏறி வா மல்லிகைப் பூக் கொண்டுவா
நடு வீட்டில் வையே நல்ல துதி செய்யே
வெள்ளிக் கிண்ணத்தில் பாலுஞ் சோறும் பிசைந்து
அள்ளி எடுத்து அப்பன் வாயில்
கொஞ்சிக் கொஞ்சிஊட்டு
குழந்தைக்குச் சிரிப்புக் காட்டு !

நிலாவை அழைப்பதோடு தாய் நிற்பதில்லை. காக்கையையும் குருவியையும் கிளியையும் கூட அழைக்கிறாள். எப்படியாவது போக்குக் காட்டிக் குழந்தைக்குச் சோறு ஊட்டும் தந்திரத்தைக் கற்றிருக்கிறாள் அவள். பாட்டிலே ராக விசேஷம் இல்லை. தாள நயம் மாத்திரம் அமைந்திருக்கிறது. குழந்தை அசைந்து ஆடுவதற்கு அந்தத் தாள இயல் உதவியாக இருக்கிறது.

காக்கா கண்ணுக்கு மை கொண்டு வா !
குருவி கொண்டைக்குப் பூக் கொண்டுவா !
கொக்கே குழந்தைக்குத் தேன் கொண்டு வா !
கிளியே கிண்ணத்தில் பால் கொண்டு வா !
அப்பா முன்னே வாருங்கள் அழாதே என்று சொல்லுங்கள் !

சோறு ஊட்டும்போது வேறு விதமான பாடல்களையும் தாய் பாடுகிறாள். சாதத்தைப் பற்றியே பாட்டுப் பாடுகிறாள்.

அம்ம அம்ம பூச்சி சின்னக் கிண்ணி தேச்சி
இன்னம் கொஞ்சம் சோச்சி பின்னும் கொஞ்சம் பாச்சி
எல்லாம் செரித்துப் போச்சா ? இன்னம் பெரு மூச்சா ?
நில்லு உண்ட தாச்சா நீயே பெரும் பாச்சா !

குழந்தையைத் தட்டிக் கொடுத்து, என்ன கொடுத்தாலும் தின்னும் பிள்ளை என்று ஒரு தாய் பாடுகிருள்.

தத்தாங்கி தத்தாங்கி தட்டும் பிள்ளை
தயிரும் சோறும் தின்னும் பிள்ளை
அப்பம் சுட்டாலும் தின்னும் பிள்ளை
அவல் இடித்தாலும் தின்னும் பிள்ளை !

சற்று வயசான குழந்தைகள் நிலாச்சோறு சமைக்கும்போது பாட்டுப் பாடுவார்கள். சமையல் செய்யும்போது என்ன என்ன செய்வார்களோ அவற்றையெல்லாம் வரிசையாகச் சொல்லிப் பாடி அந்தக் கற்பனை விருந்தை நடத்துவார்கள்.

அரிசியைக் குத்து முன்னே அரித்துக் கழுவு பின்னே
உலையில் அரிசி போடு உடனே மேலே மூடு
கொதித்து வந்தபின் வடித்துக் கொட்டி ஆற்றி எடுத்துக்
கத்திரிக் காயை அரிந்து காரம் புளிப்புத் தெரிந்து
உப்பும் மசாலும் போட்டு ஒத்தி ருக்கக் கூட்டு
வெந்த பின்னே தாளித்து விரித்து இலையில் அமைத்து
யாவருங் கூடிப் புசிப்போம் ! இன்ப மாக வசிப்போம் !

நிலாவைப் பார்த்துக் கேள்வி கேட்பதாகவும் அதற்கு அது விடை சொல்வதாகவும் சில பாட்டுக்கள் உண்டு. பணம் சேர்ப்பதும், மாடு வாங்குவதும், வீடு மெழுகுவதும், பிள்ளை பெறுவதும், பிள்ளையின் விளையாட்டைக் கண்டு இன்புறுவதுமாகிய காட்சிகளைப் பாட்டிலே தொடர்பு படுத்திப் பாடுவார்கள்.

நிலா நிலா எங்கே போனாய் ? மணியாங் குளத்துக்கு
மண் எடுக்கப் போனேன்.
மண் எதற்கு ? சொப்புப் பண்ண.
சொப்பு எதற்கு ? பணம் போட.
பணம் எதற்கு ? மாடு வாங்க.
மாடு எதற்கு ? சாணி போட.
சாணி எதற்கு ? வீடு மெழுக
வீடு எதற்கு ? பிள்ளை பிறக்க.
பிள்ளை எதற்கு ?
ஓலைப் பாயிலே ஓடி விளையாட
ஈச்சம் பாயிலே இருந்து விளையாட
கோரைப் பாயிலே குதித்து விளையாட
பிரப்பம் பாயிலே பெரண்டு விளையாட
தாழம் பாயிலே தவழ்ந்து விளையாட
என்னைக் குடத்திலே துள்ளி விளையாட.

வேறுவிதமான பாட்டு ஒன்று வருமாறு :—

அம்புலி அம்மானே ஆடு சித்தப்பா
சோதி பெரியவனே சுக்கல என் தம்பி
எங்கெங்கே போனாய் ? ஆத்தி பறிக்கப் போனேன்
ஆத்தி என்னத்துக்கு ? அம்பி பிறக்க
அம்பி என்னத்துக்கு ? ஆத்து மணலிலே
சேர்ந்து விளையாட.

இப்படியாக நம் கண் முன்னே நிலாவை வைத்துக் கவிதை செய்கிறார்கள் தமிழ்நாட்டுத்தாயும்குழந்தைகளும்.

7. குழந்தை உலகப் பாடல்கள்

சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத் தாளம் போடுவதில் ஆசை; தாளத்துக்கு ஏற்பக் குதிப்பதில் ஆசை. பாட்டுப் பாடுவதைக் கேட்பதில் ஆசை. முடிந்தால் சேர்ந்து பாடுவதிலும் ஆசை.

பாட்டு அதற்கு முழுவதும் விளங்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆனால் முழுவதும் குழந்தை உலகத்துக்கே புரியாதபடியும் இருக்கக்கூடாது. அங்கும் இங்கும் குழந்தைக்கு விளங்கும் விஷயங்கள் இருந்தால் போதும். சிரிக்கும்படியான விஷயமானால் அதற்கு அதிக ஊக்கம் உண்டாகும்.

குழந்தை உலகப் பாட்டுக்கள் குழந்தையுள்ளத்தை உணர்ந்து அமைத்தவை. அந்தப் பாட்டுக்களுக்குப் பதவுரை, விசேஷ உரை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. பல பாடல்களில் வெறும் சப்தம் மாத்திரம் இருக்கும். சிலவற்றில் பொருள் அடிக்கு அடி ஒட்டாமல் இருக்கும். ஆங்கிலத்தில் குழந்தைகள் பாடும் 'அர்த்தமில்லாத பாடல்கள்' (Nonsense Rhyms) எதுகை நயம், தாளம் என்ற இரண்டு அழகோடு விளங்குவதைக் காணலாம். இந்த அமைப்புடைய தமிழ்ப் பாடல்கள் கணக்கு இல்லாதன உண்டு.

* * *

குழந்தைக்குக் காசு என்றால் தெரியும். அதைப் பைக்குள் போடுவதும் தெரியும். பெண் குழந்தையானால் துட்டினால் நகை செய்து அணியலாம் என்ற நினைவு

பாவாடை கட்டும் பருவத்திலேயே வந்து விடுகிறது. அவளுக்கு ஒரு பாட்டு.

அடி பெண்ணே ராமக்கா
பையன் வரான் பார்த்துக்கோ
துட்டுத் தருவான் வாங்கிக்கோ
சுருக்குப் பையிலே போட்டுக்கோ
தட்டான் கையிலே கொடுத்துக்கோ
தாலி பண்ணிக் கட்டிக்கோ!

அகமுடையான் பெண்டாட்டி, கல்யாணம், தாலி என்ற விஷயங்கள் குழந்தை யுலக அகராதியில் கிழவிகளால் முதல் முதலில்புகுத்தப்படுவனவென்பது நமக்குத் தெரியும். யாராவது சிறு பையனும் சிறு பெண் குழந்தையும் இருந்தால், அகமுடையான் பெண்டாட்டி என்று சொல்லிப் பரிகாசம் செய்யும் வழக்கத்தை நம் நாட்டுக் கிராமத்தவர்கள் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்கத்திலிருந்து கனிந்தது இந்தப் பாட்டு.

* * *

தாளமும் ஓசையும் உடையனவாய்த் தொடர்ச்சியான பொருள் இல்லாத பாடல்கள் விளையாடும்போதும், சும்மா இருக்கும்போதும் குழந்தைகள் சொல்லுவனவாகப் பல உண்டு.

காக்கா குஞ்சுக்குக் கல்யாணம்
காசுக்கு ரெண்டு ஓட்டுமஞ்சள்
தொட்டுக் குளிச்சால் செவந்திருக்கும்
தொரையைக் கண்டால் மணமணக்கும்
மாங்கு ளத்துக்குப் போனுள்
மயில் ஆடக் கண்டாள்
அள்ளும் புள்ளும் சந்தனம்
அழகு மாலைத் தோரணம்

கொம்பு ரெண்டும் தம்பட்டம்
குதிரை மேலே ராவுத்தன்
வாழைத் தண்டை ரெண்டா வெட்டி
வடமலை அப்பனைப் பெண்ணு வெச்சுத்
தேர் மேலே ஏத்தி வெச்சு
வேடிக்கை பார்ப்பார் யார்?

பாட்டானது தாளத்தோடு வரும்போது குழந்தைகள் தம்மை அறியாமலே ஆடுகின்றன. பாட்டை முடிக்கும் போது ஒரு குறிப்பிட்ட குழந்தையின் பெயரைச் சொல்லி, "இதோ இவன்தான்" என்று முடிக்கிறது வழக்கம்.

இதேபோல வேறு ஒரு பாட்டு உண்டு. அது சிறிய பாட்டு.

காக்கா குஞ்சுக்குக் கல்யாணம்
காவடி ஆட்டம் தேரோட்டம்
நாலு கரண்டி மண்ணெண்ணெய்
நாற்பத் தெட்டுத் தீவாளி
வாரூர் போரூர் சுப்பையர்
வழியை விலக்கடி மீனாட்சி.

குழந்தை உலகம் உயிருள்ளது, கட்டுக் கிடையான தல்ல, நாள்தோறும் வளர்ந்து வருவது என்பது அவ்வுலகப் பாடல்களில் புதிய பொருள்கள் ஏறுவதனாலே தெரிய வரும். இந்தப் பாட்டில் மண்ணெண்ணெய் வந்திருக்கிறது.

வெறும் ஒலி மாத்திரம் இனிமையாக இசைந்த பாடல்களுக்குச் சில உதாரணங்கள் வருமாறு.

தங்க ரத்னம் தகரப் பெட்டி
நான் வளர்த்தது பூனைக் குட்டி.

*

ஆச்சியைப் பூச்சி கடிச்சுதாம்
காசுக் காசாத் தடிச்சுதாம்

*

கதை கதைத்ததாம் கத்திரி பூத்ததாம்
எலி சிரித்ததாம் பூனை பெண்டாட்டிக்கு அழுததாம்!

*

பாக்கு பாக்கு பழையம் பாக்கு
தேக்கு தேக்கு தென்னந் தேக்கு
வெட்டிப் பாத்தா சொத்தைப் பாக்கு.

*

ஜிட்டான் ஜிட்டான் குருவி ஜிணுக்கிச்சான்—அந்த
ஜீவ ரத்னப் பொண்ணு மேலே கணக்குத்தான்!

*

கள்ளுக் குடிச்ச வெறியிலே
கண்ணு ரெண்டும் தெரியலே
நேத்த டிச்ச ஜுரத்திலே
எப்படி ஏறுவே மரத்திலே?

*

வெத்தலைக் கட்டு விரியக் கட்டு
தோட்டத்துக் காரனைப் புடிச்சுக் கட்டு.

*

அதோ பாரு மைனு
ஆசு பத்திரிக் கொப்னு
எங் கப்பன் நயினு
நான் போறேன் சைனு.

*

தவளைகளாம் தவளைகளாம்
திண்டி வனத்துத் தவளைகளாம்
காஞ்சீ புரத்துத் தவளைகளாம்
தவளை ரெண்டுங் கூடிக் கிச்சாம்
தாலி ஒண்ணும் கட்டிக் கிச்சாம்
டம் டம் டம் டம்!

இது தவளைக்குக் கல்யாணம் நடந்தது போலச் சொல்லும் பாட்டு. குழந்தைக்குக் கல்யாணம் என்றால் ஒருவகைக் குதூகலம் உண்டாகும்படி செய்திருக்கிறார்கள் இந்த நாட்டில். அதனால்தான் குழந்தைப் பாட்டுக்களில் காக்காய் கல்யாணம், குருவி கல்யாணம், தவளை கல்யாணம் எல்லாம் வருகின்றன. இன்னும் கல்யாணங்கள் வரும் பாட்டுக்கள் சில வருமாறு:

ஆட்டுக் குட்டியின் கல்யாணம்

மொட்டைத் தலைக்கொரு பட்டுக் குல்லா
மூளிக் காதுக்கொரு தென்னோலை
ஆட்டுக் குட்டிக்குக் கல்யாணம்
அழைத்து வாடி மொட்டையக்கா !

பாப்பாத்தி கல்யாணம்

குழந்தைகள் பந்தாடும்பொழுது பாடும் பாட்டு இது.

ஓரடி இரண்டடி
    மாணிக்கம் முத்தாடி
ஜிமுக்கி சித்தாடை
    பாப்பாரத் தெருவிலே
        பாப்பாத்திக்குக் கல்யாணம்.

அம்மாப் பெண் கல்யாணம்

அம்மாப் பெண்ணுக்குக் கல்யாணம்
அவாளவாள் ஆத்துலே சாப்பாடு
கொட்டு மேளம் கோவிலிலே
பாக்கு வெத்தலை கடையிலே
பூ சந்தனம் பண்டாரம் வீட்டிலே
அம்மாப் பெண்ணுக்குக் கல்யாணம்!

எப்பொழுது கல்யாணம் ?

தும்பி துளசி
　　தூக்கிப் போட்ட மம்முட்டி
கத்திரிக்காய் சுட்டு
　　காசுக்கு ரெண்டு
அந்திச் சோறு முந்திப் போச்சு
கொக்குக்கும் குருவிக்கும்
கோபால சாமிக்கும்
　　எப்போ கல்யாணம்?
நாளைக்குக் கல்யாணம்.
புதை புதைக்கிற செட்டிக்குப்
பொறக்க மாசம் கல்யாணம்
அப்படியாக் கொந்த செட்டிக்கு
ஆவணி மாசம் கல்யாணம்
இப்படியாக் கொந்த செட்டிக்கு
இந்த மாசம் கல்யாணம்!

தவளையின் வாழ்க்கை

பச்சைத் தவக்களை பச்சைத் தவக்களை
எத்தினியா நெல்லுக்கு வாழ்க்கைப்பட்டே?
ஒரா நெல்லுக்கு வாழ்க்கைப்பட்டேன்
ஒரா நெல்லு குத்தி எடுக்க
இடைச் சிறுக்கியைக் காணுமே
ஒரே நெல்லுக் குத்தி எடுத்து
ஒன்பது பேருக்கு ஆக்கிப் போட்டேன்!

உலகத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் கல்யாணம் செய்து கொண்டு வாழ்கின்றதாகப் பாட்டுப் பாடும் குழந்தைக்குத் தானும் கல்யாணம் செய்துகொண்டு பிள்ளை குட்டியோடு வாழ வேண்டுமென்று தோன்றுவது இயல்புதானே? விளையாடும்பொழுதே அகமுடை

யான் பெண்டாட்டி விளையாட்டில் அந்த எண்ணம் உருப் பெறுகிறது. மரப்பாச்சியைக் குழந்தையாகப் பாவித்து அதைச் சீராட்டித் தாலாட்டிக் கொஞ்சும்போது குழந் தைக்கு உள்ள ஆசை வெளிப்படுகிறது. பெரிய வர்கள், குழந்தைகள் எதிர்கால வாழ்க்கையில் என்ன வேலை செய்தாலும், எந்தப் பதவியை அடைந்தாலும், கல்வி கற்றாலும், செல்வம் ஈட்டினாலும், கல்யாணம் செய்து கொண்டு பிள்ளை குட்டிகளுடன் வாழ்வதை மாத்திரம் முன்னாலே நினைப்பூட்டுகிறார்கள். மனித வாழ்க்கையில் எல்லோருக்கும் பொதுவான காரியம் இது. கல்வி, செல்வம், உத்தியோகம் என்பவை ஒவ்வொருவ னுக்கும் வேறு வேறு விதமாக அமைகின்றன. அன்றியும் குடும்ப பாரத்தைக் கண்டு அஞ்சாமல் இருக்க இளம் பிராயத்திலிருந்தே அந்த நினைவை ஊட்டி அதில் ஒரு கௌரவ புத்தி உண்டாகும்படியாகச் செய்ய வேண்டு மென்று நினைத்திருக்கக் கூடும். ஆதலால் அவர்கள் குழந்தைகளுக்கு வாழ்க்கையின் சாரமாகப் போதிக்கும் பின்வரும் பாட்டு அந்த நினைப்புக்கு ஏற்றதாகவே அமைந்திருக்கிறது.

அத்தைமகள் உத்தமியைக் கொள்ளவே வேணும்
அழகான சிறுதாலி கட்டவே வேணும்
கடவுளைப் பல நாளும் தொழவே வேணும்
கலிதீரப் பிள்ளையைப் பெறவே வேணும்
குலம்விளங்கக் கிருஷ்ணாவென்று அழைக்கவே வேணும்
குதலைச்சொல் கேட்டுமிக மகிழவே வேணும்
வருத்தம்நோய் இல்லாமல் வளரவே வேணும்
வாழையடி வாழையாய் வாழவே வேணும் !

8. விளையாட்டுப் பாடல்கள்

குழந்தைகளுக்கு விளையாட்டென்றால் எத்தனை ஆசையென்பதை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. குழந்தைகள் விளையாட்டிலே காட்டும் உற்சாகத்தைத் தெரிந்து அவர்களின் மன இயல்லைக் கண்டறிந்து, குழந்தைக் கல்வியை விளையாட்டாகவே போதிக்க வேண்டும் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்.

சின்னஞ் சிறு குருவிபோலே திரிந்து வரும் குழந்தைகளை ஒன்று சேர்த்து விளையாடச் செய்து வேடிக்கை பார்க்கும் இயல்பு எல்லா நாட்டுக்கும் பொதுவானது. தமிழ்நாட்டுப் பாட்டிமார் அதில் தனியான சிரத்தை கொண்டு விளையாட்டை நடத்தி வைக்கும் தலைவியர்களாக இருப்பார்கள். விளையாட்டுக்கு ஏற்ற பாடல்களைப் பாடுவார்கள். குழந்தைகளுக்கு ஆடலும் பாடலும் கற்றுக் கொடுப்பார்கள். ஆட்டமும் பாட்டும் ஒன்றோடொன்று கலந்து நிற்கும். விளையாட்டின் கட்டங்களை, பாட்டு அவ்வப்போது சுட்டி வரும்.

இவ்வாறு ஆடும் விளையாட்டுக்களை இக்காலத்துக் குழந்தைகள் மறந்துவிட்டார்கள். மழலை மொழி பேசும் குழந்தைகளுக்கு ஏற்ற விளையாட்டுக்களும் ஓடியாடும் குழந்தைகளுக்குத் தக்க விளையாட்டுக்களும் தனித் தனியே இருக்கின்றன. வீட்டில் அமர்ந்தபடியே பெண் குழந்தைகள் விளையாடும் ஆட்டங்கள் பல உண்டு. குதித்து மூச்சடக்கி நொண்டியாடிப் பலத்தை வளர்க்கும்படி ஆடும் ஆண் பிள்ளை விளையாட்டுக்கள் வேறு தனியே உள்ளன.

இத்தகைய விளையாட்டுக்களுக்கு உரிய பாடல்கள் பரம்பரையாகத் தமிழ் நாட்டில் வழங்கி வருகின்றன. அவற்றில் தொடர்ச்சியாகப் பொருள் அமையாவிட்டா லும் தாளக் கட்டும், குழந்தைகளின் உள்ளத்தைக் கவரத் தக்க வார்த்தைகளும் அமைந்திருக்கும்.

நாடோடிப் பாடல்களில் தொழில் செய்வார் பாடு வனவற்றிற்கு வரிப் பாட்டு என்ற பெயர் முன்பு வழங்கி வந்ததாகத் தெரிகிறது. ஆட்டமும் பாட்டும் சேர்ந்த விளையாடல்களைக் கூத்து வகைகளுள் ஒன்றாகப் பழைய காலத்தில் சேர்த்திருந்தார்கள். பல்வரிக் கூத்து என்ற கூத்து வகையில் தமிழ் நாட்டுக் குழந்தைகள் பாடி ஆடும் விளையாடல்கள் பல சேர்ந்திருக்கின்றன.

பாட்டுப் பாடிப் புளியங்கொட்டையையோ, கல்லாங் காயையோ கொந்தி விளையாடும் விளையாட்டைக் கொந்தி என்று பழங்காலத்தில் கூறி வந்தனர். பாண்டியாடுதலைப் பல்வரிக் கூத்தில் ஒன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். பாம்பாட்டியைப் போலப் பாடி விளையாடுவது ஒருவகை விளையாட்டு. கள்ளுக் குடித்தவனைப் போல நடிப்பது ஒரு கூத்து. கில்லாப் பறண்டி என்று இப்போது வழங்கும் விளையாட்டிற்கு முதலில் உண்டான பெயர் கின்னுப் பிருண்டி என்பது. அம்மானை, பந்து, கழங்கு என்பவற்றைப் பெண்கள் பாடி ஆடுவார்கள். அவற்றையும் மேலே சொன்ன பல்வரிக் கூத்தின் வகையாக வகுத்திருக்கிறார் கள். பல்லாங் குழி, தோள் வீசல் என்பனவும் அவ்வினத் தைச் சார்ந்தவையே.

இக்காலத்தில் உள்ளவர்களுக்குத் தெரியாத பல வகை விளையாடல்கள் முன் காலத்தில் வழங்கி வந்தன. சிந்து, பிழுக்கை, உடன் சந்தி, ஓர் முலை, கவுசி, குடப் பிழுக்கை, கந்தன் பாட்டு, ஆலங்காட்டாண்டி, பருமணல், நெல்லிச்சி, சூலக் கூத்து, தூண்டில் முதலிய பல பல

விளையாட்டுக்களின் பெயர்களைச் சிலப்பதிகாரத்தின் உரையில் அடியார்க்கு நல்லார் எடுத்துச் சொல்கிறார். இப்போது வழங்கும் சில விளையாட்டையும் பாடலையும் பார்க்கலாம்.

*   *   *

கண்ணை மூடி விளையாடும் விளையாட்டுக்குக் "கண்ணாமூச்சி" என்ற பெயர் வழங்குகிறது. கண்ணை மூசுவதனால் இப்பெயர் பெற்றது; மூசுதல் - மூடுதல். பிராயத்தில் பெரிய பெண் ஒருத்தி திண்ணையில் உட்கார்ந்து கொண்டு யாரேனும் ஒரு குழந்தையை அழைத்துக் கண்ணைப் பொத்துவாள். மற்றக் குழந்தைகளெல்லாம் ஓடி ஒளிந்து கொள்ளும். குழந்தையின் கண்ணைப் பொத்திய பெண் தன் இனிய குரலாலே ஒரு பாட்டுப் பாடுவாள்.

கண்ணு மூச்சி நேரேரோ
காட்டு மூச்சி நேரேரோ
உனக் கொரு பழமும் எனக்கொரு
பழமும் கொண்டோடி வா
அழுகற் பழத்தைத் தின்று விட்டு
நல்ல பழத்தைக் கொண்டோடி வா!

என்று பாடிவிட்டுப் பொத்திய கையை எடுத்துவிடுவாள். பாட்டைப் பாடி முடிப்பதற்குள்ளே மற்றக் குழந்தைகள் ஓடி ஒளிந்துகொள்வார்கள்.

கண்ணாமூச்சிக் குழந்தை ஒளிந்தவர்களைத் தேடும். யாரேனும் தென்பட்டால் அக் குழந்தையைப் பிடிக்க ஓடும். பிடிபடாமல் திண்ணையில் உட்கார்ந்திருக்கும் பெண்ணை வந்து தொட்டுவிடும் அந்தக் குழந்தை. திண்ணையில் இருக்கும் தலைவிக்குத் நாச்சி என்று பெயர், தாய்ச்சி

என்பது அப்படி மாறி வழங்குகிறது. எல்லாக் குழந்தைகளும் பிடிபடாமல் தாச்சியைத் தொட்டுவிட்டால் பழைய குழந்தையே மீண்டும் கண்ணாமூச்சி பொத்திக் கொள்ள வேண்டும். யாராவது அதன் கைக்கு அகப்பட்டுவிட்டால் அகப்பட்ட குழந்தை பொத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு விளையாட்டானது தொடர்ச்சியாக நடந்துவரும்.

இந்த விளையாட்டை ஒரு புலவர் தம்முடைய கற்பனைக்கு உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார். ஒரு பெண்ணின் கண் மிகவும் அகலமானது; காதளவு நீண்டது. அவளைக் கண்ணாமூச்சி பொத்த அழைத்த தாச்சியால் அவள் கண் முழுவதையும் பொத்த முடியவில்லை. எப்படிப் பொத்தினாலும் கடைக் கண்ணாலே பார்க்கக் கூடிய இடை வெளி இருக்கிறதாம். அதனால், விரைவிலே குழந்தைகளைப் பிடிக்கும் நிலை அந்தப் பெண்ணுக்கு அமைந்துவிடுகிறது. இதைக் கண்டு தாச்சி தரும சங்கடத்தில் மாட்டிக் கொள்கிறாளாம். இப்படி அவர் வருணித்திருக்கிறார்.

* * *

தளர் நடையிடும் பருவத்துக் குழந்தைகளுக்கு இன்பம் ஊட்டும் தென்ன மர விளையாட்டு ஒன்று உண்டு.

தாயோ, தகப்பனாரோ வேறு யாரேனும் பெரியவரோ மல்லாக்காகப் படுத்துக்கொண்டு காலை மடக்கிச் சற்றே தூக்குவார்கள். குழந்தையின் கால்களைத் தம் புறங்கால்களின் மேல் வைத்து அதன் கைகளைத் தம் கைகளால் பற்றிக் கொண்டு மெதுவாகக் காலை ஆட்டுவார்கள். குழந்தை மேலும் கீழும் எழும்பி இறங்கும். வில் கட்டியில் மேலும் கீழும் அசைவு ஏற்படுவது போல் இருப்ப

தால், குழந்தைக்கு மிக்க ஆனந்தம் உண்டாகும். அப்போது படுத்திருப்பவர் பாடுவார். ராகம் இல்லாத பாட்டு இது.

தென்ன மரத்திலே ஏருதே
தேங்காயைப் பறிக்காதே
பனை மரத்திலே ஏருதே
பனங்காயைப் பறிக்காதே
மா மரத்திலே ஏருதே
மாங்காயைப் பறிக்காதே!

இந்தக் கேள்விகளுக்குக் குழந்தை இல்லை, இல்லையென்று பதில் சொல்லும். பிறகு,

ஆற்றிலே விழுகிருயா ?
குளத்திலே விழுகிருயா ?

என்று கேட்பார். குழந்தை ஏதாவது ஒன்றைச் சொல்லும். பெரியவர் காலிலிருந்து குழந்தையை ஜிவ்வென்று மெல்லத் தூக்கி எறிந்து தரையில் வந்து நிற்கும்படி செய்வார்.

9. கல்லாங்காய் விளையாட்டு

1

அழகிய சிறுமிகள் கூடி விளையாடும் அந்தக் கூட்டத்திலே அவள் தனி அழகோடு விளங்குகிறாள். அவளுக்கு எட்டு அல்லது ஒன்பது வயசு இருக்கலாம். வளப்பமும் வனப்பும் பொருந்திய அவள் முகத்தில் ஒரு களை இலங்குகிறது. பாவாடையும் தாவணியும் அணிந்து நெற்றியில் அழகிய திலகமும் உடம்பில் ஆபரணங்களும் பூண்டு அமர்ந்திருக்கிறாள்.

அவளுக்கு நாணம் இருப்பதாகத் தோன்றவில்லை. முழுவதும் நாணமே இல்லாதவள் என்று சொல்லவும் முடியாது. சிறுமியர் கூட்டத்திடையே அவள் கலகலப்பாகப் பேசுகிறாள்; சிரிக்கிறாள்; பாடுகிறாள். ஆடவர்கள் வந்தால் எழுந்து ஓடுவதில்லை. ஆனாலும் அவ்வளவு கலகலப்பாகப் பேசுவது இல்லை. அவளுக்குத் தான் பெண் என்ற ஞாபகம் ஓரளவு வந்திருக்கிறது. ஆயினும் விளையாட்டின்மேல் உள்ள ஆசை நீங்கவில்லை.

அவளுடைய பருவத்தைப் பெதும்பைப் பருவமென்று தமிழ்ப் புலவர்கள் சொல்வார்கள். நாற்பது வயசுக்கு உட்பட்ட பெண்களின் பருவங்களை ஏழாக அவர்கள் பிரித்திருக்கிறார்கள். ஐந்து வயசு முதல் ஏழு வயசு முடியப் பேதைப் பருவம்; எட்டு முதல் பதினொன்று வரையில் பெதும்பை; பன்னிரண்டும் பதின்மூன்றும் மங்கைப் பருவம்; பதினான்கு பிராயம் முதல் பத்தொன்பது முடிய மடந்தை; இருபது முதல் இருபத்தைந்து முடிய அரிவை; இருபத்தாறு முதல் முப்பத்தொன்று முடியத் தெரிவைப் பருவம்; அதற்கு

மேல் நாற்பது ஆண்டு வரையில் பேரிளம் பெண் என்று சொல்வர்.

இந்த ஏழு வகைப் பருவ மகளிரின் இயல்புகளையும் உலா என்னும் தமிழ்ப் பிரபந்தங்களில் புலவர்கள் மிக விரிவாகப் பாடி இருக்கிறார்கள். அந்த அந்தப் பருவத்திற்கு ஏற்ற அழகு, இயல்பு, செயல் ஆகியவற்றை அப் பிரபந்தங்களிலே காணலாம். ஒவ்வொரு பருவத்திலும் பெண்கள் விளையாடும் விளையாடல்களையும் புலவர்கள் வருணித்திருக்கிறார்கள்.

மேலே சொன்ன ஏழு பருவங்களிலும் பெதும்பைப் பருவப் பெண்ணை வருணிப்பது சிரமமான காரியமாம். "பேசும் உலாவிற் பெதும்பைபுலி" என்று ஔவையார் பாடியிருக்கிறார். உலாப்பாடும் புலவர்கள் பெதும்பைப் பருவ வருணனை வந்துவிட்டால் புலியைக் கண்டவர் போலப் பயப்படுவார்களாம்! ஆனால் வருணிக்காமல் விட்டவர்களைக் காணோம்.

காம உணர்ச்சியே இல்லாத பேதையைப்போலவும் அவள் உள்ளத்தியல்பு இராது; காம வேட்கையை உடைய மங்கையின் மனப்பாங்கும் அவளிடம் இராது. இரண்டு பருவத்துக்கும் இடைப்பட்ட நிலை அவள் மனநிலை.

காளஹஸ்தி நாதர் உலாவில் ஒரு பெதும்பை வருகிறாள். சேறைக் கவிராச பிள்ளை என்ற வித்துவான் பாடியது அது. பெதும்பையின் சுபாவங்களை விரிவாக அவர் சொல்லியிருக்கிறார்.

அவள் தன் பருவத்துக்கு ஏற்ற அழகுடையவள். நன்றாக மலராமல், மலரும் பக்குவத்தில் உள்ள பேரரும்பைப் போல விளங்குகிறாள். பெண்கள் ரகசியமாக

ஏதாவது பேசிக்கொண்டிருந்தால் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுவாள். தன்னை அறியும் தறுவாயில் இருப்பவள். தாய் மையெழுதித் தலையைக் கோதிப் பின்னி முத்துமாலை பூட்டி அலங்கரித் தால், பேதையைப் போல ஓடாமல், நின்று அவற்றை ஏற்றுக்கொள்வாள்.

இத்தகைய இயல்புடைய பெதும்பையானவள் கழற் சிக்காயைப்போல உள்ள கழங்குகளை எடுத்து விளையாட லானாள். விளையாடும் போது பாட்டுப் பாடுகிறாள். ஏழு கழங்குகளை வைத்துக்கொண்டு ஆடுகிறாள். ஒன்றைக் கீழே வைத்தெடுத்துப் பிறகு இரண்டை வைத்து எடுக்கிறாள். இப்படியாக ஏழுவரைக்கும் எடுத்து விளையாடுகிறாள். ஒவ்வொன்றையும் எடுக்கும்போது அவள் பாடும் பாட்டில் ஒன்று இரண்டு மூன்று என்று ஏழுவரையில் கணக்கு வருகிறது. திருக்காளத்தி நாதருடைய புகழோடு சம்பந் தப்பட்ட செய்திகளை வைத்து அவள் பாடுகிறாள்.

அந்த ஸ்தலத்தில் கல்லால விருட்சம் சிவபிரானுக்கு நிழல் தருவது. காளஹஸ்தீசுவரருக்கு அஞ்சுகொழுந்து என்பது ஒரு பேர். கண்ணப்பநாயனார் முதலிய ஏழுபேர் அங்கே பூஜை செய்திருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் வைத்துப் பெதும்பை பாடிக் கழங்கு விளையாடுகிறாள்.

ஒன்று : உலகமெலாம் ஒடுங்கிடினும்
உயர்ந்த கல்லால் ஒன்று.
இரண்டு : அடியவர்கள் ஈடேற
அருள்செய்யும் பாதங்கள் இரண்டு.
மூன்று : மூவர் சொல்லும் தேவாரத்
தமிழ்வேதம் ஆகியவை மூன்று
நாலு : ஈசனையே போற்றிசெய்யும்
எழிலுடைய வேதங்கள் நாலு.

அஞ்சு : கல்லாலின் அடியிருக்கும்
கடவுளுக்கு முடிக்கொழுந்து அஞ்சு.
ஆறு : தேவரெலாம் நீராடச்
சேருவது பொன்முகலி ஆறு.
ஏழு : சிலந்தி முன்னே பூசிக்கச்
சேவடிபூ சித்தவர்கள் ஏழு.

இப்படி வருகின்ற ஏதோ ஒரு பாட்டைப் பாடி உற்சாகத்தோடு கழங்காடுகின்றாள். முத்துக் கழங்கும், நீலமணிக்கழங்கும், பவழக்கழங்கும், வயிரக்கழங்கும், பத்மராகக்கழங்கும், பொற்கழங்கும் மரகதக்கழங்குமாக ஏழு கழங்குகளை அவள் ஆடுவதாகப் புலவர் சொல்கிறார். புலவர் வாக்கையே பார்க்கலாம்.

மூரல் ஒளிவீசும் முத்தின் பருங்கழங்கும்
காரகை நீலக் கருங்கழங்கும்—ஆரமுதச்
சேமஇத ழைப்போற் சிவந்தபவ ழக்கழங்கும்
காமர் உதிர்வயிரக் கற்கழங்கும்—தாமமலர்க்
கைச்செம் பதுமரா கக்கழங்கும் பொற்கழங்கும்
பச்சை மயிலியலின் பைங்கழங்கும்—மெச்சஎடுத்
தொன்றென் றுலகமெலாம் ஒன்றாய் ஒடுங்கிவிடும்
அன்றுமுள கல்லால் அடிபாடி—நன்றென்று
இரண்டென் றெழிலடியார் ஈடேற நல்கும்
பரந்தஇரு பாதங்கள் பாடி—நிரந்தரமும்
மூன்றென்று மூன்று முதலிகளும் தாம்புகழும்
சான்ற சுருதித் தமிழ்பாடி—ஆன்றவொரு
நாலென்று மாசிமகம் நாடோறும் தெண்டனிடு
மூல மறையின் முடிபாடிச்—சாலவே
அஞ்சென்று கல்லால் அடியிற் கரும்பினுயர்
அஞ்சு கொழுந்தின் அடிபாடி—நெஞ்சுருகி
ஆறென்று நாளும் அமரர்புகுந் தாருடி
நீறணியும் பொன்முகரி நீர்பாடி—வீறுடனே

ஏழென்று முன்சிலந்தி எய்தொளியைப் பின்கூடி
வாழும் எழுவர் வளம்பாடிக்—கேழில்
மிசையேழும் ஆட விழியாட நாவில்
இசையேழும் ஆட இருந்தாள்.

பெதும்பைப் பருவத்துப் பெண்கள் இப்படியே கழங்கு விளையாடுவதாகவும், அப்போது தம்முடைய ஊரில் உள்ள கடவுளைத் துதித்து ஒன்று முதல் ஏழுவரையில் எண்ணிக்கை வரும்படியான பாடல்களைப் பாடுவதாகவும் வேறு புலவர்களும் பிற உலாக்களில் அமைத்திருக்கிறார்கள்.

இந்த ஆட்டமும் பாட்டும் தமிழ்நாட்டு வழக்கத்தைப் பின்பற்றி அமைத்துக்கொண்டனவே ஆகும்.

2

உலா என்னும் பிரபந்தங்களில் பெதும்பைப் பருவப் பெண் ஏழு கழங்குகளை வைத்துப் பாடி ஆடுவதாகப் புலவர்கள் சொல்லியிருக்கும் செய்திக்கு மூலம் நாடோடிப் பாடலேயாகும். தமிழ் நாட்டில் சிறுமியர் வீட்டுக்குள் இருந்து விளையாடும் விளையாட்டுக்களில் கல்லாங்காய் விளையாட்டும் ஒன்று. ஏழு கூழாங்கற்களை வைத்துக் கொண்டு அவர்கள் விளையாடுவார்கள்.

ஒன்று, இரண்டு என்று எண்ணிக்கைகள் வரும்படியான பாடல்களை இந்த விளையாட்டிலே பாடுவார்கள். ஒவ்வோரடிக்கும் பொருளிலே சம்பந்தம் இராது. ஆனாலும் ஒருவகை ஓசை நயமும் எண்களின் பெயரும் தவறாமல் பாட்டிலேயிருக்கும். ஏழுவரைக்கும் எண் தோற்றும் படியாகத் திருவெழு கூற்றிருக்கை என்ற ஒரு வகைப் பிரபந்தம் தமிழில் உண்டு.

ஒன்று இரண்டு என்று எண்களின் பெயர்கள் முழுவதும் அப்படியே பாட்டில் அமைந்திருப்பதில்லை. எண்

களை நினைப் பூட்டும் குறிப்புக்கள் சில எண்களுக்கு இருக்கும். தமிழ் நாட்டில் இந்த விளையாட்டைப் பெண் கள் அதிகமாக விளையாடுவதனால் இதற்குரிய பாடல்கள் பல வழங்கி வருகின்றன. சில உதாரணங்கள் வருமாறு:

1

ஆலைப் பொறுக்கி ஆசாரக் கள்ளி
தூக்கந் தெளிந்த தூவாடைக் காரி
பாக்கு மரத்துக்குப் பாவாடைக் காரி
வீரி இண்டெடுக்க வீசந் தண்டெடுக்க
மாதா மண்எடுக்க
முக்கோட்டு ராவணன் முத்துச் சரவணன்
நான்கு நடந்துவர நாகேந்த்ரன் தொடர்ந்துவர
ஐவர் அரைக்கும் மஞ்சள் தேவர் குளிக்குந் தண்ணீர்
ஆக்கோ ரளி வாழை அண்ணன் தம்பி பெருவாழை
ஏழண்ணன் காட்டிலே எங்களண்ணன் வீட்டிலே
மஞ்சள் சரட்டிலே
பொதை பொதை பொம்பரம் செட்டி சிதம்பரம்
கொக்கு கோலாட்டம்

2

பொறுக்கி சிறுக்கி போராளாந் தண்ணிக்கு
தண்ணிக்குடம் தலைமேலே
இரி இரிசிக்கோ பூவைப் பொறிச்சுக்கோ
பொட்டியிலே வெச்சுக்கோ
முக்கோடு தக்கோடு பாவக்காய்
முன் இல்லாத ஏலக்காய்

நான்கே நடந்துவர பாம்பே படர்ந்துவர
அஞ்சு களாக்காய் தும்பைப்பூ அதிலேஒரு ஜன்னல்
ஆக்கூரு அடிவாழை அண்ணன் தம்பி பெருவாழை
ஏழு என்னும் காட்டிலே எங்கள் அண்ணன் வீட்டிலே
மஞ்சள் சரட்டிலே
பொத பொதைக்கிற செட்டியாருக்குப்
பொறக்கிற மாசம் கல்யாணம்
ரெண்டாம் போதைக்கு ராமருக்குக் கல்யாணம்
மூணும் போதைக்கு முருகரே சாட்சி
குத்தடி விசாலாட்சி கொண்டு வந்தாள் வீறு
கஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி !

*

ஏழு காய்களை வைத்து விளையாடுவது முதலில் ஏற்பட்டாலும் நாளடைவில் எட்டு முதல் பன்னிரண்டு வரையில் காய்களை வைத்து விளையாடும் வழக்கமும் ஏற்பட்டது. அதற்கு ஏற்றபடி பாட்டுக்களும் உண்டாயின.

ஓர்இராமன் போற தேசம் என்னென்ன தேசம் ?
கல்இல்லாத் தேசம் கறடில்லாத் தேசம்
முள்இல்லாத் தேசம் முடக்கு வெட்டி ராஜா !
ஈரிரண்டு இலைசிறு தண்டு தண்டுக்குத் தண்டு
தாமரைப்பூச் செண்டு முச்சைமுனி பச்சரிசி
மூவகம் கொண்ட பருப்பரிசி தின்னநல்ல தினையரிசி
நாலை வைத்து ரெண்டெடு நாராயணன் பேர்எடு
அஞ்சவனே அம்புலிமான் பஞ்சவனே பரதேசி
ஆறவளே போறவளே அரும்பி நடந்தவளே
திரும்பிப் பார்த்தால் திட்டிவிளை
ஏழை எழுதிக்கோ எழுதின பூவைச் சூடிக்கோ

வாடா மல்லியைச் சாத்திக்கோ
வண்ணக் கழச்சி கொண்டாடிக்கோ
எட்டாசி முட்டாசி ஏகப் புரட்டாசி
ஒன்பது குத்தி உலைபோட்டு சம்பாக் குத்திச் சமைத்திறக்கு
பத்துக்குச் சித்திரை பாலோட்டம் பத்மநாப புரத்திலே தேரோட்டம்
ஆடும் சித்திரை அம்மனுக்கு அன்னக் கழச்சியும் பொன்னுலே!

★

ஓராங் கட்டை உற்ருர் தாழ
ரெண்டாங் கட்டை ரிஷப வாகனம்
மூனுங் கட்டை முத்துராஜன் பேட்டை
நாலாங் கட்டை நாக வல்லிக் கோட்டை
அஞ்சாங் கட்டை பஞ்சணை மெத்தை
ஆருங் கட்டை கூறே குச்சல்லி
ஏழாங் கட்டை எழுதின பூந்தேர்
எட்டாங் கட்டை வெட்டுங் குதிரை
ஒன்பதாங் கட்டை ஓலைப்பூ சாயப்பூ
பத்தாங் கட்டை பார்வதி பல்லாக்கு
பதினோராங் கட்டை என் கட்டை
பன்னிரண்டாங் கட்டை ஸ்வாமி கட்டை!

★

கட்டை வச்சேன் மரம் பிளந்தேன்
எரிச்சான் பண்டாரம் இலையைப் போட்டான் பண்டாரம்
சாத்தை வச்சான் பண்டாரம் சந்திலே போனுன் பண்டாரம்
முக்கண்ணா ராவணா சங்கரரே மூணு தலையும் பிரிச்சவரே
பாம்பைக் கண்டு பயந்தவரே நான்குத் தோங்கு பம்பரம்
நாங்க ளாடும் பம்பரம் சீதாதேவி பம்பரம்

ஐவிரலி பசுமஞ்சள்
அரைக்க அரைக்கப் பத்தாது
ஆக்குரு சீப்பாக்கு
அழகு களிப்பாக்கு
பாக்கோடே பழம்பாக்கு
ஏழைபெண் என்கிற ஜானகி
எங்கள்பெண் என்கிற ஜானகி
மாட்டுப்பெண் என்கிற ஜானகி
மகராஜி.
எட்டாண்டி அவன் கெட்டாண்டி
கன்னுக்குள்ளே மறைந்தாண்டி
மண்ணையும் சாம்பலையும் தின்னுண்டி
ஒம்பாலம்மா எம்பாலக்கா
ஜடலக்கா
பத்திலே வந்து முடியாதே
பாம்புக்குச் சட்டம் போடாதே!

10. வேறு விளையாட்டுகள்

கில்லாப் பறண்டி

சில குழந்தைகள் கூடிக்கொண்டு தங்களுக்குள் பெரிய குழந்தையைத் தாச்சியாக ஏற்படுத்திக்கொள்வார்கள். எல்லோரும் உட்கார்ந்து கொண்டு விளையாடுவார்கள். மழையோ வெயிலோ காரணமாக வெளியிலே ஓடி விளையாட முடியாத காலத்தில் வீட்டுக்குள் இருந்தபடியே விளையாடும் ஆட்டங்களில் "கில்லாப் பறண்டி" என்பது ஒன்று. இந்த விளையாட்டை மிகப் பழங்கால முதற் கொண்டே தமிழ்நாட்டுக் குழந்தைகள் விளையாடி வருகிறார்கள். விளையாடும்போது அபிநயம் செய்வதும் பாட்டுப் பாடுவதும் வழக்கம். இதற்குப் பழங்காலத்தில், "கிள்ளுப் பிறாண்டி" என்ற பெயர் வழங்கியது. குழந்தைகளின் புறங்கையின் மேல் தாச்சி கிள்ளுவது போலவும் பிறாண்டுவது போலவும் அபிநயிப்பதனால் இந்தப் பெயர் வந்ததென்று தோன்றுகிறது.

உட்கார்ந்த குழந்தைகள் தங்கள் கைகளைக் கீழே வைப்பார்கள். தாச்சியானவள் அவர்களுடைய புறங்கையின் மேல் தன் கைவிரல்களைக் கொண்டு வரிசையாகக் கிள்ளி எடுப்பது போலப் பாவனை செய்வாள். அப்படிச் செய்யும்போதே,

> கில்லாப் பறண்டி கிப்பறண்டி
> மாப் பறண்டி மல்லிகை மொட்டு
> உங்கப்பன் தலையில் என்ன முச்சி ?

என்று கேட்பாள்.

குழந்தைகள்,

" முறுக்கு முச்சி "

என்று சொல்லும். உடனே தாச்சி மறுபடியும் ஆரம்பிப்பாள்.

முறுக்கு முச்சி பிடிச்சவளே
முந்நாலு வாழைப்பழம் தின்னவளே
காக்காய்ப்பழம் தின்னவளே
கையை வச்சுக் காலை மடக்கு.

குழந்தைகள்,

" மாட்டேன் "

என்று ஆரவாரம் செய்யும். தாச்சி மறுபடியும் பாடுவாள்,

மாட்டேன்னு வல்லேன்னு
வல்லப் பந்தல் சொல்லேன்னு
தாறும் தாறும் வாழைக்காய்
தாளம் போலே கோபுரம்
கரூர் பிரம்மா மண்டபம்
சீதா தேவி பூமா தேவி
கையை வச்சுக் காலை மடக்கு.

இந்தத் தடவை குழந்தைகள் தாச்சியின் கட்டளைக்கு இணங்குவார்கள். தங்கள் கைகளை முதுகுப்புறமாக மடக்கிக்கொள்வார்கள். பிறகு தாச்சி ஒவ்வொரு கேள்வியாகக் கேட்பாள். குழந்தைகள் பதில் சொல்லிக் கொண்டே வரும்.

கை எங்கே ?
காக்காய் கொண்டு போச்சு.
காக்காய் எங்கே ?
புளிய மரத்திலே உட்கார்ந்திருக்கு.

புளிய மரம் எங்கே ?
வெட்டியாச்சு.
வெட்டின கட்டை எங்கே ?
அடுப்பு எரிச்சாச்சு.
அடுப்பு எரிச்ச சாம்பல் எங்கே ?
பல் தேச்சாச்சு.
பல் தேச்ச குளம் எங்கே ?
புல் முளைத்துப் போச்சு.
புல் எங்கே ?
ஆனையும் குதிரையும் மேஞ்சுடுத்து.
ஆனை எங்கே ?
அரண்மனை வாசலில் கட்டியிருக்கு.
குதிரை எங்கே ?
கோபுர வாசலில் கட்டியிருக்கு.
மானத்தைப்பார் மயிலாடுறது.
கால் வந்துடுத்து ! கை வந்துடுத்து !

இப்படிச் சொல்லி எல்லாக் குழந்தைகளும் கைகளை எடுத்து விட்டுத் தட்டி ஆரவாரிப்பார்கள்.

இந்த விளையாட்டைத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் விளையாடுகிறார்கள். சில இடங்களில் சில சிறிய வேறுபாடுகள் இருக்கும்.

மத்தாடுதல்

குழந்தைகளில் இருவர் எதிர் எதிரே நின்று தங்கள் கைகளை மாறுமாறாகப் பற்றிக்கொண்டு, பாதங்களை ஒன்றாகச் சேர்த்து வைத்து வட்டமிட்டுக் குதிப்பார்கள். ஒருவர் பாதங்களை மற்றொருவர் உதைத்திருப்பதனால் அவை சுற்றுவதற்குத் தக்க மைய ஸ்தானமாக இருக்கும். இப்படி மத்தாடும்போது பாடும் பாடல் வருமாறு :

சோளச் சோளக் காட்டிலே
    சோளம் அடிக்கிற வீட்டிலே
பந்தடி யடி மீனுளே
    பதக்குச் சோளம் நான் தாரேன்.
சின்னச் சின்ன மூக்குத்தி
    சின்னப்பன் இட்ட மூக்குத்தி
அத்தை இட்ட மூக்குத்தி
    அரைப் பணத்து மூக்குத்தி.
கல்யாண வாசலிலே
    கண்டெடுத்த மூக்குத்தி
சீமந்த வாசலிலே
    தேடி எடுத்த மூக்குத்தி.

கை குத்தல்

ஒருவர் கையைத் தாமரை மலர் போல விரித்துப் பிடிக்க மற்றொருவர் கையில் குத்துவார். குத்தும் குழந்தை 'பிடிச்சுக்கோ' என்று சொல்லும்போது மற்றக் குழந்தை கையைப் பற்றிக்கொள்ளும். குத்தும் குழந்தை "பிடிச்சுக்கோ" என்று சொல்வதைக் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தால் பிடிக்க முடியும்; இல்லாவிட்டால் ஏமாந்துபோக வேண்டியதுதான். குத்தும் போது குழந்தை சொல்வது வருமாறு :

அம்மா குத்து திம்மா குத்து
பாட்டி குத்து பேரன் குத்து
பிள்ளையார் குத்து பிடிச்சுக்கோ குத்து!

மாது குத்துதல்

மாது மாது மன்னவன் தம்பியைக்
கோது கோது கொல்லத்து வெற்றிலே

வெள்ளிக் கரண்டகம் சொல்லிக் கொடாதே
தாயைக் கொடு தம்மைக் கொடு
உற்றாரைப் பெற்றாரை ஊரைக் கொடு
குடுகுடு நாதா குளவிய நாதா
கொட்டையில் லாப்பழம் என்ன பழம் ?
வாழைப் பழம்
வாழைப் பழத்துக்குத் தோலைக் கடி
வட்டில் கஞ்சிக்கு வாயைப் பிள
பிளபிள பிளபிள !

கண்கட்டி விளையாடல்

கட்டிலும் கட்டிலும் சேர்ந்ததோ ?
சேர்ந்தது
காயாம்பூவும் பூத்ததோ ?
பூத்தது
வெட்டின கட்டையும் தளிர்த்ததோ ?
தளிர்த்தது
வேரில்லாக் கத்தரி காய்த்ததோ ?
காய்த்தது
கண்ணே இறுக்குங்கோ
இறுக்கினேன்
ரோஜாப் பூவே ரோஜாப் பூவே
மெல்ல வந்து தள்ளிப் போ !

11. வினு விடைச் சங்கிலி

குழந்தைகளின் பொழுது போக்காக வார்த்தைகளிலே எத்தனையோ விளையாட்டுக்கள் இருக்கின்றன. மேல் நாட்டில் வார்த்தைகளைக் கோத்தல் (Word Building) என்பது போல அந்த நாட்டுக்கு ஏற்ற விளையாடல்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் குழந்தைகளுக்குப் பலவகைப் பொருள்களும் அவைகளுக்கு ஏற்ற வார்த்தைகளும் அடுக்கடுக்காகச் சொல்லும் பழக்கம் வருவதற்குச் சில வகை விளையாட்டு வினு விடைகள் இருக்கின்றன. ஒரு குழந்தை ஒரு கேள்வியைக் கேட்கும். அதற்கு மற்றொரு குழந்தை விடை அளிக்கும். அந்த விடையைக் கொண்டே கேள்வி கேட்ட குழந்தை மற்றொரு கேள்வியைக் கேட்கும். மறுபடியும் விடையும் வினுவும் சங்கிலி போலத் தொடர்ந்து கொண்டே போகும். கடைசியில் ஏதாவது அழகான வார்த்தையில் கொண்டு வந்து முடிப்பார்கள்.

இந்த வினு விடையில் எவ்வளவோ ஊர்கள், மரம் செடி கொடிகள், விலங்குகள், பறவைகள், தின் பண்டங்கள் எல்லாம் வரும். வார்த்தைகளில் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இருக்குமே ஒழிய அர்த்தத்திலோ அல்லது சொல்லும் பொருள்களின் இயல்பிலோ ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் அநேகமாக இராது. இதோ ஒரு வினு விடை, 'நீ எங்கே போனுய்?' என்று ஆரம்பித்து மயிலாப்பூர், ஆறுகாடு என்னும் ஊர்களுக்குப் போய்ப் பாலாற்றைத் தாண்டிக் காட்டு மயிலையும் மர நாயையும் பார்த்துவிட்டு இலைக்கள்ளி, அதன்பால், கற்பூர வாழை, அதன் இலை, மாம் பூ, வேர்ப்பலா, வெட்டிவேர் என்னும்

தாவர உலகத்தில் புகுந்து, ரஸ கற்பூரம், வால் மிளகு வாங்கிக்கொண்டு, மிளகு ரஸத்தை ருசி பார்த்துவிட்டு, மண விருந்துக்கு ஏற்ற விருந்தாளியோடு அம்மாவிடம் வந்து நிற்கிறது.

நீ எங்கே போனாய்?	—ஊருக்குப் போனேன்
என்ன ஊர்?	—மயிலாப்பூர்
என்ன மயில்?	—காட்டு மயில்
என்ன காடு?	—ஆறுகாடு
என்ன ஆறு?	—பாலாறு
என்ன பால்?	—கள்ளிப் பால்
என்ன கள்ளி?	—இலைக் கள்ளி
என்ன இலை?	—வாழை இலை
என்ன வாழை?	—கற்பூர வாழை
என்ன கற்பூரம்?	—ரஸ கற்பூரம்
என்ன ரஸம்?	—மிளகு ரஸம்
என்ன மிளகு?	—வால் மிளகு
என்ன வால்?	—நாய் வால்
என்ன நாய்?	—மர நாய்
என்ன மரம்?	—பலா மரம்
என்ன பலா?	—வேர்ப்பலா
என்ன வேர்?	—வெட்டி வேர்
என்ன வெட்டி?	—தாளி வெட்டி
என்ன தாளி?	—விருந்தாளி
என்ன விருந்து?	—மண விருந்து
என்ன மணம்?	—பூ மணம்
என்ன பூ?	—மாம் பூ
என்ன மா?	—அம்மா!

இந்த வினா விடையினால் குழந்தைக்குச் சில புதிய விஷயங்கள் தெரிய வருகின்றன. 'என்ன பால்?' என்று கேட்கும்பொழுது குழந்தை இயல்பாக, 'பசும் பால்'

என்றுதான் பதில் சொல்லும். அதற்கு ஒரு புதிய விஷயம் தெரிய வேண்டும் என்பதற்காக, 'கள்ளிப் பால்' என்ற விடை இருக்கிறது. கள்ளியில் பால் இருக்கும் என்ற புதிய செய்தியை அது இந்த விடு விடையில் தெரிந்து கொள்கிறது.

அதற்குக் கள்ளியைத் தெரியும்; இலைக் கள்ளி என்ற பெயர் தெரியாது. வாழை தெரியும்; கற்பூர வாழை என்ற வகை தெரியாது. மிளகு தெரியும்; வால் மிளகு அதற்குப் புதிய பண்டம். நாயைப் பார்த்திருக்கிறது; மர நாய் அதன் அகராதியில் இதுவரையில் வராதது. அந்தப் புதிய பொருள்களும் வார்த்தைகளும் குழந்தைக்கு இந்த விடு விடையால் தெரிய வருகின்றன. விடுவும் விடையும் ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பதில் குழந்தைக்கு ஒரு வியப்புணர்ச்சி வேறு உண்டாகிறது.

★

மற்றொரு விடு விடை வருமாறு.

ஏது?	—கோது
என்ன கோது?	—புளிக் கோது
என்ன புளி?	—மாம் புளி
என்ன மா?	—நெல்லு மா
என்ன நெல்லு?	—சம்பா நெல்லு
என்ன சம்பா?	—முத்துச் சம்பா
என்ன முத்து?	—கொட்டை முத்து
என்ன கொட்டை?	—விதைக் கொட்டை
என்ன விதை?	—கீரை விதை
என்ன கீரை?	—அறைக் கீரை
என்ன அறை?	—பொன்னறை
என்ன பொன்?	—காக்காய்ப் பொன்
என்ன காக்காய்	—அண்டங்காக்காய்
என்ன அண்டம்?	—பிரம்மாண்டம்

என்ன பிரம்மம்	—ஜாதிப் பிரம்மம்
என்ன ஜாதி?	—துலுக்கன் ஜாதி
என்ன துலுக்கன்?	—மொட்டைத் துலுக்கன்
என்ன மொட்டை?	—கம்பளி மொட்டை
என்ன கம்பளி?	—ரோஸ் கம்பளி
என்ன ரோஸ்?	—பச்சை ரோஸ்
என்ன பச்சை?	—ரோஸ் பச்சை.

கேள்வி முடியும்போது மேலே கேள்வி கேட்பவனுக்கு அலுப்பு உண்டாகும் நிலை வருகிறது. அதாவது 'என்ன ரோஸ்' என்று மறுபடியும் கேட்டால் 'பச்சை ரோஸ்' என்ற விடை வரும். இந்த இரண்டும் மாறி மாறி வருவதில் ரஸம் இல்லை அல்லவா? ஆகவே கேட்பவன் தானே நிறுத்திக்கொள்வதற்கு இது ஒரு தந்திரம்.

★

இனி வேறு ஒரு முறையில் அமைந்த தொடர் ஒன்று வருமாறு:—

சாந்து சந்தனமாம்
சந்தனமானால் மணக்காதோ?
மணக்க மாங்காயோ?
மாங்காயானால் தொங்காதோ?
தொங்கத் தோரணமோ?
தோரணமானால் கட்டாளோ?
கட்டக் கோபுரமோ?
கோபுர மானால் கும்பிடாளோ?
கும்பிட ராஜாவோ?
ராஜாவானால் ஏவானோ?
ஏவப் பல்லியோ?
பல்லியானால் பதுங்காதோ?
பதுங்கக் கள்ளனோ?
கள்ளனானால் கலங்கானோ?

கலங்கக் காவேரியோ?
காவேரியானல் ஓடாதோ?
ஓட வெள்ளாடோ?
வெள்ளாடானல் மேயாதோ?
மேயக் கூரையோ?
கூரையானல் ஒழுகாதோ?
ஒழுகப் பானையோ?
பானையானல் உடைக்காளோ?
உடைக்கத் தேங்காயோ?
தேங்காயானல் திதிக்காதோ?
திதிக்க வெல்லமோ?
வெல்லமானல் வேண்டாமோ?

இதில் எல்லாம் சங்கிலி போலப் பின்னிய கேள்விகளாகவே இருக்கின்றன.

★

கேட்ட கேள்வியிலே மறுபடியும் வந்து முடியும் வினா விடையும் உண்டு.

ஆண்டி ஆண்டி!	
என்ன ஆண்டி?	—பொன்னுண்டி
என்ன பொன்?	—காக்காய்ப் பொன்
என்ன காக்காய்?	—அண்டங்காக்காய்
என்ன அண்டம்?	—பூ அண்டம்
என்ன பூ?	—பனம் பூ
என்ன பனை?	—தாளிப் பனை
என்ன தாளி?	—நாக தாளி
என்ன நாகம்?	—சுத்த நாகம்
என்ன சுத்தம்?	—வீட்டுச் சுத்தம்
என்ன வீடு?	—ஓட்டு வீடு
என்ன ஓடு?	—பால் ஓடு
என்ன பால்?	—நாய்ப் பால்

என்ன நாய்?	—வேட்டை நாய்
என்ன வேட்டை?	—பன்றி வேட்டை
என்ன பன்றி?	—ஊர்ப் பன்றி
என்ன ஊர்?	—கீரை ஊர்
என்ன கீரை?	—அறைக் கீரை
என்ன அறை?	—பள்ளியறை
என்ன பள்ளி?	—மடப் பள்ளி
என்ன மடம்?	—ஆண்டி மடம்
என்ன ஆண்டி?	—பொன்னாண்டி!

இது யாழ்ப்பாணத்தில் வழங்குவது. தமிழ் நாட்டிலும் சில வேறுபாடுகளுடன் வழங்குகிறது. இத்தகைய வினா விடைகள் பல அங்கங்கே குழந்தை உலகத்தில் உலவி வருகின்றன.

12. அஞ்சு விரல் பாட்டு

மனிதன் முயற்சி செய்யாவிட்டால் நடைப் பிணம் ஆகிவிடுகிறான். அவன் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த இயக்கத்தில் ஒழுங்கு வேண்டும்; நல்ல லட்சியம் வேண்டும். இந்த இரண்டும் இருந்தால் நல்ல பயன் தானே உண்டாகும். காலத்தை வீணே போக்கும் மனிதன் மரத்துக்குக்கூடச் சமானமாக மாட்டான். மரம் வளர்கிறது; தழைக்கிறது; பூத்துக் காய்த்துக் கனிகிறது. கல்லைச் சொல்லலாமா? கல்லுக்கு இயக்கம் இல்லையென்பது உண்மை; ஆனால் அது திண்ணியதாக இருக்கிறது. மனிதன் அப்படி அல்லவே! இன்பத்தினால் மகிழ்ந்தும் துன்பத்தினால் சோர்ந்தும் போகிறானே! சோம்பேறி மனிதன் விஷயமோ இன்னும் மோசம். எந்த வகையான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கும் அவனுக்குச் சுகத்தை விடத் துக்கமே அதிகம். மிகச் சிறிய துக்கங் கூட அவனை உலுக்கி விடும். தாளாண்மையால் முறுக்கேறாத உடம்பும் சிந்தனையினால் உரமேறாத உள்ளமும் படைத்த மகா பலவீனனான அவனுக்கு மிகச் சிறிய இடையூறும் மலைபோலப் படும். அப்போது அவன் நடுங்குகிற நடுக்கத்தைப் பார்க்க வேண்டுமே! செத்துப்போகிறவனுக்குக் கூட அவ்வளவு அவஸ்தை இராது. "கோழை நாளைக்கு நூறு தரம் சாகிறான்" என்று இங்கிலீஷிலே ஒரு பழமொழி உண்டு. சோம்பேறியும் அந்தச் சாதியைச் சேர்ந்தவனே.

★

இறைவன் அளித்த உடம்பு இருக்கும்போது முயற்சியின்றி இருப்பவன் இறைவனை அவமதித்தவன்

ஆகிறான். அவன் பக்தனாக வேஷம் புனைந்தாலும் உண்மைப் பக்தன் ஆகமாட்டான். தோட்டக்காரன் ஒருவனை ஒரு செல்வர் வேலைக்கு வைத்திருக்கிறார். அவனுக்கு வேண்டிய கருவிகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார். சம்பளமும் தருகிறார். அவன் என்ன செய்யவேண்டும்? கருவிகளைக் கொண்டு ஒழுங்காக வேலை செய்யவேண்டும். அப்பொழுதுதான் எஜமானனுடைய அன்பைப் பெற முடியும். அப்படிச் செய்யாமல், எஜமானன் தோட்டத்துக்கு வரும்போது அவரைப் புகழ்ந்து பாடியும் வரவேற்பும் வாழ்த்தும் கூறியும் அவர் உள்ளத்தைக் கவர எண்ணுகிறான். எஜமானன் மகிழ்ச்சி அடைவாரா? "நீ ஏன்ன வேலை செய்தாய்? ஏன் அந்தச் செடிக்கு நீர் பாய்ச்சவில்லை?" என்றுதான் கேட்பார்.

இறைவன் கொடுத்த உடம்பையும் பொருள்களையும் பெற்றுக் கொண்ட மனிதன் உழைக்க வேண்டும். அப்போதுதான் இறைவன் அருளைப் பெறலாம்.

உழைப்புக்காகவே உடம்பு ஏற்பட்டிருக்கிறது. உடம்பில் உள்ள உறுப்புக்களில் உணர்வுப் பொறிகள் அல்லது ஞானேந்திரியங்கள் ஐந்து உள்ளன; கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்ற ஐந்தும் ஐந்து வகையில் பொருள்களின் இயல்பை உணர்கின்றன. இவற்றையன்றிச் செயற் பொறிகள் அல்லது கர்மேந்திரியங்கள் ஐந்து இருக்கின்றன. அவை ஐந்தும் ஐந்து விதமான காரியங்களைச் செய்கின்றன. கால் நடக்கிறது; கை வேலை செய்கிறது; வாய் பேசுகிறது; நீரை ஓர் உறுப்பும் மலத்தை ஓர் உறுப்பும் வெளிப்படுத்துகின்றன. ஞானேந்திரியங்களில் தலைமையானது கண். கர்மேந்திரியங்களில் சிறந்தது கை. கை நாம் செய்யும் முயற்சிக்கு அடையாளம். மனிதனுக்குக் கை அமைந்தது போல வேறு

எந்தப் பிராணிக்கும் அமைய வில்லை. ஆகவே அவன் நல்ல முயற்சிகளைச் செய்ய வேண்டியவன்.

★

கையில் ஐந்து விரல்கள் இருக்கின்றன. அவை தனித் தனியே சில காரியங்கள் செய்கின்றன. சேர்ந்து பல காரியங்கள் செய்கின்றன. இரண்டு விரல்கள் சேர்ந்தும் சில காரியங்கள் செய்கின்றன. பூத்தொடுக்கும் போது ஆள்காட்டி விரலும் பெரு விரலும் வேலை செய்கின்றன.

இந்த ஐந்து விரல்களிலும் தலைமையானது இன்னதென்று சொல்லவா வேண்டும்? கட்டை விரல் என்றும், பெரு விரல் என்றும் பெயர் பெற்ற விரல் இல்லாவிட்டால் கையினால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. இறைவனைப் போல் அந்த விரல் மற்ற விரல்களோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கிறது. பிரிந்து நிற்பது போலத் தோன்றினாலும் வேலை செய்யும்போது முன்வந்து உதவி செய்கிறது. அதன் உதவி இல்லாவிட்டால் மற்ற விரல்களுக்கு மகிமை இல்லை.

இந்த விரல்களைக் கொண்டே ஆத்ம பரமாத்ம தத்துவத்தை ஞானிகள் விளக்குகிறார்கள். தட்சிணாமூர்த்தி தம் கையில் சின்முத்திரையைக் காட்டுகிறார். பெரு விரலோடு ஆள்காட்டி விரலைச் சேர்த்து வைத்துக் காட்டும் அறிகுறிக்குச் சின் முத்திரை என்று பெயர். ஆளைக் காட்டும் ஆட்காட்டி விரல் இந்த முத்திரையில் ஆத்மாவைக் காட்டுகிறது. பெரு விரல் பரமாத்மாவைக் காட்டுகிறது. மற்ற மூன்று விரல்களும் மூன்று மலங்களைக் காட்டுகின்றன. ஆத்மாவானது மூன்று மலங்களையும் விட்டு இறைவனோடு ஒன்றுவதே முக்தி என்று இந்த முத்திரை காட்டுகிறது.

★

ஞானக் குறிப்பை அஞ்சு விரல்களினல் தட்சிணு மூர்த்தி காட்டினர். கர்மக் குறிப்பை, உலகத்தில் மனிதன் தாளாண்மையுடன் வாழ வேண்டும் என்ற குறிப்பை, இந்த அஞ்சு விரல்களும் காட்டுவதாக ஒரு நாடோடிப் பாவலன் சொல்கிருன். சின்னஞ் சிறு குழந்தைகள் வேடிக்கையாகப் பாடும்படி அந்தப் பாட்டு அமைந்திருக் கிறது. ஒவ்வொரு விரலும் ஒரு விஷயத்தைச் சொல்கிற தாம். குழந்தைகள் ஒவ்வொரு விரலையும் தொட்டுக் காட்டிக்கொண்டே இந்தப் பாட்டைப் பாடுவார்கள். பாட்டை இனிப் பார்க்கலாம்.

கை விரல்களில் சிறியது சுண்டு விரல். அதற் கென்று தனி வேலை ஒன்றும் இல்லை. சின்னஞ் சிறு குழந்தையைப் போல இருக்கிறது அது. குழந்தை பசி யென்ருல் வீரிட்டு அழும். அதை அடக்கிக்கொள்ளத் தெரியாது. இந்தச் சுண்டு விரலும் பசி என்று அழு கிறது; சோறு சோறு என்று பரக்கிறது.

சோறு சோறு என்குதாம்.

குழந்தை அழுதால் உடனே அதற்கு அடுத்த பெரிய குழந்தை அதை எடுத்துக்கொண்டு ஆசுவாசப்படுத்தும். குழந்தைக்குச் சோறு ஊட்டும் வழியைத் தேடும். தானும் சாப்பிட வகையை நாடும். சுண்டு விரல் சோறு சோறு என்று அழுதபோது, அதற்கு அடுத்த மோதிர விரல் கவலை கொண்டது. "எப்படிச் சோறு கிடைக்கும்?" என்று யோசித்தது. அதற்கு மேல் வகை தெரியாத பருவம் உள்ளது அது.

சோற்றுக் கென்ன செய்யலாம் ?

என்றதாம் அந்த மோதிர விரல். அதற்கு அடுத்தபடி பெரியது நடு விரல். அழுத குழந்தையைவிட, என்ன செய்யலாம் என்று கேட்ட குழந்தை பெரியது. அந்தக்

குழந்தையை விடப் பெரிய பிள்ளை என்ன செய்வான்? ஏதாவது உருப்படியான யோசனை சொல்வான். இங்கே நடு விரல் யோசனை சொல்கிறது.

கடன் வாங்கித் தின்னலாம்

என்று நடுவிரல் சொல்கிறதாம். கடன் வாங்கினால் சோறு தின்னலாம். பசி போய்விடும். ஆனால் அப்போதைக்குப் பசி போனாலும் கடன் தொல்லை வந்துவிடுமே. இதைப் பற்றிய யோசனை இன்னும் பெரிய பிள்ளைக்கு வருகிறது. ஆள்காட்டி விரல் இந்த யோசனையில் ஈடு படுகிறது.

கடன் எப்படிக் கட்டலாம்?

என்ற கேள்வி அதன் அகக் கண்ணில் பிரம்மாண்டமாக எழுகிறது.

எல்லாருக்கும் தலைமை பூண்டு, யாவருக்கும் உரிய குறைகளைப் போக்கும் குடும்பத் தலைவன் என்ன சொல்கிறான்? கடன் வாங்கினால் கட்ட வழி என்ன என்பது அவனுக்குத் தெரியும். உழைத்தால் கடனைக் கட்டிவிடலாம். பசியைப் போக்கிக்கொண்டு உற்சாகத்தோடு உழைத்தால் கடனைக் கட்டிவிடலாம். முயற்சி உடையவர் கடனுக்குப் பயப்பட வேண்டியதில்லை. போதிய அளவு உணவு கிடைத்து உடம்பு நல்ல நிலையில் இருந்தால், எத்தனை கடனாக இருந்தாலும் கட்டுவதற்குத் தியங்க வேண்டியதில்லை. ஆகவே,

பிழைத்திருந்தால் கட்டிக்கலாம்
பிழைத்திருந்தால் கட்டிக்கலாம்

என்று ஒரு முறைக்கு இரு முறையாக அழுத்தந் திருத்தத்தோடு பெருவிரல் சொல்கிறது. சொல்கிறபடி செயலில் நிறைவேற்றிக் காட்டும் தகுதி உள்ளது அது.

மனிதனுடைய முயற்சி எப்படி ஆரம்பமாகிறது, எப்படி வளர்கிறது என்பதை இந்தப் பாட்டானது படிப் படியாகக் குறிப்பிக்கிறது. இயற்கையாகவே பசி உண்டாகிறது; அதை மனிதன் உணர்கிறான். அதோடு அவன் நின்றுவிட்டால், அவன் பசித்தபோது அழும் குழந்தையைப் போன்ற அபக்குவ நிலையில் இருப்பவ னாகிறான். பசியைத் தீர்க்க வழி என்ன என்று ஆராய் கிறான். பிறகு ஒரு வழியைக் கண்டுபிடிக்கிறான். அந்த வழியில் உள்ள இடையூறு அடுத்தபடி அவன் அறிவுக்குப் புலனாகிறது. அதனைப் போக்கவும் வழி அவனுக்கு இறுதியில் தோன்றுகிறது. உழைப்பில் உறுதியும், நம்பிக்கையும் உடையவன் காரியத்தைச் சாதித்துவிட லாம் என்பதைப் பெருவிரல் சொல்கிறது. பெரிய மனி தர்களும் அதையே சொல்கிறார்கள்.

உழைப்பின் உயர்வைத் தெரிவிக்கும் குறிப்பை யுடைய பாட்டைக் குழந்தைகள் கை விரல்களைத் தொட் டுக் காட்டிக்கொண்டே பாடுவார்கள்.

சோறு சோறு என்குதாம் (சுண்டு விரல்)
சோற்றுக் கென்ன செய்யலாம் ? (மோதிர விரல்)
கடன் வாங்கித் தின்னலாம் (நடு விரல்)
கடன் எப்படிக் கட்டலாம்? (ஆள்காட்டி விரல்)
பிழைத்திருந்தால் கட்டிக்கலாம்
பிழைத்திருந்தால் கட்டிக்கலாம்! (பெரு விரல்)

13. ஸ்ரீ ஜயந்திப் பாட்டு

கண்ணன் பிறந்தான். எவ்வளவோ காலத்துக்கு முன்னே அவன் பிறந்தான். சிறைக் கூடத்திலே கண்ணன் திருவவதாரம் செய்தபோது தேவகிக்கு முதலிலே மகிழ்ச்சி உண்டாகியிருக்க வேண்டும். ஆனால் உடனே அவளுக்குத் துக்கம் உண்டாகிவிட்டது. 'இந்த அழகுக் குழந்தையைக் கம்ஸன் கொன்றுவிடுவானோ?' என்று நினைத்தபோது அவள் குடல் குழம்பியது. 'இந்தக் குழந்தை இங்கு ஏன் பிறந்தது?' என்ற நினைவு கூட உண்டாயிற்று. சில ஏழைகள் மிகவும் புத்திசாலிக் குழந்தைகள் கஷ்டப்படுவதைப் பார்த்து, "இந்தப் பாவி வயிற்றிலே ஏன் பிறந்தாய்?" என்று கூறி வருந்துவதில்லையா?

தாயினுடைய கவலையைத் தீர்க்கக் கண்ணனே வழி பண்ணிவிட்டான். வசுதேவன் சிறையினின்றும் விடுபட்டுக் கண்ணனைத் தூக்கிக் கொண்டு நந்தகோபன் ஊருக்குப் போய்க் குழந்தையை அங்கேயே விட்டு வந்தான்.

சிறையிலே பிறந்த கண்ணனுக்குக் கோகுலத்தில் விழா நடைபெற்றது. ஆய்மாதர் கூடிக் களித்துக் குதூகலித்தார்கள். இதைப் பெரியாழ்வார் மிக அழகாகத் தம்முடைய திருமொழியிலே பாடியிருக்கிறார். என்றைக்கோ பிறந்த கண்ணனை நினைந்து தம் மனத்திலே அவனுடைய பிறந்த நாளைக் கற்பனை செய்து பார்த்து முதலில் தாம் மகிழ்ந்து, பிறகு எல்லோரும் மகிழும்படியாகப் பாடினார். கண்ணன் மீண்டும் ஒரு முறை கவியிலே பிறந்தான்.

அதற்குப் பிறகும் கவிஞர்கள் கண்ணன் பிறப்பைக் காதலித்துப் பாடியிருக்கிறார்கள். பாரதியாரும் பாடியிருக்கிறார்.

கண்ணன் பிறந்தான்—எங்கள்
கண்ணன் பிறந்தான்—இந்தக்
காற்றதை யெட்டுத் திசையிலுங் கூறிடும்
திண்ணம் உடையான்—மணி
வண்ணம் உடையான்—உயர்
தேவர் தலைவன் புவிமிசைத் தோன்றினன்.

அவன் தோன்றவே தேவர்களெல்லாம் வாழ்ந்தார்கள். 'பாவி அசுரர்கள், பொக்கென வீழ்ந்தார்.'

கவிஞர்கள் இவ்வாறு கண்ணன் பிறப்பைக் கொண்டாடுவது பெரிதல்ல. இந்நாட்டு மக்களுக்கு ஒவ்வொரு வருஷமும் கண்ணன் பிறக்கிறான். ஒவ்வொரு வருஷமும் மக்கள் விழாவைக் கொண்டாடுகிறார்கள். கோகுலாஷ்டமி என்றும், ஜன்மாஷ்டமி என்றும், ஸ்ரீ ஜயந்தி என்றும் கண்ணன் திருநாளை இந்நாட்டில் கொண்டாடுகிறார்கள்.

ஆவணி மாதம் கோகுலாஷ்டமி குழந்தைகளுக்கு உற்சாகத்தை உண்டாக்கும் திருநாள். அன்று பல பலவிதமான பக்ஷணங்கள் செய்து நிவேதனம் பண்ணுவது தமிழ்நாட்டு வழக்கம். பக்ஷணங்களுக்காகவாவது குழந்தைகள் கோகுலாஷ்டமியை ஞாபகம் வைத்துக்கொள்கின்றன.

கோகுலாஷ்டமி அன்றும் சிவராத்திரி அன்றும் இரவு கண் விழிப்பது ஒரு சம்பிரதாயம். பெரியவர்கள் பஜனை செய்தும், புராணங்கள் கேட்டும் கண் விழிப்பார்கள்.

குழந்தைகளும் சிரத்தையாகக் கண் விழிக்க ஏற்பாடு செய்வார்கள்.

பல குழந்தைகள் ஒன்று சேர்ந்துகொண்டு ஒரு பெரிய வீட்டில் இரவு கண் விழிக்க ஏற்பாடு செய்வார்கள். கண்ணன் படத்தை வைத்து அதற்கு அருகில் விடிய விடிய எரியும்படி விளக்குகள் வைப்பார்கள். அதற்கு எண்ணெய் வேண்டுமே; எல்லோரும் கூடிக்கொண்டு காலையிலேயே ஊரில் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று எண்ணெய் கேட்பார்கள். அதற்குத் தனியாக ஒரு பாட்டு உண்டு. அந்தப் பாட்டில் எண்ணெய் வார்க்காவிட்டால் வீட்டில் இருப்பவரைக் குறை கூறும் பகுதிகள் இருக்கும்.

எண்ணெய் தொகுத்து வைத்துக்கொள்வதோடு ஒவ்வொரு குழந்தையும் தன் தன் வீட்டிலிருந்து பக்ஷணங்களைக் கொண்டு வரும். இந்தக் 'கூட்டுறவி'னால் அவர்களுக்கு உற்சாகம் மிகுதியாகும். ஒற்றுமை உணர்ச்சி நிலவும்.

இரவு கண் விழிப்பதற்குத் தாயக் கட்டம், பரமபத சோபான படம் முதலிய விளையாடல்களை ஆடுவார்கள். இரவு முழுவதும் விழித்து இருப்பதாகச் சங்கற்பம் செய்துகொண்டாலும் அவர்கள் இளங் குழந்தைகள் தாமே! கடைசியில் தூங்கிப் போவார்கள்.

சிறுவர் சிறுமியர்களுக்கும் கண்ணன் நினைவு உண்டாக இத்தகைய முயற்சிகளை இந்த நாட்டிலே காண்கிறோம்.

குழந்தைகள் ஸ்ரீ ஜயந்தியன்று எண்ணெய் வாங்கச் செல்லும்போது பாடும் பாட்டு வருமாறு:—

சீசந்தி அம்பாரம் சிவரத்திரி அம்பாரம்
ஸ்ரீகிருஷ்ண ராயருக்குத் திருவிளக் கெண்ணெய்!
எண்ணெய் வார்த்தால் ஆச்சு இல்லாவிட்டால் போச்சு
காசுக்கு ரெண்டு சண்டை வைர முத்துக் கொண்டை
சின்னச் சின்ன பொம்மை சின்ன ராணி பொம்மை
பெரிய பெரிய பொம்மை பெரிய ராணி பொம்மை
அத்தை வீட்டுக்குப் போனேன் பொத்தற் பானையைத் தந்தாள்
அவல் இடிக்கலாம் பொரி இடிக்கலாம்
அல்லியைக் கண்டால் டோஸ்!
கோணக் கோணப் புளியங்காய் கொம்புளிச் சட்டி மாதுளங்காய்
ஆனைக்காரன் பெண்டாட்டி ஆட்டுக் குட்டியைப் பெற்றாளாம்
காச்சு மூச்சுன்னு கத்தித்தாம் காலை வாரி எறிஞ்சாளாம்!
ஆரோர் ஆத்திற்குப் போவோம் நாங்கள்
ஆடிப் பாடி வருவோம் நாங்கள்
சீப்புத் தந்தால் போவோம் நாங்கள்
சில்லை விட்டெறிந்தால் வருவோம் நாங்கள்
காப்புத் தந்தால் போவோம் நாங்கள்
கல்லை விட்டெறிந்தால் வருவோம் நாங்கள்
ஸ்ரீ ஜயந்திப் பட்டினி சிவராத்திரி பட்டினி
அரைப்பாரும் கரைப்பாரும்
சுடுவாரும் தின்பாரும்
நாங்கள் கேட்டால் தரமாட்டேன் என்பாரும்
ஊரார் கேட்டால் கொடுப்பேன் என்பாரும்
வாரீர் எண்ணெய் வாரீர்
விரைவாய் எண்ணெயை வாரீர்
தச்சன் கடைந்த முட்டையாலே
சாலில் எண்ணெயைச் சரிச்சுவா சரிச்சுவா

கொல்லன் கடைந்த முட்டையாலே
குடத்தில் எண்ணெயைச் சரிச்சுவா சரிச்சுவா
மாடே மாடே மேய்ந்துவா
மண்ணுக் குள்ளே புகுந்து வா
எனக்கொரு வட்டம் உனக்கொரு வட்டம்
டுவாண்டே, டுவாண்டே!

14. விடுவிடைக் கதைகள்

குழந்தைகளின் மனத்தைக் கவர்வதற்குப் பாட்டி மார்கள் பல பல தந்திரங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். குழந்தைகளுக்குத் தெரிந்த பிராணிகளைப் பற்றியெல்லாம் கதை சொல்லி அவர்கள் என்றும் மறக்காவண்ணம் இடையிடையே பாட்டுக்களும் சொல்வார்கள்.

ஒரே விஷயத்தைத் திருப்பித் திருப்பிப் பாட்டாகச் சொல்லும்போது குழந்தையின் மனத்தில் அது நன்றாகப் பதிந்துவிடுகிறது. குதிரை, ஈ, எலி, பூனை முதலிய கதாபாத்திரங்களை வைத்துக்கொண்டு பாட்டி அழகான கதைகளைப் பின்னிக் குழந்தைகளுக்குச் சொல்லுகிறாள். பாட்டோடும் அபிநயத்தோடும் சொல்லும்போது குழந்தை அதில் சொக்கிப் போய்விடுகிறது. குழந்தை அந்தக் கதையை ஆவலோடு கேட்டுக் கற்றுக்கொண்டு விடுகிறது. பிறகு தானும் அபிநயங்களோடு கதை சொல்லப் புறப்பட்டுவிடுகிறது.

மிருகங்களைப் பற்றிய கதைகளைக் குழந்தைகள் விரும்புகிறார்கள். உலக முழுவதும் குழந்தைகளின் இயல்பு ஒன்றுதான். உலகத்துக் குழந்தைக் கதைகளில் மானும், மாடும், நாயும், கழுதையும், பிற பிராணிகளும் அடிக்கடி வருவதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஈசாப்புக் கதைகள் பெரும்பாலும் பிராணிகளைப் பற்றியே அமைந்திருக்கின்றன. நம் நாட்டுப் பஞ்ச தந்திரக் கதைகளும் அத்தகையனவே.

இளங் குழந்தைகளுக்குப் பாட்டிமார் சொல்லும் கதைகளில் பல பிராணிகள் வருகின்றன. ஏதோ ஒரு

வகையில் எல்லாவற்றையும் தொடர்புபடுத்திக் கதையை ஜோடிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறாள் பாட்டி. வினாக்களும் விடைகளுமாகத் தொடர்ந்து செல்லும் கதைகள் பல உண்டு.

1. எறும்பு கடித்த கதை

குழக்கட்டை குழக்கட்டை,
ஏன் வேகவில்லை?
புல் முளைத்தது; நான் வேகவில்லை.
புல்லே, புல்லே, ஏன் முளைத்தாய்?
மாடு மேயவில்லை; நான் முளைத்தேன்.
மாடே, மாடே, ஏன் மேயவில்லை?
அவிழ்த்து விடவில்லை; நான் மேயவில்லை.
மாட்டுப் பெண்ணே, மாட்டுப் பெண்ணே,
மாட்டை ஏன் அவிழ்த்துவிடவில்லை?
குழந்தை அழுதது; நான் அவிழ்த்துவிடவில்லை.
குழந்தாய், குழந்தாய், ஏன் அழுதாய்?
எறும்பு கடித்தது; நான் அழுதேன்.
எறும்பே, எறும்பே, ஏன் கடித்தாய்?
வாயில் விரலை வைத்தால் கடிக்கமாட்டேனா?
சும்மா இருப்பேனா?

2. பிள்ளையார் தந்த பிள்ளை

கதை கதையாம் காரணமாம்
காரணத்திலே ஒரு தோரணமாம்.
தோரணத்திலே ஒரு பச்சைப் புல்லாம்,
பச்சைப்புல்லை என்ன செய்தாய்?
பசுமாட்டுக்குப் போட்டேன்.
பசுமாடு என்ன தந்தது?
பசுமாடு பால் தந்தது.
பாலை என்ன செய்தாய்?
பாலைச் செட்டிக்குக் கொடுத்தேன்.
செட்டியார் என்ன தந்தார்?

செட்டியார் ஒரு காசு தந்தார்.
காசை என்ன செய்தாய்?
காசைக் கடைக்காரனுக்குக் கொடுத்தேன்.
கடைக்காரன் என்ன தந்தான்?
கடைக்காரன் தேங்காய் தந்தான்.
தேங்காயை என்ன செய்தாய்?
தேங்காயைப் பிள்ளையாருக்குக் கொடுத்தேன்.
பிள்ளையார் என்ன தந்தார்?
பிள்ளையார் பிள்ளை தந்தார்.
அந்தப் பிள்ளை எங்கே?
இதோ இந்தப் பிள்ளை!
இந்தச் செல்லப் பிள்ளை!

3. ஊசியும் நட்டானும்

ஓடோடும் புளியங்கொட்டை
உடைத்தாலும் கிலுகிலுப்பை
எட்டுரு மாடு மேய்த்து
எட்டாம் நாள் தண்ணீர் காட்டி
ஒரு புல் பிடுங்கிப் போட்டு
ஒரு கலயம் பால் பிச்சி
அம்மத்தாளிடம் கொடுத்தேன்.
அம்மத்தாள் என்ன தந்தாள்?
அம்மத்தாள் ஒரு ஆட்டைத் தந்தாள்.
ஆட்டை என்ன செய்தாய்?
அதைத் திண்ணையில் கட்டி
நெருப்பு எடுக்கப் போனேன்.
ஆடு எங்கே?
அதைக் காக்காய் கொண்டுபோய்விட்டது.
காக்காய் பின்னாலே போனேன்.
அது என்ன தந்தது?
காக்காய் ஒரு கரியைப் போட்டது.
அதை என்ன செய்தாய்?
கொல்லனிடம் கொடுத்தேன்.

கொல்லன் என்ன தந்தான்?
கொல்லன் இரண்டு ஈட்டியைத் தந்தான்.
ஈட்டியை என்ன செய்தாய்?
ஈட்டிமேல் ஏறி அம்மான் வீட்டுக்குப் போனேன்.
அம்மான் என்ன தந்தான்?
இரண்டு பெண்ணைத் தந்தான்.
பெண்ணை என்ன செய்தாய்?
இரண்டு காசுக்கு விற்றேன்.
காசை என்ன செய்தாய்?
காசைக்கொண்டு கடைக்குப் போனேன்.
கடையில் என்ன வாங்கினாய்?
கடையில் இரண்டு தேங்காய் வாங்கினேன்.
தேங்காயை என்ன செய்தாய்?
பிள்ளையாருக்கு உடைக்கப் போனேன்.
பிள்ளையாரைச் சுற்றிப் பாம்பாய்க் கிடந்தது.
பாம்பை அடிக்கக் கம்புக்குப் போனேன்
கம்பு முழுதும் ரத்தமாய் இருந்தது.
ரத்தத்தைக் கழுவத் தண்ணீருக்குப் போனேன்.
தண்ணீரெல்லாம் மீனாய்க் கிடந்தது.
மீன் பிடிக்க வலைக்குப் போனேன்.
வலை முழுதும் கிழிசலாய் இருந்தது.
கிழிசல் தைக்க ஊசிக்குப் போனேன்.
ஊசியும் தட்டானும் உருண்டோடிப் போனார்கள்.
பாசியும் தட்டானும் பறந்தோடிப் போனார்கள்!

4. மீன் பிடித்த கதை

கதை கதையாம் காரணமாம்
காரணத்திலே ஊருணியாம்
ஊருணியில் தெப்பக்குளமாம்
தெப்பக்குளத்திலொரு தெர்ப்பைப் புல்லாம்
தெர்ப்பைப் புல்லைப் பிடுங்கி ஒருத்தன் ஒரு காசுக்கு விற்றானும்
அந்த ஒரு காசுக்குத் தேங்காய் வாங்கினானும்
தேங்காய் உடைக்கக் கல்லுக்குப் போனால்

கல்லெல்லாம் பாம்பு
பாம்பை அடிக்கத் தடிக்குப்போனல்
தடியெல்லாம் தேன்
தேன் எடுக்கச் சட்டிக்குப் போனல்
சட்டியெல்லாம் ஊத்தை
ஊத்தையைக் கழுவ ஆற்றுக்குப் போனல்
ஆறெல்லாம் மீன்
மீன் பிடிக்க வலைக்குப் போனல்
வலையெல்லாம் பீற்றல்
பீற்றல் தைக்க ஊசிக்குப் போனல்
ஊசி யெல்லாம் வெள்ளி
வெள்ளி என்ன வெள்ளி
வெற்றிலைக் காம்பைக் கிள்ளி
போட்டுக் கோடி குள்ளி!

15. கொசுவின் பெருமை

மனிதன் உலகத்திலுள்ள ஜீவராசிகளிலெல்லாம் சிறந்தவனாகவும் அறிவு படைத்தவனாகவும் இருக்கிறான். உலகத்துப் பிராணிகளை அடக்கி ஆளவும், அழிக்கவும் அவன் ஆற்றல் படைத்திருக்கிறான்,

ஆனாலும் மிக மிகச் சிறிய பிராணிகளுக்கு அவன் அஞ்சி நடுங்குகிறான். புழு, பூச்சிகளைக் கண்டால், "ஐயோ, வியாதி வந்துவிடுமே!" என்று பயந்து பாதுகாப்புத் தேடிக் கொள்கிறான். மூட்டைப் பூச்சி, கொசு முதலிய பிராணிகளால் அவன் படும் சிரமம் கொஞ்சநஞ்சமன்று. எத்தனையோவித மருந்துகளை உண்டு பண்ணி ஜலத்தில் கலந்தும், நிலத்தில் தெளித்தும் கொசு சம்ஹாரம் செய்கிறான். போதாக் குறைக்குக் கொசுவலை என்னும் கோட்டைக்குள் புகுந்துகொண்டு நித்திரா தேவியின் துணையை நாடுகிறான். இவ்வளவு பெரிய உடம்பு படைத்த மனிதன் ஒரு சிறு கொசுவுக்கு அஞ்சுவது ஈசுவர சிருஷ்டியில் பெரிய விநோதம்! 'கொசுவைப் போல நசுக்கி விடுவேன்' என்று வீரம் பேசும் மனிதன் ஒரு கொசுவை அழித்தால் ஒழிந்துவிடுமா? அசுரர்களைப் போலப் புங்கானுபுங்கமாக அவை புறப்படுகின்றன.

வண்டு ரீங்காரம் செய்கிறது, இசை பாடுகிறது என்று காவியங்களிலே பார்க்கிறோம். நாம் அதைக் கேட்பது மிகவும் அருமை. ஆனால் கொசுவின் ரீங்காரத்தை ஒவ்வொருவரும் கேட்டிருக்கிறோம். 'கொசுவின் சில் பாடல்' என்று யாரோ ஒரு புலவர்கூட அதைப் பாடியிருக்கிறார். நாடோடிப் பாவலனும் கொசுவின் பெருமையைக் குறித்துப் பாடியிருக்கிறான்.

★

கொசு காதில் வந்து 'ஙொய்' என்று மொய்க்கிறது. அந்தச் சங்கீதத்தைக் கேட்டு ரஸிக்க நமக்கு மனம் இல்லை. அடுத்தபடி, தான் பாடிய பாட்டுக்கு ஒரு வாய் ரத்தத்தை நம் உடம்பிலிருந்து உறிஞ்சி விடுமே என்ற எண்ணம் அந்தச் சங்கீதத்தை மறக்கச் செய்கிறது. ஆகவே ஆத்திரந்தான் வருகிறது மனிதனுக்கு.

கள்ளப்பயல் கொசுவேகாதில் வந்து கசுகசு என்னுதே!
என்னைக் கடித்தால் கொசுவே உன் பல்லைப் பிடுங்கிடுவேன்!

இந்த மிரட்டலைக் கொசு கேட்குமா என்ன? அது தன் வேலையைப் பார்க்கிறது. மனிதன் கவனிக்கிறான். 'அட என்னடா இது! ஆச்சரியமாக இருக்கிறது! இவ்வளவு பெரிய மனிதன் ஒரு சிறிய கொசுவுக்குப் பயப்பட வேண்டியிருக்கிறது. இந்தக் கொசு நம்மை அணுகிவிட்டது. இதை நாம் மிரட்டுகிறோம். அதைக் கொஞ்சமும் காதில் வாங்கினதாகத் தெரியவில்லையே! எவ்வளவு ஆணவம் பார்!...ஏன் இருக்கக்கூடாது? கடவுள் படைத்த ஜீவன்களுள் கொசுவும் ஒன்றுதானே? நமக்கு வாழ்க்கையும் உணவும் இன்பமும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு கொசு உலகத்துக்கும் முக்கியந்தானே? உருவத்தினால் கொசு சின்னதாக இருக்கிறது. அதனால் அதனுடைய பெருமை குன்றிவிடுமா? யானை எவ்வளவு பெரிய மிருகம்! நாம் அதன் முன்னே சிறிய உருவத்தோடு நிற்கிறோம். ஆனாலும் அதை அடக்கி ஆளுகிறோம். நம்முடைய ராஜ போகத்துக்கு அதை அலங்காரப் பொருளாகவும் வாகனமாகவும் படையாகவும் வைத்துக் கொள்கிறோம். கொசுவுக்கும் ராஜபோகம் இருக்கக் கூடாதா? அதுவும் கொசு உலகத்தில் வழங்கும் ஆடை ஆபரணங்களையும் பரிவாரங்களையும் படைத்துத் தருக்கிச் செருக்கி இருக்கக்கூடாதா?'

மனிதனது கற்பனை வேலை செய்யத் தொடங்குகிறது. கொசு இப்பொழுது கொசுவாக இல்லாமல் ஒரு பெரிய மகாராஜா ஆகிவிடுகிறது. எவ்வளவோ சம்பிரமங்களுடன் வாழ்க்கை நடத்துகிறது.

அடுக்கு மோதிரமாம் - கொசுவுக்கு
ஆனந்தக் கைவீச்சாம்.
செருப்புக் கால்பணமாம் - கொசுவுக்குச்
சேவகர் நாலு பேராம்.
முத்துக் கடுக்கனிலே - கொசுவுக்கு
முந்நூறு ஜோடிகளாம்.
தங்கக் கடுக்கன்களாம் - கொசுவுக்குத்
தாசிமார் நாலு பேராம்.
கட்டிலும் மெத்தையுமாம் - கொசுவுக்குக்
கால்பிடிக்க வெள்ளாட்டியாம்.
தூங்கு மஞ்சங்களாம் - கொசுவுக்குத்
துப்பப் படிக்கங்களாம்.
வெள்ளிக் கரண்டகமாம் - கொசுவுக்கு
வெங்கலப் பாக்குவெட்டி.
பொன்னின் கரண்டகமாம் - கொசுவுக்குப்
பின்னும்ஓர் பாக்குவெட்டி.
ஆனை குதிரைகளாம் - கொசுவுக்கு
ஆயிரம் வண்டிகளாம்.
பாகவ தம்பாடக் - கொசுவுக்குப்
பிராமணர் நாலுபேராம்.

கொசு அரசு தன் அரண்மனையில் இத்தனை சுக போகத்துடனும் சிறப்புடனும் வாழ்கிறது. அது உலாப் புறப்படுகிறது.

பச்சைப் பல்லாக்கில் ஏறிக் - கொசுவனார்
பார்வேட்டை போனாராம்.

பல்லாக்கைக் கண்டவுடன் - பாளையக்காரன்
சலாம் போட்டானும்.
வாரும் வாருங்கானும் - கொசுவனுர்
இருந்து பேசுங்கானும்.
இருந்து பேசினக்கால் - பாளையக்காரா
எந்த ராஜ்யந்தருவாய் ?

கொசு பாளையக்காரனை, "எந்த ராஜ்யம் தருவாய்?" என்று கேட்கும் வரையில் மனிதன் கற்பனைக் கண்ணுல் கொசுவுக்கு ஊர்வலம் நடத்திவிடுகிருன். அவன் சிந்தனை உடனே இந்த உலகத்துக்கு வந்துவிடுகிறது.

'கொசுவுக்கு ராஜ்யமா? மனித தேகமே அதன் ராஜ்யந்தான். ஊறுகாய்ப் பானை அதன் ராஜ்யம். ராஜ்யத்தை விட்டு அதைத் துரத்திவிடுகிருேம்' என்ற நினைவிலே பாட்டுத் தொடர்ச்சியாக வருகிறது.

காற்றடித்தவுடன் - கொசுவனுர்
கானுமே போய்விடுவார்.
காற் றமர்ந்தவுடன் - கொசுவனுர்
காலைப் பிடுங்கிடுவார்.
மாங்காய்ப் பானையிலே - கொசுவனுர்
வந்து தங்குவராம்.
வண்டைத் திறந்தவுடன் - கொசுவனுர்
வாயில் புகுவாராம்.
சுண்டைக்காய்ப் பானையிலே - கொசுவனுர்
சுருக்க வருவாராம்.
வெயிலில் வைத்தக்கால் - கொசுவனுர்
வேதனைப் படுவாராம்.
தாழி ஏற்றலுமே - கொசுவனுர்
தன்னுனுப் பாடுவாராம்.

விளக்கை ஏற்றலுமே - கொசுவனுர்
வேடிக்கை பண்ணுவராம்.

இப்படிப் பாடிக்கொண்டிருக்கையிலே கொசு மனிதனை முழு ஞாபகத்தையும் அடையச் செய்துவிடுகிறது. 'ஏதடா, நம் புகழைப் பாடுகிருனே; கொஞ்ச நேரம் பொறுப்போம்' என்று தெரிகிறதா அதற்கு? காதில் தன் யுத்த முழக்கத்தை முழக்குகிறது. மனிதன் தான் வாழும் உலகத்திற்கு வந்துவிடுகிருன். வருணனையெல்லாம்போய் விடுகிறது. ஆத்திரந்தான் மீண்டும் உண்டாகிறது. சட்!

கள்ளப் பயல்கொசுவே - காதில்வந்து
கசுகசு என்னுதே
என்னைக் கடித்தக்கால் - கொசுவேஉன்
பல்லைப் பிடுங்கிடுவேன்!

ஆமாம், எவ்வளவோ பேரல்லவா கொசுவின் பல்லைப் பிடுங்குகிறவர்கள்! இந்த வாய் வீரம் எதுக்கையா மனிதரே! கொசு ராஜ்யத்தில் நீர் வாழ்கிறீர். பேசாமல் அதன் முத்தத்தில் இன்பம் காணுவதை விட்டு விட்டுப் பல்லைப் பிடுங்குகிருராம், பல்லை!

16. பொரியரிசியின் கதை

ஒரே ஒரு பொரியரிசி கல்யாணம் பண்ணிக்கொள்ள வேணுமென்று ஆசைப்பட்டதாம். அது தன்னைத் தானே பார்த்துக்கொண்டது. உருண்டு திரண்டு புஷ்டியாகவும் வெளுப்பாகவும் இருக்கும் தனக்கு அழகான புருஷன் வேணுமென்று எண்ணியது. தான் அழகியாக இருக்கும் போது அழகில்லாத புருஷனுக்கு வாழ்க்கைப்படலாமா? ஊர் முழுவதும் தேடித்தானே புருஷனைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று புறப்பட்டது. அதற்குத் தாயும் இல்லை; தகப்பனும் இல்லை.

சின்னச் சின்னக் கையும் காலும் அசைய, அது ஊரைச் சுற்றப் புறப்பட்டது. யாரோ ராஜா சண்டையில் வெற்றியை அடைந்து ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். அவனுடன் யானை, குதிரை, ஒட்டகம் முதலிய படைகளும் வந்தன. பொரியரிசி வந்துகொண்டிருந்தபோது எதிரே அரசனுடைய யானை ஒன்று வந்தது. பொரியரிசி விசுக் விசுக்கென்று வந்ததை அந்த யானை பார்த்தது. அதற்கு மிகவும் விநோதமாக இருந்தது.

"ஏ பொரியரிசி, பொரியரிசி, எங்கே இவ்வளவு உற்சாகமாகப் புறப்பட்டாய்?" என்று அதைப் பார்த்து யானை கேட்டது. உடனே பொரியரிசி, "நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன். அதற்காக மாப்பிள்ளை தேடிக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லியது.

"அப்படியானால் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்வோன்" என்று யானை கேட்டது.

பொரியரிசி நிமிர்ந்து யானையை மேலும் கீழும் பார்த்தது. யானை சந்தோஷத்தால் தன் காதுகளை அசைத்தது. அந்தக்காதுகள் முறத்தைப்போல இருந்தன. "ஐயையோ! இதைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால் இந்த முறம் இரண்டும் நம்மைப் புடைத்துத் தள்ளிவிடுமே!" என்று பொரியரிசிக்குப் பயம் உண்டாகிவிட்டது.

"ஊஹூம். நான் மாட்டேன். உனக்குக் காது நன்றாயில்லை. மடங்கியிருக்கிறது" என்று சொல்லி வேகமாகப் போகத் தொடங்கியது. யானை அதை லட்சியம் செய்யாமல் போய்விட்டது.

பொரியரிசி நடந்து போய்க்கொண்டிருந்தது. எதிரே ஒரு குதிரை வந்தது. அதுவும் பொரியரிசியைப் பார்த்து, "பொரியரிசி, பொரியரிசி, எங்கே புறப்பட்டாய்?" என்று கேட்டது.

"கல்யாணம் செய்துகொள்ள எண்ணியிருக்கிறேன். அதற்காக ஒரு மாப்பிள்ளையைத் தேடி அலைகிறேன்" என்றது பொரியரிசி.

"அப்படியா! என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளேன். என்னுடைய கம்பீரமான நடை வேறு யாரிடம் இருக்கிறது?" என்று சொல்லிக்கொண்டே நாலு தடவை டக் டக்கென்று குறுக்கும் நெடுக்கும் நடந்து காட்டிற்று.

அது நடக்கும்பொழுது பொரியரிசிக்கு உலக்கையின் ஞாபகம் வந்துவிட்டது. "ஐயோ! இதன் காலுக்கடியில் நாம் அகப்பட்டுக்கொண்டால் நம்மைப் பொடியாக்கி விடுமே!" என்று பயப்பட்டது.

"ஊஹூம். நீ அசங்கியமான பிராணி; கொஞ்சம் தள்ளி" என்று சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிப் போய்விட்டது.

கொஞ்ச தூரம் போன பிறகு எதிரே ஒட்டகம் ஒன்று தன் தலையை அசைத்து ஆட்டிக்கொண்டே வந்தது. அது பொரியரிசியைப் பார்த்து, "வெள்ளை நிற அழகியே, பொரியரிசிப் பெண்ணே, எங்கே புறப்பட்டாய்?" என்று கேட்டது.

"ஒட்டக மாமா, ஒட்டக மாமா, ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் புறப்பட்டேன்" என்று பொரியரிசி சொல்லிற்று.

"அப்படியானால் நானே உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறேனே. என் முதுகில் நீ ஒய்யாரமாக ஊர்வலம் வரலாம்" என்று ஒட்டகம் சொல்லித் தன் உதட்டை அசைத்தது.

உடம்பெல்லாம் கோணல் மயமாக இருந்த ஒட்டகத்தைப் பொரியரிசி ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தது. "ஐய! எத்தனை கோணல்! உன்னையும் ஒரு பெண் கல்யாணம் பண்ணிக்கொள்வாளோ!" என்று சொல்லி வெகு வேகமாக ஓடிப்போய்விட்டது.

கொஞ்ச தூரம் போன பிறகு எதிரே ஒரு கழுதை வந்தது. பொரியரிசியை அது பார்த்தது. "உருண்டு திரண்ட பொரியரிசிப் பெண்ணே! ஊர்வலமாக எங்கே புறப்பட்டாய்?" என்று கேட்டது.

பொரியரிசி, "கழுதை மாமா, கழுதை மாமா, கணவனைத் தேடிப் புறப்பட்டேன்" என்றது.

"என்னைப் பார்; என் வெள்ளி மூக்கைப் பார். உன் அழகுக்கும் என் அழகுக்கும் பொருத்தமாக இருக்கும். என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளேன்" என்று சொல்லிக்கொண்டூரம் போட்டுக் குதித்தது கழுதை. சந்தோஷத்தால் விலுக் விலுக்கென்று பின்னங்காலால் உதைத்துத் துள்ளியது.

அதைப் பார்த்த பொரியரிசி, "ஐயையோ! நான் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேன். நீ காலை உதறி உதைக்கிறாய்" என்று சொல்லிவிட்டு மேலே நடந்து போயிற்று.

கொஞ்ச தூரம் நடந்துபோன பிறகு, அதன் எதிரே சிட்டுக் குருவி ஒன்று தத்தித் தத்தி நடந்து வந்தது. பொரியரிசியைக் குருவி பார்த்து, "சின்னஞ்சிறு பொரியரிசி, சின்னப் பெண்ணே பொரியரிசி, காலை வீசி நடந்து போகும் காரியம் என்ன பொரியரிசி?" என்று கேட்டது. பொரியரிசி, "சிட்டுக் குருவி, சிட்டுக் குருவி, நான் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன். மனசுக்கேற்ற மாப்பிள்ளையைத் தேடிக்கொண்டு போகிறேன்" என்றது.

சிட்டுக் குருவி கிளுக் கிளுக்கென்று சிரித்துக் கொண்டே, "வெள்ளை வெள்ளைப் பெண்ணரசி, வேடிக்கையான பொரியரிசி, என்னைக் கட்டிக் கொள்ளடி நீ" என்று கேட்டது.

"சே! சே! நீ சின்னஞ்சிறு குருவி; உனக்கும் எனக்கும் ஈடு போதாது" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுப் பொரியரிசி மேலே நடந்து சென்றது.

அப்போது அங்கே அழகான கொண்டை பளபளக்க வாலும் சிறகும் மினுமினுக்க ஒரு சேவற் கோழி ஒய்யார நடை போட்டு எதிரே வந்து கொண்டிருந்தது. தூரத்தில் அது வரும்போதே பொரியரிசி அதைப் பார்த்தது. "ஆஹா! என்ன அழகு! என்ன அழகு!" என்று பார்த்து ஆசைகொண்டது. அந்தக் கோழி பொரியரிசியைப் பார்த்து, "பொரியரிசிக்குட்டி, நீ புறப்பட்டது எங்கே?" என்று கேட்டது. பொரியரிசிக்கு வெட்கம் வந்துவிட்டது. உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டியது. "கண்ணாளா, சிங்காரா, கல்யாணம் பண்ணிக்கொள்ள

வேணும்" என்றது. சொல்லும்போதே அதன் வாய் குழறியது.

"மாப்பிள்ளை எங்கே?" என்று சேவல் கேட்டது. "ஆண்டவன் கொண்டு வந்துவிட்டான்; அந்தக் கணவர் நீர்தாம்" என்று சொல்லி அதற்கு ஒரு நமஸ்காரம் பண்ணிற்று.

கோழி, "அப்படியா! என்னையா கல்யாணம் பண்ணிக்கொள்ளவேணும்? அப்படியானால் என் எதிரே வா" என்றது.

பொரியரிசிக்குச் சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. நாணிக் கோணி நடை போட்டுக்கொண்டு கோழிக்கு முன்னாலே வந்து நின்றது.

கோழி கொஞ்ச நேரம் சும்மா இருந்துவிட்டு லபக்கென்று அந்தப் பொரியரிசியைக் கொத்தி விழுங்கிவிட்டது.

பொரியரிசி அதன் தொண்டைக்குள்ளே போகும்போது, "கடைசியில் இப்படியா முடிந்தது நம் கதி!" என்று வருத்தப்பட்டு அழுதது.

ஆனை மடக்குச் செவி என்றேனே என்றேனே
குதிரை குந்தம் தள்ளி என்றேனே என்றேனே
ஒட்டகம் ஒரு கோணலோ என்றேனே என்றேனே
கழுதை கால்எறிவாய் என்றேனே என்றேனே
குருவி சிட்டுக்குருவி என்றேனே என்றேனே
கோழிக்கு வாழ்க்கைப்பட்டு உயிரைக் கொடுத்தேனே?

என்று அழுதுகொண்டே கோழியின் வயிற்றுக்குள் போய்விட்டது.

(தமிழ் நாட்டு நாடோடிக் கதைகளில் ஒன்று இது.)

17. சிறகறுந்த குருவி

ஒரு வீட்டு இறைவாணத்திலே சிட்டுக் குருவிகள் இரண்டு, ஆணும் பெண்ணுமாய்க் கூடு கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தன. ஆண் குருவி வெளியிலே போய் அலைந்து வேண்டிய சாமான்களையெல்லாம் கொண்டு வந்தது. ஓலைகளையெல்லாம் கிழித்து மூக்கு நுனியிலே கௌவிக்கொண்டு வந்தது. நார் எங்கேயாவது கிடந்தால் எடுத்துக்கொண்டு வந்தது. பிறகு இரண்டு குருவிகளும் சேர்ந்து தங்கள் வீட்டை அலங்காரம் செய்யத் தொடங்கின. எங்கிருந்தோ ஆண் குருவி பஞ்சு சம்பாதித்து வந்தது. அதைக்கொண்டு அந்த இரண்டு சிட்டுக் குருவிகளும் தங்கள் படுக்கையறையை மெத்தென்று அமைத்துக்கொண்டன.

இப்படி இரண்டும் மிகவும் ஒற்றுமையாகக் குடித்தனம் நடத்தி வந்தன. ஆண் குருவி எங்கே போனாலும் தன் மனைவியிடம் சொல்லிக்கொண்டுதான் போகும். மாலைக் காலம் வந்தவுடன் பெண் குருவி தங்கள் வீட்டு வாசலில் நின்றுகொண்டு ஆண் குருவியின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். ஆண் குருவி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான தானியத்தை மூக்கால் கொத்திக்கொண்டு வரும். பெண்குருவி அதை ஆசையோடு வாங்கி வைத்துக்கொள்ளும்.

குருவிகளின் வீட்டில் ஒரு பகுதி பழுது பட்டுவிட்டது. அந்த இடத்தைப் பழுது பார்க்கவேண்டுமென்று ஆண் குருவி எண்ணி அதற்கு வேண்டிய நார் முதலியவற்றைச் சேகரிக்கத் தொடங்கியது.

பனை மரத்தோப்பு ஒன்றிலே போய்ப் பனை ஓலைகளின் ஓரங்களைக் கிழித்துக்கொண்டு வந்தது. வீட்டுக்கு வேண்டிய அளவு கிடைத்துவிடவே அவற்றை வைத்துக் கொண்டு வீட்டை மிக அழகாகச் செப்பனிட்டது.

பனந்தோப்புக்குப் போய்வந்தபோது ஆண் குருவிக்கு ஒரு கெட்ட பழக்கம் உண்டாயிற்று. அந்தத் தோப்பில் பனை மரங்களில் கள் இறக்கி வந்தார்கள். அதற்காக ஒவ்வொரு மரத்திலும் பானையை மாட்டியிருந்தார்கள். ஆண் குருவி அதைப் பார்த்து, "இது என்ன? இங்கே என்ன பானை தொங்குகிறதே!" என்று எண்ணி அருகிலே போயிற்று. உள்ளே கள் சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தது. அதைக் குருவி கொஞ்சம் ருசி பார்த்தது. மிகவும் இனிப்பாக இருந்ததால் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சம் அந்தப் பதநீரைக் குடித்து வந்தது.

வீடெல்லாம் பழுது பார்த்து முடிந்த பிறகு கூடக் குருவி பனந்தோப்புக்கு வந்து போய்க்கொண்டிருந்தது. பெண் குருவிக்குக் கூட இந்த விஷயத்தை அது சொல்ல வில்லை. இளங் கள்ளின் ருசியிலே அது மயங்கிப் போய்ச் சில நாள் நெடுநேரம் பனை மரத்திலே விழுந்து கிடக்கும்.

ஒரு நாள் பதநீரை அளவுக்கு மேல் குடித்துவிட்டுப் பனை மரத்தில் இருந்தபோது ஒருவன் கள்ளிறக்குவதற்காக அந்த மரத்தின் மேல் ஏறினான். குருவியைக் கண்டவுடன் அது கள்ளைக் குடித்திருக்கிறதென்று தெரிந்து கொண்டான். கையில் இருந்த அரிவாளால் அதன் சிறகின் ஓரத்தை அறுத்துவிட்டான்.

ஆண் குருவி காயம் அடைந்தது. பறக்க முடியவில்லை. நடக்கவும் முடியவில்லை. எப்படியோ தத்தித் தத்திக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தது. அப்போது ராத்திரி ஆகிவிட்டது. அது வரவில்லையே என்று பார்த்துப்

பார்த்து ஏங்கிப் போன பெண் குருவி வீட்டுக் கதவை மூடிக்கொண்டு உள்ளே அழுதபடியே படுத்துக்கொண் டிருந்தது.

ஆண் குருவிக்கு, பேசாமல் போய் வீட்டிலே படுக் கையில் விழுந்துவிடவேண்டுமென்று இருந்தது. வீட்டுக்கு வந்து பார்க்கையில் கதவு சாத்தியிருந்தது. வேதனை தாங்கமாட்டாமல் முக்கி முனகிக்கொண்டு கதவைத் தட் டியது.

சாணன் கரிமுடிவான்
சிறகை அறுத்துவிட்டான்
கதவைத் திறவேண்டி
காரணத்தைக் கேளேண்டி
விளக்கை ஏற்றேண்டி
வேதனையைத் தீரேண்டி

என்று தன் மனைவியை அழைத்தது.

உள்ளே படுத்திருந்த பெண் குருவி அவசர அவசர மாக ஓடி வந்து கதவைத் திறந்து ஆண் குருவியை உள்ளே அழைத்துப்போய்ப் படுக்க வைத்தது. அதற்குப் பசியே இல்லை. வயிறு நிறையத்தான் கள் குடித்திருக் கிறதே! பெண் குருவியிடம் மிகவும் வெட்கத்துடனே ஆண் குருவி எல்லாவற்றையும் சொல்லியது. "என்னிடம் சொல்லாமல் இப்படிப் போகலாமா? கெட்ட பழக் கத்தைப் பழக்கிக்கொள்ளலாமா?" என்று பெண்குருவி கேட்டது. ஆண் குருவி என்ன பதில் சொல்லும்?

"அந்தப் பாவி மரத்தில் ஏறும்போதே ஓசை கேட் டிருக்குமே. அதிலிருந்து தெரிந்துகொண்டிருக்கலாதா?"

ஓலை சல சலெங்க
ஓடிவந்தால் ஆகாதோ

பாளை சலசலெங்கப்
பறந்துவந்தால் ஆகாதோ !

என்று சொல்லிப் பெண் குருவி வருந்தியது.

ஆண் குருவிக்கு இரண்டு மூன்று நாட்களில் காயம் ஆறிவிட்டது. பத்து நாளில் அறுந்த சிறகு வளர்ந்துவிட்டது. அதன் பிறகு அது அந்தப் பனந்தோப்பின் பக்கம் எட்டியே பார்க்கிறதில்லை.

(நாடோடியாக வழங்கும் கதைகளில் இதுவும் ஒன்று.)

18. பூனையின் வேஷம்

ஒரே ஒரு பூனை. அதற்கு அதிக வயசாகிவிட்டது. நினைத்தபடி ஓடி ஆடிக் குதிக்க முடியவில்லை. ஆள் அயர்ந்திருக்கும் சமயம் பார்த்துச் சமையல் உள்ளுக்குப் போய் உறியைத் தாவ முடியவில்லை. எலிகளை ஓடிப் பிடிக்க முடியவில்லை. அதன் நகங்களெல்லாம் மழுங்கி விட்டன. கண்கூடச் சரியாகத் தெரியவில்லை.

நினைத்தபடி ஓடியாடித் திரிய முடியாவிட்டாலும் தனக்கு வேண்டிய ஆகாரத்தைத் தேடிக்கொள்ள வேண்டாமோ! நாலு வீடுகளுக்குப்போய் யார் ஏமாந்திருக்கிறார்கள் என்று கவனிக்கவேண்டாமோ? அயர்ந்து மறந்து எலி எங்கேயாவது தலை காட்டினால் புலிபோலப் பாய்ந்து பற்றிக்கொள்ள வேண்டாமோ? ஊஹூம். அந்தக் கிழட்டுப் பூனையால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இருந்த இடத்தில் இருந்தபடியே கையையும் காலையும் நீட்டிச் சோம்பல் முறிக்கத்தான் முடிந்தது. மீசையைத் தடவித் தடவிப் பார்க்கத்தான் முடிந்தது.

இப்படியே இருந்தால் அதற்குச் சாப்பாடு வேண்டாமா? அந்தப் பூனையின் பெண்டாட்டி எத்தனையோ நாளைக்கு முன் செத்துப் போய்விட்டது. அது இருந்தாலும் இரண்டு எலிகளைப் பிடித்துக்கொண்டுவந்து கொடுக்கும். ஒன்றும் செய்ய முடியாத கிழப் பூனைக்கு வேண்டிய உணவு கிடைக்கவில்லை. வீதியிலே எறிந்து கிடந்த எச்சில் இலைகளைத் தேடித் தடவி அங்கே கிடைக்கும் பருக்கைகளைத் தின்று உயிர் வைத்துக்கொண்டிருந்தது. அந்த இலைகளில் கூட ஒன்றும் இருப்பதில்லை. நாய்

கள் இலைகளைச் சுத்தமாக நக்கிவிடும்போது கிழட்டுப் பூனைக்கு என்ன இருக்கப் போகிறது?

இந்த விஷயத்தில் பூனைக்கு ஓர் அபாயம் வேறு இருந்தது. நடு வீதியில் எச்சில் இலையைப் பூனை நக்கிக்கொண்டிருக்கும்போது ஏதாவது நாய் பார்த்துவிட்டால் அதை லேசில் விடுமா? எச்சில் இலைப் பருக்கைக்கு ஆசைப்படப் போய்க் கடைசியில் உயிருக்கே மோசம் வந்துவிடுமே!

எந்த விதமாகவும் தனக்கு வேண்டிய ஆகாரம் கிடைக்காமையால், பூனை கண்ணை மூடிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தது. கடைசியில் ஒரு தந்திரம் செய்யலாம் என்று அது நினைத்தது. மிகவும் நல்ல பிராணியைப்போல் பாசாங்கு செய்தால் எலிகள் தன்னிடம் பயமில்லாமல் வரும் என எண்ணியது. அதுமுதல் ஓரிடத்தில் அசையாமல் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அதைப் பார்த்தால் ஒரு வயசான சந்நியாசி யோகம் செய்வது போல இருந்தது.

உட்கார்ந்தபடியே தூங்குவது போல அது பாசாங்கு செய்தது. அடிக்கடி வாயைத் திறந்து கொட்டாவி விட்டது. நடு நடுவில் தூக்கத்தால் சாய்வது போலப் பாசாங்கு செய்தது.

இப்படிச் சிலநாள் அந்தப் பூனை இருப்பதை எலிகள் பார்த்தன. "இதென்ன ஆச்சரியமாக இருக்கிறதே! இந்தப் பூனை பேசாமல் இப்படி உட்கார்ந்திருக்கிறதே!" என்று எண்ணிச் சின்னஞ்சிறிய எலிகள் தலையை வளைக்கு வெளியே நீட்டி நீட்டிப் பார்த்தன. உள்ளே இருந்த பெரிய எலிகள், "அங்கே என்ன பார்க்கிறீர்கள்? ஜாக்கிரதை!" என்று அதட்டின. குஞ்சு எலிகள் அந்த வார்த்தையைச் சட்டை செய்யாமல் வெளியே வந்து பூனையை நன்முகப் பார்த்தன.

பூனை தூங்குவதுபோல இருந்தாலும் எலிக் குஞ்சுகள் வளையை விட்டு வெளியே வருவதைக் கடைக்கண்ணால் பார்த்தது. அப்பொழுது அதன் நாக்கில் ஜலம் ஊறியது. அப்படியே பாய்ந்து 'லபக்'கென்று பிடித்துக் கொண்டு அந்தக் குஞ்சுகளை விழுங்கிவிடவேண்டுமென்ற ஆவல் அதற்கு உண்டாயிற்று. அதற்குள் அவசரப்பட்டு அப்படிச் செய்தால், தன் வேஷம் வெளியாகிவிடுமென்று அது பிறகு நினைத்தது. கொஞ்சம் பொறுமையோடு காத்திருந்தால் எலிகள் எல்லாம் தன்னிடம் பயமில்லாமல் வெளியே வருமென்று அது எதிர்பார்த்தது. அந்தக் காலத்தில் தன் ஆவல் தீர எலிகளைப் பிடித்துத் தின்னலாம் என்ற ஆசையால் அது அப்போதைக்கு ஒன்றும் செய்யாமல் இருந்தது.

எலிக் குஞ்சுகளெல்லாம் வளைக்கு வெளியே வந்து கொம்மாளம் அடித்து விளையாடின. அம்மா அப்பா எவ்வளவு வைதாலும் கவனிக்காமல் அவை பயமே இல்லாமல் வெளியே வந்து உலாவின. சில துணிச்சலுள்ள எலிக் குஞ்சுகள் பூனையைப் பார்த்துச் சிரித்தன. ஒரு சின்ன எலி, "இந்தப் பூனை அசடு! இதற்குக் கண் தெரியவில்லை போல இருக்கிறது. அம்மா அப்பா வையாவிட்டால் நான் ஓடிப்போய் அதன் கால் விரலைக் கடித்துவிட்டு வருவேன்" என்று வீரம் பேசியது.

"நான் அதன் முதுகிலே தாவி உட்கார்ந்து கொள்வேன். அது ஆன மட்டும் என்னைப் பிடிக்கப் பார்த்தாலும் கைக்கு அகப்பட மாட்டேன்" என்று உரக்கச் சொல்லியது ஒரு குஞ்சு.

"நான் அதன் மீசையைப் பிடித்து இழுத்துவிட்டு ஓடி வருவேன்" என்று சொல்லிச் சிரித்தது ஓர் எலி.

இந்தப் பேச்செல்லாம் கிழட்டுப் பூனையின் காதிலே விழுந்தன. அதற்கு உள்ளுக்குள்ளே கோபம் பொங்கி

வந்தது. ஆனாலும் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் செவிடுபோல் அசையாமல் உட்கார்ந்திருந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு எலிக் குஞ்சுகளுக்கு இன்னும் அதிகமான தைரியம் உண்டாயிற்று. மெல்ல மெல்லப் பூனைக்கு அருகில் போகத் தொடங்கின. அந்தக் குட்டி எலிகளுள் ஒன்றுமட்டும் இந்தச் சமாசாரத்தை அம்மாவிடம் போய்ச் சொல்லிவிட்டது. "ஐயையோ! மோசம் போய்விடாதீர்கள். பூனையை நம்பக்கூடாது. என்றைக்காவது ஒருநாள் அது உங்களை விழுங்கிவிடும்" என்று எச்சரிக்கை செய்தது.

அதையும் கேட்காமல் எலிக்குஞ்சுகள் வர வரப் பூனைக்குப் பக்கத்தில் போய் விளையாட ஆரம்பித்தன. பத்து எலிகள் முதலில் வந்தன; பிறகு இருபது எலிகள் வந்தன. எலிகளின் கூட்டம் அதிகமாகவே பூனைக்கு ஆசையை அடக்க முடியவில்லை. மெதுவாக ஒருவருக்கும் தெரியாமல் கையை நீட்டித் தன் பக்கத்தில் வந்த ஓர் எலிக் குஞ்சை எடுத்து வாயில் போட்டுக்கொண்டது. கூட்டமாக இருந்தபடியால் அந்த எலி காணமற்போன விஷயம் யாருக்கும் தெரியவில்லை.

மறுநாளும் கிழட்டுப் பூனை இப்படியே செய்தது. ஒரு வாரம் இப்படிச் செய்து செய்து பத்து எலிகளுக்கு மேல் பூனை சாப்பிட்டுவிட்டது. அப்போதுதான் தங்கள் கூட்டத்தில் சில குஞ்சுகள் குறைந்த சமாசாரம் எலிகளுக்குத் தெரிய வந்தது. அந்த எலிகளின் அம்மா, அப்பா எல்லோரும், "எங்கள் குழந்தை எங்கே? எங்கள் குழந்தை எங்கே?" என்று கேட்கத் தொடங்கினார்கள்.

"ஐயையோ! மோசம் வந்துவிட்டதே! நாங்கள் அப்பொழுதே சொன்னோமே; கேட்கவில்லையே!" என்று பெரிய எலிகள் தலையில் அடித்துக்கொண்டன.

"இனிமேல் யாரும் வளையை விட்டு வெளியிலே போகக் கூடாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டன.

தங்கள் குழந்தைகளைத் தின்று ஏப்பம் விட்ட கிழட்டுப் பூனை எப்படியிருக்கிறதென்று பார்க்கச் சில பெரிய எலிகள் வெளியிலே வந்தன. பூனையை அணுகிப் பார்த்தன. அது ஜபம் செய்வதுபோல வாயை முணு முணுத்துக் கொண்டிருந்தது. கொட்டாவி விட்டது. அதைப் பார்த்த எலிகள்,

"பூனையாரே பூனையாரே!
கொட்டாவி விடுகிறீர்; குறு குறு என்கிறீர்;
கொட்டை நூற்று உண்டால் ஆகாதோ?"

என்று கேட்டன.

என்றும் இல்லாதபடி எலிகள் தன்னைக் கேள்வி கேட்பது தெரிந்த பூனை, கண் தெரியாததைப்போலப் பாசாங்கு செய்தது. "என் கண்மணிகளே, என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் காதில் விழவில்லையே! நீங்கள் பலகாலம் வாழ்வீர்கள்!" என்று நடுங்கிய குரலோடு பூனை சொல்லியது. அது பாசாங்கு செய்கிறதென்பது எலிகளுக்கு நன்றாகத் தெரியும் அல்லவா?

"ஓஹோ! பக்கத்திலேயா வரச் சொல்கிறீர்? பக்கத்தில் வந்தால் என்ன ஆகும் என்று எங்களுக்குத் தெரியுமே!

அப்பக் கதுப்பீரே! சப்பை மூக்கீரே!
பச்சைக் கண்ணீரே! கிட்டவந்தக்கால்
கப்பிக் கொள்வீரே!"

என்று உரக்கப் பாடிக்கொண்டு எல்லா எலிகளும் ஓடி வளைக்குள் புகுந்துகொண்டன.

பூனையின் வேஷம் பலிக்கவில்லை.

19. பொன் நங்கை

ஓணான்களுக்கும் ஓந்திகளுக்கும் ராஜாவாக ஒரு ஓணான் பூந்தோட்டத்தின் வேலியிலே வாழ்ந்து வந்தது. ராஜாவாக இருந்தால் வேலிகளாகிய ராஜ்யம் மாத்திரம் இருந்தால் போதுமா? பல மனைவிகள் இருந்தால்தான் ராஜாவுக்குப் பெருமை. ஆகவே ஓணானுக்கு நாலு மனைவிகள் இருந்தார்கள். காக்கைப் பெண் ஒருத்தி, கொக்கு நங்கை ஒருத்தி, வண்டு மங்கை ஒருத்தி, பொன் நங்கை என்ற பெயருள்ள நண்டுமகள் ஒருத்தி, இப்படியாக நாலு மனைவிகளோடு ஓணான் கூடி மகிழ்ந்து குலாவி வாழ்ந்தது. நாலு பேரோடும் சேர்ந்து ஓணான் வாழ்ந்தால் அவர்களுக்குள்ளே சக்களத்திப் போராட்டம் உண்டாகும். ஆகையால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீடு கட்டிக் கொடுத்து ஒரு மாதம் ஒருத்தி வீட்டில் இருப்பது, அடுத்த மாதம் மற்றொருத்தி வீட்டில் இருப்பது என்று முறை வைத்துக்கொண்டு ஓணான் இருந்து வந்தது. சண்டையில்லாமல் அந்த நான்கு மனைவிகளோடும் அது வாழ்ந்து வந்தது.

இப்படியிருக்கையில் பொன் நங்கையாகிய நண்டு ராணியின் வயிற்றில் கர்ப்பம் உண்டாயிற்று. அப்பொழுதே அதற்குக் கர்வமும் உண்டாயிற்று. மற்றவர்களெல்லாம் மலட்டுப் பிணங்கள் என்று குறை கூறியது. கர்ப்பம் உண்டாகி ஏழு மாதம் ஆனவுடன் நண்டு தன் பிறந்தகத்துக்குப் போய்விட்டது. அதன் பிறந்தகம் கடற்கரையில் இருந்தது. ஆயிரம் வளைகள் அடங்கிய நண்டுப் பட்டணத்துக்கு ராஜாவாகிய நண்டு ராஜாவின் பெண் பொன் நங்கை. தன் பெண்ணுக்குக் குழந்தை

பிறக்கப்போகிறது என்ற சந்தோஷத்தால் நண்டு ராஜா பொன் நங்கைக்கு வேண்டிய தின்பண்டங்களையெல்லாம் வாங்கிக் கொடுத்தது. பொன் நங்கையின் தாயாகிய நண்டரசி வாய்க்கு வேண்டிய பக்ஷணங்களைப் பண்ணி அளித்தது.

கர்ப்பம் முதிர்ந்து பொன் நங்கை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றது. இந்தச் சந்தோஷ சமாசாரத்தை ஒரு வண்ணான் மூலமாக நண்டு ராஜா ஒன்றாகிய தன் மருமகனுக்குச் சொல்லி அனுப்பியது. அதைக் கேட்டு ஒன்றும் காக்கை, கொக்கு, வண்டு ஆகிய சக்களத்திகளும் மிகவும் மகிழ்ச்சியை அடைந்தார்கள். யாராவது ஒருவர் போய்ப் பார்த்தால் போதுமென்று கருதி, யார் போவதென்று ஆலோசித்தார்கள்.

கடைசியில் குழந்தைக்கு ஏழாம் நாள் காப்பிடும் பொழுது வேண்டிய ஆபரணங்களுடன் வண்டு போய் வருவதென்று தீர்மானித்தார்கள். அப்படியே வண்டானது காப்பும் அரை வடமும், சங்கிலியும் மோதிரமும், நெளிவும் பண்ணிக்கொண்டு, கட்டெறும்பின் தலையிலே தேங்காயும் சர்க்கரையும் ஈர்க்குக் குழலிலே இரு நாழி எண்ணெயும் எடுத்துக்கொண்டு சென்றது.

நண்டு ராஜாவின் மாளிகைக்குச் சென்று பொன் நங்கைக்கு அருகில் போகும்போது அது வாவென்றுகூடச் சொல்லவில்லை. வண்டு, "குழந்தை சௌக்கியமாக இருக்கிறானா?" என்று விசாரிக்கவே, நண்டு பதில் சொல்லாமல் அதை அவமானம் செய்து அனுப்பிவிட்டது.

விக்கி விக்கி அழுதுகொண்டே வண்டு தன் வீட்டை அடைந்தது. குழந்தையைப் பற்றிக் கேட்கவேண்டு என்ற ஆவலோடு காக்கை வந்து, "தங்கையே, என்ன

சமாசாரம்? ஏன் இப்படி இருக்கிறாய்?" என்று கேட்டது. வண்டு சொல்ல ஆரம்பித்தது:

ஆக்கிப் பொரித்து அடுக்கிட்டு மூடிப்
பொன் தூணிலே சாய்ந்து இருந்தேன்
"பொன் நங்கை பிள்ளை பெற்றாள்"
என்று சொன்னான் சிறு வண்ணான்
கால் பணத்துக்குக் கைக்கட்டுக் காப்பு
அரைப் பணத்துக்கு அரைவடம் சங்கிலி
முக்கால் பணத்துக்கு மோதிரம் நெளிவு
கட்டெறும்பின் தலையிலே காப்பரிசிக்கு அரிசி
தேனெறும்பின் தலையிலே தேங்காயும் சர்க்கரையும்
ஈர்க்குக் குழலிலே இரு நாழி எண்ணெயும் கொண்டுபோனேன்
சக்களத்தி தலைநிமிர்ந்து பார்க்கவில்லை
வாய் திறந்து வாவென்று சொல்லவில்லை
நானாக, "நண்டே பெருங்காலி தம்பி பிறந்தானா?
சுகமா இருக்கிறானா? அழுது கிடக்கிறானா?
குழி தோண்டும் கையாலே
பால் தாங்கிக் குடிக்கிறானா?"

என்று கேட்டேன். அதற்கு அவள் என்ன சொன்னாள் தெரியுமா?

"தும்பி, தும்பி, மரத்தைத் துளைப்பாய்,
காட்டில் வாழும் கள்ளன் தங்காய்,
கொண்டுவந்தது எல்லாம் வைத்துவிட்டுக்
குந்தாணி நெல்லையும் குத்திவிட்டு
முறம் கிடக்குது, மொழுகிவிட்டு
முற்றம் கிடக்குது தூத்துவிட்டு

கலம் கிடக்குது தேய்த்துவிட்டு,
கலம் சாமை கிடக்குது குத்திவிட்டு
வாசலாலே வந்தால் கொல்லையாலே போ!
கொல்லையாலே வந்தால் வாசலாலே போ!''

என்று சொன்னான்.

இப்படி, தான் போய்வந்த கதையைச் சொல்லி அழுதது வண்டு. இதைக் கேட்ட காக்கைக்கும் துக்கம் துக்கமாக வந்தது. தன்னைப் பற்றிப் பொன் நங்கை முன்னொரு சமயம் இழிவாகப் பேசின செய்தி அதற்கு அப்போது ஞாபகத்துக்கு வந்தது. உடனே வண்டைப் பார்த்துக் காக்கை சொல்லத் தொடங்கியது:

"அவள் சொல்லுவள் சொல்லுவள் பொன் நங்கை, அவள்
சொல்லாள் என்று எண்ணவும் வேண்டாம்
காக்கையின் காலுக்குக் கட்டி வடமும் பீலியும்
எதற்கு என்று கேட்டவள் அல்லவோ?
அவள், சொல்லுவள் சொல்லுவள் பொன் நங்கை!"

அப்பொழுது ஒணானின் இரண்டாவது மனைவியாகிய கொக்கு அங்கே வந்து வண்டை விசாரித்தது. அதனிடமும் வண்டு நண்டு ராணி செய்த அவமானத்தைச் சொல்லியது. கொக்குக்கும் பழைய சமாசாரம் ஒன்று ஞாபகம் வந்தது. அது உடனே சொல்லத்தொடங்கியது:

"சொல்லுவள் சொல்லுவள் பொன் நங்கை அவள்,
சொல்லாள் என்று எண்ணவும் வேண்டாம்
கொக்கின் கழுத்துக்குத் தட்டுக் காறை
எதற்கு என்று கேட்டவளோ இல்லையோ
அவள், சொல்லுவள் சொல்லுவள் பொன்நங்கை."

இப்படி மூன்று பேரும் கூடியிருப்பதைப் பார்த்து ஓணான் அங்கே வந்தது. அந்த மூன்றும் மூஞ்சியைத் தொங்கப்போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து, "என்ன சமாசாரம்?" என்று கேட்டது. வண்டுக்குத் துக்கம் தாங்கவில்லை. அழுதுகொண்டே தான் பட்ட அவமானத்தைச் சொல்லி முடித்தது.

ஓணான், "அடி பைத்தியக்காரி, இதற்காக அழலாமா? அந்தக் கர்வம் பிடித்தவள் அப்படித்தான் சொல்லுவாள். அவள் என்னையே லட்சியம் செய்யாதவள் ஆயிற்றே!" என்று கூறி மேலும் ஒரு பழைய செய்தியை எடுத்துச் சொல்லத் தொடங்கியது.

"சொல்லுவள் சொல்லுவள் பொன் நங்கை அவள்
சொல்லாள் என்று எண்ணவும் வேண்டாம்
நான், பச்சைப் பல்லக்கின் மேலே ஏறியே
பார் வேட்டைக்குப் போகும் பொழுது
'ஓந்தி ஒரு குடம் தண்ணீர் கொண்டுவா'
என்று சொன்னவளே அவள்!
'ஓணன் தலைக்குச் சந்திர சாவித் தலைப்பாகை
எதற்கு?' என்று கேட்டவளே அவள்.
அவள் சொல்லுவள் சொல்லுவள் பொன் நங்கை!"

என்று அது தன் குறையை எடுத்துக் கூறியது.

தன் புருஷனுக்குக் கூட அவளிடம் கோபம் இருக்கிறது என்பதை உணர்ந்த வண்டுக்குக் கொஞ்சம் மனசு சமாதானம் ஆயிற்று. 'இனிமேல் அவளுக்கு இங்கே கௌரவம் கிடைக்காது' என்று எண்ணிக்கொண்டு சந்தோஷம் அடைந்தது.

[நாடோடிக் கதைகளில் ஒன்று இது.]

20. சுண்டெலி ராஜன் கல்யாணம்

"வீட்டைக் கட்டிப்பார், கல்யாணத்தைப் பண்ணிப்பார்" என்று தமிழர்கள் ஒரு பழமொழி சொல்லிக் கொள்கிறார்கள். இரண்டு காரியமும் வரவர வளர்ந்து பெருகும். நினைத்த திட்டத்துக்குள் அடங்குவதில்லையென்ற கருத்தை அந்தப் பழமொழியால் குறிப்பிடுகிறார்கள். விட்டைக் கட்டும் விஷயத்திலாவது, கொஞ்சங் கொஞ்சமாக வேலை செய்துகொண்டே போகலாம்; நடுவிலே வேலையை நிறுத்தி வைக்கலாம். மாசக் கணக்காய், வேலை நடந்து நிறைவேறின வீடுகளும் உண்டு.

கல்யாணம் அப்படி இல்லையே! குறிப்பிட்ட முகூர்த்தத்துக்கு முன்னாலே செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் செய்தாக வேண்டும். எவ்வளவு சீக்கிரத்தில் முகூர்த்தம் வைக்கிறார்களோ, அவ்வளவுக்குப் பொறுப்பும் வேலைகளும் அதிகமாகத்தான் இருக்கும்.

கல்யாண ஏற்பாடுகள் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்றபடி வித்தியாசப்படும். கோடீஸ்வரன் வீட்டுக் கல்யாணத்துக்குக் கோடிப்பதென்றால். அது ஒரு விதந் தான்; ஏழை வீட்டுக் கல்யாணம் என்றால் அது வேறு விதந்தான். ஆனால் என்ன? கல்யாணம் என்றால் எல்லோருமே பல நாட்களுக்கு முன்பிருந்தே ஏற்பாடு செய்கிறார்கள்; சுறுசுறுப்பாக நடமாடுகிறார்கள்; பல பேருடன் பேசுகிறார்கள். கல்யாணம் நிறைவேறினவுடன் தொண்டை கட்டிப் போகிறது; உடம்பில் ஓச்சல் உண்டாகிறது; கணக்கு வழக்கைப் பார்க்கிற போது தலை சுற்றுகிறது!

ஊர்வலம், மேளம், கச்சேரி, விருந்து முதலியவைகள் இருந்தால்தான் கல்யாணம் சிறக்கும். பிள்ளை பெண் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டால் போதுமா? அது போதுமென்றிருந்தால் கல்யாணத்திற்காக இவ்வளவு தடபுடல் வேண்டியதே இல்லை. பெண்ணும் பிள்ளையும் என்ன செய்கிறார்கள், அவர்களுக்கு என்ன வேண்டும் என்ற கவலைக்கு இடமில்லை. சம்பந்திகளுக்கு உபசாரம் சரியாய் நடந்ததா என்ற கவலைதான் பெரிது. அதை விடச் சம்பந்திகளின் சிநேகிதர்களைச் சரியானபடி கவனித்தார்களா என்பதிலே அதிகக் கவலை இருக்கவேண்டியிருக்கிறது. சம்பந்தி வழக்கமாகப் பாதரக்ஷை வாங்கும் கடைக்கார முதலாளி தம் காரில் வந்திருப்பார். அந்தக் காரின் சாரதியும் உடன் வந்திருப்பான். முதலாளியைக் கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் சாரதியைக் கவனித்து உபசாரம் செய்வதில் தவறக்கூடாது. இல்லாவிட்டால் ராமாயணத்தில் கூனி வத்தி வைத்ததுபோல் அந்த 'டிரைவர்' ஏதாவது எஜமானிடம் சொல்லுவான்; எஜமான் சம்பந்தியிடம் சொல்லுவார். சம்பந்திக்குக் கோபம் வந்துவிடும்!

ஆகவே, நண்பர்களை அழைப்பதிலும், வந்தவர்களை உபசரித்துச் சந்தோஷத்தோடு போய் வரும்படி அனுப்புவதுந்தான் கல்யாணத்தை மணக்க வைக்கும் காரியங்கள்; கல்யாணச் செலவுகூட இந்த வகையில்தான் ஆகிறது. பாட்டுக் கச்சேரி, ஊர்வலமெல்லாம் யாருக்காக? கூட்டம் கூடி மதிப்புரை சொல்லுகிறார்கள். அந்த நண்பர்கள் சமாஜத்தை உத்தேசித்தே.

பணக்காரர் வீடுகளில் எல்லாவற்றிற்கும் தனித்தனியே ஆட்களை நியமித்துக் கவனிக்கச் சொல்லுவார்கள். ஏழைகள் வீட்டில் உறவினர்களும் நண்பர்களும் தாங்களே முன் வந்து ஒவ்வொரு வேலையையும் ஏற்றுக்

கொள்ளுகிறார்கள். இவையெல்லாம் மனித உலகத்துக் கல்யாண நிகழ்ச்சி.

குழந்தைகளுக்குப் பிராணி யுலகத்துக் கதைகளில் மோகம் அதிகம். ஈசாப்புக் கதைகளும், பஞ்ச தந்திரக் கதைகளும் பிராணி உலகத்தைத் தான் குழந்தைகளுக்குக் காட்டுகின்றன. அந்தக் கதைகளிலே வரும் பாத்திரங்கள் மனிதர்களின் குணம் படைத்தனவாக இருந்தாலும் உருவத்தில் விலங்குகளும் பறவைகளுமாகவே இருக்கின்றன. சிட்டுக் குருவி, காக்காய், நாய், எலி முதலிய பிராணிகளைப்பற்றிப் பாட்டி கதை சொல்ல ஆரம்பித்து விட்டால், குழந்தைகள் உத்ஸாகமாக அவளைச் சுற்றிக் கொண்டு வாயைத் திறந்தபடியே கேட்கத் தொடங்கி விடுகிறார்கள். நடு நடுவே பாட்டி அபிநயங்களோடு கதையை விவரிக்கும்போது குழந்தைகளும் தம்மை அறியாமலே கதாபாத்திரங்களாக மாறி அபிநயம் பிடிப்பார்கள். கன்றுக்குட்டி கதையில் துள்ளி ஓடும். கேட்கும் குழந்தைகளும் துள்ளிக் குதிப்பார்கள். எலி சுவரைப் பிறாண்டும்; குழந்தைகளின் கைகள் பிறாண்டுவதைப் போல நெளியும்.

பாட்டி சொல்லும் கதைகளில் ' சுண்டெலி ராஜன் கல்யாணம்' ஒன்று. சுண்டெலி உலகத்திலே கல்யாண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் அழைப்பு வருகிறது. பல்லாக்கு ஊர்வலம் நடக்கிறது. முகூர்த்தக்கால் நடுகிறார்கள். வருகிறவர்களைக் கம்பளம் விரித்து வரவேற்கிறார்கள். நாகசுரக் கச்சேரி நடக்கிறது. பெண்ணை அலங்கரிக்கிறார்கள். இப்படிச் சுண்டெலி ராணிக்கும் சுண்டெலி ராஜனுக்கும் கல்யாணம் நடக்கிறது. ஏற்பாடுகளெல்லாம் சுண்டெலிகள் சேர்ந்துகொண்டே செய்கின்றன. அந்தக் கல்யாணத்தில் நமக்கும் சாப்பாடு உண்டு. வெற்றிலை

பாக்கு, சந்தனங் குங்குமமும் உண்டு. "சத்திரத்திலே சாப்பாடு; வெற்றிலை பாக்குக் கடையிலே; சந்தனங் குங்குமம் கோவிலிலே."—சுண்டெலி ராஜன் அரண்மனையிலே சாப்பாடு சாப்பிட நமக்கு முடியுமா என்ன?

கதையைப் பாட்டி சொல்கிருள்; கேளுங்கள்:

சுண்டெலி ராஜனுக்குக் கல்யாணமாம்
சோளத் தட்டைப் பல்லாக்கில் ஊர்கோலமாம்
ஒரு எலி ஓடிப்போய் ஊருக்கெல்லாம் சொன்னதாம்
ரெண்டெலி சேர்ந்துகொண்டு ரெத்னகம்பளம் விரிச்சுதாம்
மூனெலி சேர்ந்துகொண்டு முகூர்த்தக்கால் நட்டதாம்
நாலெலி சேர்ந்துகொண்டு நாகசுரம் வாசிச்சதாம்
அஞ்செலி சேர்ந்துகொண்டு மஞ்சள் அரைச்சதாம்
ஆறெலி சேர்ந்துகொண்டு கூறை உடுத்தித்தாம்
ஏழெலி சேர்ந்துகொண்டு தாழம்பூச் சூட்டித்தாம்
எட்டெலி சேர்ந்துகொண்டு கொட்டகை ஜோடித்ததாம்
ஒன்பதெலி சேர்ந்துகொண்டு உல்லாஸமாய்ப் பாடித்தாம்
பத்தெலி சேர்ந்துகொண்டு பல்லாக்குத் தூக்கித்தாம்
சுண்டெலி ராஜன் கல்யாணத்தில் வந்தவாளுக்கு—
சத்திரத்தில் சாப்பாடு
வெற்றிலைபாக்குக் கடையிலே
சந்தனங் குங்குமம் கோவிலிலே
சுண்டெலி ராஜனுக்குக் கல்யாணமாம்!

★

பிடியும் களிறும்

சங்கநூற் காட்சிகளின் நாலாவது வெளியீடு

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

விலை ரூ. 3

உலகமே காதல் மயமாக இருக்கிறது. காதல் இல்லாவிட்டால் உலகத்தில் வாழ்க்கையே இல்லை. ஆம், அதோ பாலை வனத்தில் அத்தனை வெம்மைக்கு இடையிலும் காதலின் அற்புத சக்தி விளங்குகிறது. யானையும் மானும் புறவும் பாலையிலும் காதலுணர்ச்சியால் தியாகம் செய்கின்றன. இத்தகைய காட்சிகளைக் கலித் தொகையிலிருந்து எடுத்து இனிய எளிய நடையில் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

*

மனை விளக்கு ரூ. 3 0 0

குறிஞ்சித் தேன் ரூ. 3 0 0

ஒவ்வொன்றிலும் பரிசுப் பதிப்பு ரூ. 5

சங்கநூற் காட்சிகள் எட்டுக்கும் மொத்தமாக ரூ. 20 அனுப்புபவர்களுக்குத் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

*

அமுத நிலையம் லிமிடெட்

தேனாம்பேட்டை :: சென்னை-18.

கி. வா. ஜ. நூல்கள்

கஞ்சியிலும் இன்பம்: 1 8 0

கிராமியக் கவிதைகளான நாடோடிப் பாடல்கள் இப்போது பல ஆண்டுகளாக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து வருகின்றன. இதில் பதினொன்று பாடல்கள் உள்ளன. இவற்றிற்கு ஆசிரியர் அழகான விளக்கம் தந்திருக்கிறார். இவ்விளக்கங்களின் உதவியால் பாடல்களை மேலும் அதிகமாகச் சுவைக்க முடிகிறது. தமிழரின் தனிப் பண்புகளும் இயல்புகளும் இதில் நன்கு வெளிப்படுகின்றன.

எல்லாம் தமிழ்: 1 8 0

குறுந்தொகை, புறநானூறு, கொங்கு மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம் முதலிய நூல்களிலுள்ள குறிப்புகள், செய்திகள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு தமிழின் ஆற்றலைத் தெளிவாக எடுத்துக் காட்டும் அற்புதமான பத்துச் சிறு கதைகள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. தமிழ் நாட்டைப் பற்றிய அறிவும் தமிழ் உணர்ச்சியும் அபிவிருத்தியடைய உதவும் சிறந்த நூல்.

பேசாத பேச்சு: 2 8 0

தமிழ் இலக்கியத்தில் புராணம், காவியம், இதிகாசம், சமயம், ஓவியம், சிற்பம், சங்கீதம், நாட்டியம் முதலிய பல துறைகளைச் சார்ந்த விஷயங்களைப் பற்றிய குறிப்புகள் காண்கின்றன. ஸ்ரீ கி. வா. ஜ. அவர்கள் மேலே குறித்த எத்துறையைச் சார்ந்த விஷயங்களையும் அழகுற விளக்கும் ஆற்றல் உடையவர்கள். இந்த ஆற்றலைப் 'பேசாத பேச்சு' என்ற இந்த நூலில் காண்கிறோம். கட்டுரைகள் யாவும் பன்முறை படித்து அநுபவிக்க வேண்டியவை.

அமுத நிலையம் லிமிடெட்

தேனாம்பேட்டை :: சென்னை - 18

சங்கநூற் காட்சிகள்

ஆசிரியர் : கி. வா. ஜகந்நாதன்

★

மனை விளக்கு : 3—0—0

"ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பண்டைத் தமிழ் மக்களின் காதல் வாழ்க்கையை நம் கண்முன் நடப்பது போல் கதை யுருவமாகக் காட்டுவதில் புகழ் பெற்றவர். அற்புதமான பழைய அணிகலன்களை மெருகிட்டு, உள்ளத்தைக் கவரும் வண்ணம் ஒரு பொருட்காட்சிச் சாலையில் வைத்தது போலும் இப் புத்தகம்."

—சுதேசமித்திரன், 21-1-52

குறிஞ்சித் தேன் : 3—0—0

"உள்ளத்தைக் கவரும் வண்ணம் ஒரு புது வழியைப் பின் பற்றி ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இப் புத்தகத்தை எழுதியுள்ளார். கதை சொல்வது போல, பின்னால் வரப்போகும் செய்யுட் பொருளை விரிவாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறும் சுவை பட எடுத்துக் கூறுகிறார். தமிழ்ச் சங்க நூல்களைக் கண்டு பயப் படாமல் அவற்றைக் கற்பதற்கு இது ஒரு தூண்டு கோலாக உதவும்."

—தினமணி, 8-3-52

தாமரைப் பொய்கை : 3—0—0

சங்க நூல்களில் ஒன்றாகிய ஐங்குறு நூற்றிலுள்ள அழகிய காதற் காட்சிகளை இப் புத்தகத்தில் காணலாம். சங்கப் புலவர்களின் சொற் செட்டையும், கவிச் சிறப்பையும், அழகை உணர்ந்து பாராட்டும் திறத்தையும், உள்ளத்தின் ஆழத்தில் உள்ள உணர்ச்சிகளை உணர்ந்து கவிதையிலே காட்டும் ஆற்றலையும் இந் நூலிலுள்ள விளக்கங்கள் தெளிவாக்குகின்றன.

ஒவ்வொன்றிலும் பரிசுப் பதிப்பு ரூ. 5

★

அமுத நிலையம் லிமிடெட்

தேனாம்பேட்டை :: சென்னை - 18

WRAPPER PRINTED BY NATIONAL ART PRESS MADRAS-18